# “என்னுடைய சீடர்கள்...” படிக்க வேண்டிய மிக முக்கியமான உபதேசம்




**தன்னைத் தான் அறிதல் – இராமாயணத்தில் உள்ள மூலம்**

தசரதனின் கருவிற்குள்...

1.எத்தனையோ உடல்கள் இருப்பினும் பல கோடித் தீமைகளை வென்றிடும் உணர்வுகள் பெற்று

2.அந்த மனைவி என்ற நிலை வரும் போது அதற்குப் பிறந்தவன் தான் இராமன்.

அதே சமயத்தில் உறுதுணையாக இருந்து தன்னைக் காத்திடும் தன்மை தான் லட்சுமணன். ஒரு தாய்க்கு (சுமித்ரை) இரண்டு குழந்தைகள் பிறக்கின்றது.

முதலில் தசரதன் விஷ்ணுவை நோக்கித் தவம் இருந்தான். தூதுவனை அனுப்பிப் பாயாசத்தைக் கொடுத்தான். முதல் நிலையை இராமனின் தாயாருக்குக் கொடுத்தார். இரண்டாவது பரதனின் தாயாருக்கு கொடுத்த்து. மூன்றாவது லட்சுமணனின் தாயாருக்கு கொடுத்தது… தொக்கியுள்ள மிச்சத்தை மூன்றாவது மனைவிக்கே கொடுக்கின்றான்… சத்துருக்கன்.

இங்கே லட்சுமணன்…! லட்சுமணன் என்றால் என்ன…? சூரியன் தன்னுடைய பாதரசத்தால் தாக்கப்படும் பொழுது அதிலே விஷங்கள் பிரிகின்றது… வெப்பமாகின்றது… காந்தமாகின்றது.

காந்தமானாலும்
1.விஷம் பிரிந்து செல்வதை இந்தக் காந்தம் இழுத்துக் கவர்ந்து வைத்துக் கொள்கின்றது.
2.அது தான் லட்சுமணா என்று காரணப் பெயரை வைக்கின்றார்கள்.

ஆக எதனின் உணர்வின் தன்மை கவர்ந்து கொள்கின்றதோ சத்துருக்களை… சகோதரன் என்ற நிலை வரப்படும் பொழுது
1.சத்துருக்கன் தீமைகள் வராதபடி பரதனுக்கும்…
2.லட்சுமணன் இராமனுக்கு உதவியாக இருப்பதாகவும் காட்டுகிறார்கள்.

ஏனென்றால் விஷம் இயக்கச் சக்தி அது தான் லட்சுமணா. காந்தம் கவர்ந்து கொண்டால்…
1.எந்தக் குணத்தின் தன்மை கொண்டு கவர்ந்து கொண்டதோ அதனின் இயக்கச் சக்தி
2ஆக… காந்தம் கவர்ந்து வெப்பத்துடன் எது சேர்ந்ததோ அதனுடன் சேர்த்து உருவாக்கும் சக்தி என்ற நிலைகளை
3.இப்படித் தனித்தன்மையாகப் பிரித்துக் கொண்டு வருகின்றார்கள்.

விஷ்ணுவை நோக்கித் தவம் என்று வரும் பொழுது உயிர் விஷ்ணுவாகின்றது. அவன் தவத்தின் தன்மை கொண்டு புத்திர பாக்கியம் வேண்டும் என்று

எண்ணினான். அதன் உணர்வின் தன்மை கொண்டு தன் உடலில் பல நிலைகள் ஆகின்றது.

சூரியனோ தனக்குள் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை கொண்டு தனக்குள் பாதரசமாக மாற்றுகின்றது. மனிதன் புழுவில் இருந்து மிருகம் வரையிலும் அதனதன் எடுத்துக் கொண்ட உணர்வுக்கொப்ப அதன் கருத்தன்மை "விந்து தன்மை..." அடைகின்றது.

அந்த விந்தின் தன்மை அடைந்த பின் தான் ஒரு பூச்சியைக் கொன்று தின்றாலும்... அதன் உணர்வின் தன்மை கருவாக்கப்பட்டு அணுத் தன்மை கருவாக மாறுகின்றது. இதைப் போலத் தான் மனிதனின் நிலை.

நன்றாகச் சிந்தனை செய்து பாருங்கள். மெய் ஞானிகள் காட்டிய பேருண்மைகள் இராமாயணத்தில் உள்ளது இன்று அது திசை திரும்பி விட்டது அதைத்தான் நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இராமனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும் என்று எல்லோரும் ஆயத்தமாக இருக்கின்றார்கள். பரதனின் தாயாரும் அதிலே சேர்ந்திருக்கின்றது. இருந்தாலும் பரதன் இராமனுடன் சேர்ந்து வாழ்ந்தவன். நாம் ஏதாவது சொன்னால் அவனுடன் சேர்ந்து விடுவான்... நம்மிடம் மறுத்துப் பேசிவிடுவான் கைகேயி எண்ணுகிறது.

1.இராமனின் தாயார் எல்லோரையும் அரவணைத்தது.
2.பரதனின் தாயார் போரில் ஜெயிக்கும் உணர்வு பெற்றது... தன் சுயநலத்தைக் கொண்டது.
3.ஆனால் இராமனின் தாயாரோ பொது நலத்தைக் கொண்டது என்ற நிலையை பிரித்துக் காட்டுகின்றார்கள்.

அப்பொழுது அதனுடன் வாழும் குழந்தைகள் எல்லாம் இணைந்து வாழும் சக்தியாக வருகின்றது.

காவியத்தில் உள்ள மூலங்களை அவ்வப்போது உங்களுக்குப் பிரித்துக் காட்டுகின்றோம்.




## தசரதன் இறந்தாலும்... கைகேயி மலர்ந்த முகத்துடன் இருப்பதாகக் காட்டியதன் உட்பொருள்

இன்றைய உலக சூழ்நிலையில் நம்முடைய ஆசையின் நிமித்தம் எதன் வழி செல்கின்றமோ அதனால் வேதனை என்ற உணர்வுகளே வருகின்றது. அதாவது
1.பிறரைத் துன்புறுத்த வேண்டும் அழிக்க வேண்டும் அடக்க வேண்டும் என்று இந்த வாழ்க்கையில் விரும்பினால்
2.நமக்குள் வளர்ந்துள்ள நல்ல குணங்களைக் கொல்கிறோம் என்று தான் பொருள்.

அப்படிப்பட்ட உணர்வுகள் உடலில் விளைந்தால் என்ன ஆகும்...? என்பதைத் தான் இராமாயணம் தெளிவாகக் காட்டுகின்றது.

இராமனுக்குப் பட்டம் சூட்டாமல் அவனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று நிலை வரும் பொழுது அதனால் தசரதன் இறந்து விடுகின்றான்.

பரதன் அங்கிருந்து வருகின்றான். அப்பொழுது நகரமே சூனியமாக இருக்கின்றது. யாரிடத்தில் கேட்டாலும் எல்லோருமே மௌனமாக இருக்கின்றார்கள். என்ன நடந்தது... ஏது ஆனது...? என்ற நிலையில் பரதன் உண்மையை அறிய முடியவில்லை.

இராமனின் தாயிடம் கேட்கின்றான். அதுவும் மௌனமாக இருக்கின்றது. கேட்கும் இடமெல்லாம் மௌனமாக இருக்கின்றது. கடைசியில் தன் தாயிடமே கேட்கின்றான்.

ஒன்றுமில்லையப்பா...! என்று சொல்கிறது.
1.அது மலர்ந்த முகத்துடன் இருக்கின்றது... அரசன் இறந்து விட்டான் என்ற நிலையே அங்கில்லை.
2.காரணம் ராமன் காட்டுக்குச் சென்று விட்டான் தன் மகனுக்குப் பட்டம் சூட்டும் நேரம் வந்து விட்டது வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்றது.

தசரதன் தன் உடலுக்குள் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை... அதாவது எதிரியை வீழ்த்தச் சூட்சமமான நிலைகள் கொண்டு எப்படிச் செய்தானோ... அது கூனி என்ற நிலையில் இங்கே வருகிறது.

1.”குறுகும் நிலை” உடலுக்குள் வளர்கிறது என்று கூனி என்ற ஒரு பாத்திரத்தை அமைத்து
2.அது கைகேயியைத் தூண்டி தசரதரிடம் இப்படிக் கேளு...! என்று
3.எதிரியை வீழ்த்திய உணர்வுகள் தனக்குள் கலந்து எப்படிச் செய்கிறது...? என்பதைத் தான் கூனி என்ற பாத்திரத்தைக் கொடுத்து
4.தன் இனத்தைக் குறுக்கி இவளுடைய ஆசையைத்தான் தனக்குள் பெருக்குகின்றது என்று
5.உப பாத்திரங்களைப் போட்டு இவ்வளவு தெளிவாகக் கொடுத்துள்ளார்கள்.

அதை நாம் கொஞ்சமாவது புரிந்து கொள்ள வேண்டும் அல்லவா...!

ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்...? அங்கே பார்...! கூனி என்னென்ன வேலை எல்லாம் செய்கிறாள்...? என்று அந்தக் கதாபாத்திரத்தை சுட்டிக் காட்டி அவள் எவ்வளவு தவறு செய்கின்றாள்...? என்று நாம் “கடுப்பாவோம்...”

ஏனென்றால் இந்த உணர்வைத் தெளிவாக்கிக் கொண்டு வரும் நிலையில் பரதன் சொல்கின்றான்.
1.”உன் தாயார்” (கூனி) என் பாட்டன் வீட்டையே இப்படித்தான் நாசமாக்கியது.
2.அதே போல என் தந்தையின் குடும்பத்தையும் நீ கெடுக்க வந்திருக்கின்றாய்…
3.இன்று உன்னைக் கொன்றால் தான் என்ன…? என்று இவன் ஆத்திரமான நிலைகள் வருகின்றது.

காரணம்… பரதன் கைகேயியின் மகனாக இருந்தாலும் பழகிய உணர்வு கொண்டபின் அவன் என்ன செய்கிறான்…? என்று தெளிவாகக் காட்டுகின்றார்கள். எந்த உணர்வை எடுத்ததோ… “அதிலே உருவானது தான்…” இந்த நிலை. அதிலே உருவாக்கப்படும் போது அதனின் இயல்பு என்று காட்டுகிறார்கள்.

அதாவது விஞ்ஞானத்தினால் விஷத் தன்மைகளை மாற்றி அதை நல்ல வித்துக்களாக இன்று மாற்றுகின்றார்கள். வீரிய உணர்வுகள் அது விஷத்தன்மை கொண்டாலும் நல்ல உணர்வின் தன்மையைச் சேர்த்து அந்த வீரியத்தின் தன்மை கொண்டு நல்ல வித்தாக உருவாக்குகின்றார்கள்.

அதே மாதிரி
1.சாந்தமான நிலைகள் கொண்டதை விஷமான கொடூரமான மிருகத்தின் உணவுக்குள் சேர்த்து
2.நல்ல உணர்வின் தன்மை கொண்ட உடல் அமைப்பாக மாற்றுகின்றார்கள்.
3.கொடூரமான மிருகங்களைச் சாந்தம் கொண்ட மிருகமாகவே மாற்றுகின்றான் இன்று விஞ்ஞானி

இதைப் போலத்தான் அந்த இராமாயணத்தின் காவியத்தின் தெளிவுகள்… அதாவது…
1.போரில் வெற்றி பெற வேண்டும் என்று தசரதன் உடலில் அணுவின் தன்மையாக அது விளைந்தாலும்
2.நல்ல அணுக்களின் தன்மை கலந்து பரதன் அதன் உணர்வு கொண்டு ஒன்று சேர்த்து வாழும் தன்மை பெற்றான் என்று பிரித்துக் காட்டுகிறார்கள்

ஆனால் வீழ்த்த வேண்டும் என்ற உணர்வின் தன்மை வரப்படும் பொழுது விஷத்தின் தன்மை கொண்டது.
1.பரதனின் தாயின் பாட்டி தான் அந்தக் குடும்பத்தினை நாசம் ஆக்கியது.
2.ஏனென்றால் இது பரம்பரை நோய் என்ற நிலையைக் கொண்டு வருகின்றார்கள்.

நாம் எதை எண்ணுகின்றோமோ இந்த உணர்வின் தன்மை நமக்குள் எப்படி இயங்குகின்றது…? என்பதைத்தான் இராமாயணம் கூறுகின்றது.

அந்தத் தாயின் நிலைகள் எப்படி…? என்கிற போது நாம் எதன் உணர்வை எடுத்தோமோ அது தாயாக வருகின்றது. இந்த உணர்வின் தன்மை தன் இனத்தைப் பெருக்கப்படும் பொழுது உடலுடன் இணைத்து வரப்படும் பொழுது தீமையாக எப்படி விளைவிக்கின்றது…?

ஆகவே நாம் எதை நீக்க வேண்டும்…? என்பதை இராமாயணம் சுட்டிக் காட்டுகிறது. இராமாயணம் என்றாலே – நம் எண்ணம் தான். நாம் நுகர்ந்த உணர்ச்சிகள் கொண்டு… அந்த உணர்ச்சிகள் எதுவோ அது நம்மை இயக்குகின்றது என்று காட்டுகிறது.

வேனையான உணர்வைச் சூரியன் எடுத்துக் கொண்டால் வாலி. ஆனால் மனிதனான நிலையில் இப்படிப்பட்ட இருளான நிலைகளை நீக்கியவன் அகஸ்தியன் உணர்வை ஒளியாக்கியவன் சுக்ரீவன்.

வேதனைப்படும் அல்லது வேதனைப்படுத்தும் உணர்வுகளை நுகர்ந்தால் நம்மைப் பலவீனப்படுத்தும்.
1.அதை மாற்றத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை இணைத்தால்
2.வேதனை என்ற வலுவின் தன்மை குறைந்து அது நன்மை செய்யும் சக்தியாக மாறுகின்றது.
3.அது தான் சுக்ரீவன் – எல்லோருக்கும் நன்மை செய்பவன் என்று காவியங்கள் கூறுகின்றது.

வேதனையான உணர்வுகள் உயிரால் நுகரப்பட்டால் அதனை வென்ற துருவ நட்சத்திரத்தின் உணர்வைக் கலந்தால் இந்த வீரிய உணர்வு கலக்கப்பட்டு தீமை நீக்கும் உணர்ச்சிகள் நம் ரத்த நாளங்களில் கலக்கின்றது.

1.தீமை உருவாகாதபடி நாம் மாற்றியமைக்கும் சக்தி பெறுகின்றோம்.
2.அப்படிப்பட்ட சக்தி பெற வேண்டும் என்பது தான் காவியத்தின் உட்கருத்து.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அடிக்கடி யாம் (ஞானகுரு) வற்புறுத்துவதெல்லாம் நாம் தேட வேண்டிய அழியாச் சொத்து “அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைத் தான்…”

அதை எடுத்துக் கொண்டால் எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும் அதை மாற்றும் தன்மை உண்டு

நாம் நுகர்ந்த உணர்வுகள் தான் அந்தந்த உணர்ச்சியை ஊட்டி நம்மை இயக்கி அது செயலாக்குகின்றது. அது தான் அரங்கநாதன்.
1.நாம் நுகரும் உணர்வுகள் எதுவோ நம் உடல் ஒரு அரங்கம்... உயிரிலே பட்ட பின் அந்த உணர்ச்சிகள் இயங்குகின்றது
2.ஆகவே நாம் பேரருள் பெற வேண்டும் என்ற உணர்வை நுகர்ந்தால்
3.அந்த உணர்ச்சிகள் அரங்கநாதனாக மாறித் தீமைகளை அகற்றிடும் உணர்வின் தன்மை நம்மை ஆளும்.
4.தீமைகள் புகாது தடுக்கும் அந்தச் சக்தியையும் நாம் பெறுகின்றோம்

பல முறை உங்களுக்கு இதைச் சொல்லி உள்ளேன்.

நீங்கள் எம்மை எண்ண வேண்டிய முறையே... இந்த உபதேசத்தை மீண்டும் மீண்டும் கேட்கின்றீர்கள். அதன் வழியில் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் எனக்கு உடல் நலம் ஆக வேண்டும் என்று “மனதில் எண்ணி ஏங்கி இருந்தாலே போதுமானது...”

இந்த உணர்வுகள் உங்கள் உயிரான அரங்கத்தில் பட்டு அது நாதங்களாக உடல் முழுவதும் பரவுகின்றது. ஏங்கிப் பெறும் பொழுது அந்த சக்திகள் உங்களுக்குள் அதிகமாகப் பெருகுகின்றது.

இந்த உணர்வு வளர நிச்சயம் உங்கள் நோய்கள் அகலும்

ஆனால் எம்மை எண்ணும் பொழுது “இப்படி இருக்கின்றதே... வேதனையாக இருக்கின்றதே...” என்று இப்படித்தான் சில பேர் எண்ணுகின்றார்கள்.

1.ரொம்ப நாளாக இந்த நோய் இருக்கின்றது...! என்று எம்மிடம் இப்படிக் கேட்டால் எந்த வாக்கு உங்களுக்குள் பதிவாகும்...?
2.இப்படிக் கேட்பதையே ஒரு பழக்கமாகவும் வைத்திருக்கின்றனர்.

ஏனென்றால் உங்கள் தீமைகள் அகல வேண்டும் நீங்கள் உடல் நலம் பெற வேண்டும் என்று தான் நான் உங்களுக்கு அந்த உயர்ந்த வாக்கினைக் கொடுக்கின்றேன்.

அந்த அடிப்படையில் நீங்கள் எண்ணி எடுத்தால் உங்களுக்குள் அது சரியான முறையில் வேலை செய்யும். நோய் நீங்க வேண்டும் என்றால் நான் உங்களுக்கு மருந்து சொல்வதற்கு வரவில்லை.

1.சொல்லின் வாக்காலே உங்களுக்கு அந்த நோய் போகும் உடல் நலம் பெறுவீர்கள் என்று தான் கொடுக்கின்றேன்.
2.உங்களுக்குள் பதிவாகி அதை மீண்டும் எண்ணினால் அதுதான் நல்லதாக வேலை செய்யும்.

மருந்து கொடுத்து அல்ல...!

1.மருந்துக்கு முன்னாடியே இந்த வாக்கு உள்ளே சென்று வேலை செய்யும்.
2.யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே...! என்பது போல் யாம் கொடுக்கும் வாக்கை உங்களுக்குள் பதிவாக்கப்படும் பொழுது
3.இந்த உணர்வு அந்த நோயைத் தீர்க்கும் வலிமையாக உங்களுக்குள் கூடுகின்றது.

அந்த வலிமை கொண்டு நீங்கள் எத்தகைய தீமையையும் நீக்கிடும் சக்தி பெறுகின்றீர்கள். அதைப் பெறச் செய்வதற்குத் தான் இத்தனை உபாயங்களையும் யாம் சொல்கின்றோம்.

கோவிலுக்குச் சென்று சாமிடம் வரம் கேட்பது போல் தான் எம்மிடமும் கேட்கும் பழக்க வழக்கங்கள் வந்து விடுகிறது. இதையெல்லாம் முழுவதுமாக மாற்றிப் பழகிடல் வேண்டும்.

எம்மிடம் கேட்க வேண்டிய முறையே
1.நோயிலிருந்து விடுபட வேண்டும் அதற்குண்டான அருள் சக்தி வேண்டும்
2.அதற்குண்டான உபாயங்கள் வேண்டும்... என் பையன் நல்லவனாக வேண்டும் என்று தான்...!
3.அதன்படி நடக்கும் என்று வாக்கினைக் கொடுத்துப் பதிவு செய்தால் உடனடியாக அது நல்லதாகும்.

ஆகவே எதுவாக இருந்தாலும் அது நல்லதாக வேண்டும் நலம் பெறக்கூடிய சக்தியாக வரவேண்டும் அந்த அருள் வழியை நாம் பெற வேண்டும் என்று இந்த அடிப்படையில் எடுத்துக் கொண்டால் அதன்படியே நடக்கும். நீங்கள் எண்ணியபடி அது நல்லதாக அமையும்.

1.நான் பதிவு செய்தால்... உங்கள் எண்ணம் அதனுடன் இணைந்து
2.அந்த உணர்வினை இயக்கி உங்களுக்கு நிச்சயம் நல்லதாகும்.

பல முறை இதைச் சொல்கின்றேன். யாரும் இதை அதிகம் சட்டை பண்ணுவது இல்லை.

ஏனென்றால் நீங்கள் எண்ணுவது எதுவோ உங்கள் உயிர் அதைத் தான் இயக்குகின்றது. இந்த உணர்வுகள் தான் உடலில் படர்கின்றது. அது தான் உங்களை ஆட்சி புரிகின்றது என்று பல முறை நான் சொல்கின்றேன். நீங்கள் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

யாரோ செய்வார் எவரோ செய்வார் என்று தான் பெரும் பகுதியானவர்கள் எண்ணுகின்றார்கள். ஆகவே "அருள் வழியில் வாழ்க்கை நடத்துவோம்..." என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அருள் வழியில் வாழக் கற்றுக் கொள்தல் வேண்டும்.

எத்தனையோ செல்வங்களை நாம் தேடி வைத்திருந்தாலும் நம்முடன் அது வருவதில்லை. இந்த உடலுக்குப் பின் என்றுமே ஏகாந்த நிலை என்ற பிறவி இல்லா நிலை அடைவதே முழுமை...!

1.இந்த உயிர் தோன்றி எத்தனையோ கோடி இன்னல்களில் இருந்து தப்பிக்கும் உணர்வுகளைச் சேர்த்து மனிதனான பின்
2.இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் கோடி உணர்வுகளையும் வெல்லும் சக்தி இந்த மனிதனுக்குத் தான் வருகின்றது.
3.அதை வென்று விட்டால் உணர்வுகள் ஒளியாக மாறுகின்றது... ஒளியின் சரீரம் பெறுகின்றோம்.

அதற்கு நாம் தயாராக வேண்டும்.

இதன் வழி துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெற்றால் நமக்கு "எண்ண வலு..." கிடைக்கின்றது. சிந்தித்து வாழும் அருள் சக்தி கிடைக்கின்றது தீமையிலிருந்து நம்மை விடுபடச் செய்கின்றது... அருள் ஒளியைப் பெருக்கச் செய்கின்றது அருள் வாழ்க்கை வாழச் செய்கின்றது நம் பார்வையில் சர்வ தோஷங்களும் போக்கப்படுகின்றது பிறருடைய தீமைகள் நமக்குள் புகாது தடுக்கும் சக்தியும் வருகிறது.

ஆகவே இதைச் சீராக வளர்த்துக் கொள்ளுங்கள்
1.அருள் வழியில் வாழ்வோம்
2.அருள் வழியில் அனைவரையும் வாழச் செய்வோம்.



## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நம்மை அறியாது இயக்கும் தீமைகளிலிருந்து விடுபட வேண்டும் என்று ஞானிகள் ஆலயத்திலே உருவத்தைக் காட்டி அருவ நிலைகள் நாம் உணர்ந்து இந்த வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும்...? என்று தெளிவாகக் கூறியதை நாம் இப்பொழுது என்ன செய்கின்றோம்...?

ஆலயப் பண்புகளை மறந்து தன் சுயநலத்தைக் கொண்டு நடந்து கொள்கிறோம்...! யாராவது நமக்குத் தொல்லை கொடுத்தால்
1.உடனே அவன் குடும்பம் நாசமாக வேண்டும்
2.அவன் குடும்பம் பிள்ளை குட்டி எல்லாம் சாக வேண்டும்
3.அவன் தொழில் எல்லாம் நாசமாக வேண்டும் என்று கருப்பணசாமி ஆலயத்திலோ மாரியம்மன் ஆலயத்திலோ
4.எனக்குத் தொல்லை கொடுக்கின்றான் என்ற நிலையில் மண்ணை வாரித் தூற்றி அவர்கள் நாசமாக வேண்டும் என்று தான் கும்பிடுகின்றோம்...

ஆக ஆலயத்திற்குச் சென்று நாம் எதை வளர்க்கின்றோம்...?

பிறிதொருவன் தவறு செய்யும் உணர்வை நாம் நுகர்ந்தால்... அந்த உணர்வுகள் மாறி அவன் செய்யும் தவறையே நமக்குள் செய்யும் நிலை வருகின்றது (சொல்வது அர்த்தமாகிறதல்லவா).

ஒரு உடலிலே நோய் அதிகமாக இருந்தால் பாசத்துடன் அவனை நுகரப்படும் பொழுது அதே நோய் நமக்குள் வந்து நம்முடைய நல்ல சிந்தனையை இழக்கச் செய்கின்றது.

அது தான் மாரியம்மாள்...! (அடுத்தவர் உணர்வு மாறி நமக்குள் வருவது).

ஆனால் மாரியம்மனை வணங்கி வரும் பொழுது ஆகாதவர்கள் இருந்தால் என்ன செய்கிறோம்...? அவர் குடும்பத்தைக் கெடுப்பதற்காக உனக்கு ஆட்டைக் கொண்டு வந்து வெட்டிப் பலி கொடுக்கின்றேன்...! என்று ஆலயப் பண்புகளை இப்படித்தான் கொண்டு வருகின்றோம்.

பிறிதொரு வேதனைப்படுவோரின் உணர்வை நுகர்ந்தால் அதே உணர்வு நமக்குள் மாறி (மாரி) அவன் உடலில் வந்த நோய்கள் நமக்குள்ளும் வருகின்றது.

இந்தத் தீமைகளை நீக்குவதற்கு நோயை நீக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்...? என்று பச்சையாகவே அங்கே காட்டுகின்றார்கள்... அக்கினி குண்டம் இறங்க வேண்டும் என்று...!

ஆனால் அக்கினி குண்டம் நாம் எப்படி இன்று இறங்குகிறோம்...?

1.தீ மிதித்தால் "தீ நம்மைச் சுடும்...!" என்று தெரிகின்றது ஆனாலும் மிதிக்கின்றோம்
2.ஏனென்றால் நேர்த்திக் கடனுக்காக நான் மிதித்துச் செல்கின்றேன் என்று செல்கின்றார்கள்.
3.ஆனால் ஒருவனுடைய தீமை நம்மைக் கொல்கிறது என்று தெரிகின்றது
4.அந்தத் தீமையை நீக்கும் (சுட்டுப் பொசுக்கும்) நல்ல உணர்வுகளை எடுக்கின்றோமா...? என்றால் இல்லை.

நெருப்பைக் கொண்டு எப்படி மற்ற பொருளை வேக வைக்கின்றோமோ ஒன்றைக் கருக்குகின்றோமோ இதைப் போன்று நம் உயிரான நெருப்பிலே துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள இணைத்து... துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாங்கள் பெற வேண்டும் என்று நாம் நுகர்ந்து
1.நம் உடலுக்குள்ளே அதைப் பரப்பினால்... இது ஒரு குண்டம்.
2.தீமையை நீக்கிய அந்த அருள் உணர்வு நமக்குள் வந்தால் தீமைகளைப் பொசுக்கி விடுகின்றது.

பின்... யார் நமக்குத் தீமை செய்தார்களோ அவனுக்குச் சிந்தித்து செயல்படும் சக்தியும் பிறருக்கு நன்மை செய்யும் உணர்வுகள் வரவேண்டும் என்றும் இத்தகைய எண்ணங்களை நாம் எண்ணினால் அவனுடைய தீய உணர்வுகள் நமக்குள் வருவதில்லை.

தீமையை வென்ற துருவ நட்சத்திரத்தின் உணர்வை நுகர்ந்தால் நம் உடலில் இரத்தத்தில் கலந்து தீமை என்ற உணர்வை மாற்றுகிறது.

நாம் பார்ப்பவர்களுக்கெல்லாம் நல்ல உணர்வுகள் வரவேண்டும்... நல்லது செய்யும் எண்ணங்கள் வரவேண்டும் என்று எண்ணினால் அந்த உணர்வு உயிரிலே பட்டு... அந்த உணர்ச்சிகள் நம் உடலில் நல்லதாக இயங்குகின்றது.

அதனால் தான் நாம் எதை எண்ணுகின்றோமோ நம் உடல் ஒரு அரங்கம்...
1.பிறர் நல்லவராக வேண்டும்... தீமையிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும்

என்று உணர்வுகளை நுகர்ந்து
2.உயிரிலே பட்டால் அந்த உணர்ச்சிகள் நாதங்களாக மாறி அதற்கொப்ப எண்ணம் சொல் செயல் நம்மிடமிருந்து வருகின்றது
3.இந்த உணர்ச்சிகள் தான் நம்மை ஆளுகின்றது ஆண்டாள்...!

இப்படி நாம் வழக்கப்படுத்த வேண்டிய தெய்வீகப் பண்புகளைக் காட்டுகின்றது நம் சாஸ்திரங்கள். நாம் இன்று அதன்படி நடக்க வேண்டுமல்லவா...!






## "என்னுடைய சீடர்கள்…" படிக்க வேண்டிய மிக முக்கியமான உபதேசம்

எமது உபதேசங்களைக் (ஒலி நாடாவில்) கேளுங்கள்.. நூல் வடிவில் வந்த புத்தகங்களைப் படியுங்கள். அதனின் விளக்கத்தைச் சொல்லிப் பழகுங்கள்.

1.சாமி இந்த மாதிரிச் சொல்லி இருக்கின்றார்…
2.ஆகவே இந்த மாதிரி நடக்க வேண்டும் என்று வெளிப்படுத்துங்கள்.

காரணம்… எம்முடைய உபதேசங்களைக் கேட்டாலும் வாழ்க்கை நடைமுறைகளில் அதை வெளிப்படுத்தும் போது ஆழமாகப் பதிவாகும்.
1.அப்படிப் பதிவாக்கி விட்டால் தவறு என்று வந்தால்
2."டக்…" என்று பிரேக் போட்டு… "திருத்தி வாழச் செய்யும் உணர்வுகள்…" நமக்குள் வரும்.

உதாரணமாக… ஒரு இன்ஜின் ஓடிக்கொண்டிருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். கற்றுக் கொண்ட என்ஜினியர்கள் அதில் வரக்கூடிய சப்தத்தை வைத்தே "இன்ன இடத்தில் குறைபாடுகள் இருக்கிறது…" என்று கண்டுபிடிக்கின்றார்கள். அதே போல மெக்கானிக் இதை எல்லாம் செய்கின்றார்.

இந்த இடத்திலே இன்னென்ன உலோகங்கள் இப்படி இப்படிச் செய்தால் இயந்திரத்தில் அந்த இடத்தில் வலுவாக இருக்கும் என்று இஞ்சினியர் சொல்வார்.

1.அவ்வாறு அதைச் செய்து கொண்ட நிலையில் ஓடும் பொழுது சப்தம் வந்தால்…
2.அதிலே இன்ன இடத்தில் பலவீனமாக இருப்பதால் தான் குறைபாடாகின்றது என்று கண்டறிந்து
3.அந்த மெக்கானிக் அதைச் சரி செய்கின்றார்… இல்லையா…?

அதே போன்று தான் மேலெழுந்தவாரியாக யாம் கண்டுபிடித்த உணர்வுகளை உங்களிடம் உபதேசிக்கின்றேன். நீங்கள் மெக்கானிக்காக ஆக மாற வேண்டுமா இல்லையா…!

அதை எடுத்து
1."சாமி…!" இன்ன இடத்தில் இந்த மாதிரி இருக்கிறது…
2.எப்படித் திருத்தி வாழ்வது என்று கேட்டால் சொல்ல முடியும் அல்லவா…!

ஆகவே… எமது உபதேசத்தைக் கேட்டுப் பதிவாக்கி அதை வளர்த்துக் கொண்டவர்கள் அனைவருமே இந்த அருள் வழியில் தயாராக வேண்டும்… அருள் சேவைக்கு முன்னுக்கு வர வேண்டும்.

ஏனென்றால் ஆரம்பத்திலே நானும்
1.குருநாதர் காட்டிய வழியில் வளர்த்துக் கொண்ட அருள் உணர்வுகளை முதன் முதலில் வெளிப்படுத்தும் போது
2.கூட்டத்தைக் கண்டபின் பட...பட... என்று சொல்லக்கூடிய நிலையாகி மறந்து போயிருக்கிறது.

எல்லோருக்கும் அப்படித்தான்...! துணிவுடன் பேசும் பொழுது தன்னாலே வந்துவிடும்.

தியானத்தில் எடுத்து சக்திகளைப் பெறுகின்றீர்கள்... இந்த மாதிரிச் செய்யுங்கள் என்று சொல்கிறோம். தியானத்தை மட்டும் செய்து கொண்டிருக்கின்றோமே...! என்று சோர்விலே கொண்டு போய் விட்டு விட்டால் என்ன செய்வது...?

தோசையைச் சுட வேண்டும்... எல்லோருக்கும் அதைக் கொடுக்க வேண்டும் என்று ஆசை இருக்கின்றது. ஆனால் நெருப்பைக் கூட்டி விட்டால் என்ன ஆகும்...? அடிபிடித்து விடும்... நெருப்பு அதிகமாகும் இடமெல்லாம் கருகிவிடும்.

சீக்கிரம் எல்லோருக்கும் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்பினோமே... இப்படிக் கருகிப் போய்விட்டது என்று தோசைச் சட்டியைச் சுரண்டு சுரண்டு என்று இப்படி ஒரு இரண்டு தரம் ஆகிவிட்டால் “அந்தச் சட்டியையே தூக்கி எறிந்து விடுவோம்...”

1.தியான வழியில் நம்முடைய மனது அது போல் ஆகிவிடக்கூடாது.
2.ஏனென்றால் தியான வழியில் நாம் நிதானமாகச் செயல்பட வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும்.
3.நாம் சுவாசிக்கும் உணவுகள் அனைத்தையும் ருசியாக மாற்ற வேண்டும்.

அவசர புத்தி என்ன செய்யும்...? தப்புத் தப்பாகப் பண்ணிவிடும். அப்படிப்பட்ட நிலையினை மாற்றி நல்ல முறையில் செயல்பட வேண்டும்.

இதே போன்று வடை சுடும் பொழுதும் அந்தப் பக்குவ நிலை தேவை. முதலில் சூடு ஏறிவிட்டதா...? என்பதைப் பார்ப்பதற்கு நீரைத் தெளிக்கின்றார்கள். சுர்...ர்ர்... என்று சத்தம் கேட்டபின்... சரி என்று சொல்லி வடையைச் சுட ஆரம்பிப்பார்கள்.

ஆனால்... மூன்றாவது வடையில் சூடு குறைந்து விடும். முதல் வடை கருகும் இரண்டாவது ஓரளவுக்கு இருக்கும்... மூன்றாவது வடை அப்படியே மிதந்து

கொண்டிருக்கும்… எண்ணெயெல்லாம் கவர்ந்து கொள்ளும்… வடை வேகாது… சுவையே கெட்டுவிடும்.

ஆனால் பதமான நிலைகள் கொண்டு அந்த எண்ணெயின் சரியான சூட்டைக் கணித்து வடையைச் சுட்டுப் பாருங்கள். "கரெக்டாகச் செய்த பின்…" அது மொறு… மொறு… என்று எல்லா வடையுமே ஒன்று போலச் சுவையாக இருக்கும்.

ஆனால் ஒரே நெருப்பு தான்…!
1.காரணம் எது…? ருசியாக்குவது யார்…? மனது…!
2.நம் மனதைப் பக்குவப்படுத்தினால் ருசியாகின்றது… மனதில் சிறிது அவசரப்பட்டால் கருகி விடுகின்றது.

ஆகவே மனம் தானே காரணம். இதை உருவாக்குவது யார்…? நம் மனதினை நாம் தெளிவாக்க வேண்டும். தெளிவானால் பொறுமை வரும். பொறுமையால் ஞானத்தின் வளர்ச்சி வரும்.

ஆனால் அவசரப்பட்டோம் என்றால் எல்லாம் போய்விடும். இதையெல்லாம் நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

1.நாம் அனைவரும் ஞானிகளாக மாற வேண்டும்.
2.சாமி மாதிரி நீங்களும் ஞானத்தைப் போதிக்கக் கூடிய வல்லுனர்களாக மாற வேண்டும்.

என்னுடைய உபதேசங்களைக் கேட்டுப் பதிவாக்கி அதனுடைய விளக்கங்களைத் தெரிந்து கொண்டே வரவேண்டும். இந்த உணர்வுகள் உங்களுக்குள் விளையும்… அப்படி விளைய வைக்க வேண்டும்.

1.என்னுடைய உபதேசக் கருத்துக்களை நிதானமாகப் படித்து
2."முத்து…" மாதிரி எடுத்துச் சொல்லப் பழகிக் கொள்ளுங்கள்.

கட… கட… என்று படிக்கக் கூடாது. அப்படிப் படித்தால் படிப்பவருக்கும் அர்த்தமாகாது… அதைக் கேட்பவர்களுக்கும் அர்த்தமாகாது. ஆகவே நிறுத்தி நிதானமாகப் படித்து முடிந்த பின்
1.குரு வழியில் அதன் உள் கருத்துக்களை அறிந்து
2."சாமி இதைத்தான் சொல்கிறார்… நாம் இதைப் பெற வேண்டும்…" என்று விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

3.ஏனென்றால் அருள் வழியில் உங்களைப் பேச வைப்பதற்குத் தான் இதைச் சொல்கின்றேன்.

நான்கு வரி நீங்கள் படித்தாலும் அதில் உள்ள மூலக்கூறுகளை
1.“சாமி இவ்வாறு வெளிப்படுத்துகிறார்…! நாம் இதைப் படித்துப் பதிவாக்க வேண்டும்…! இந்த மாதிரி நாம் செயல்பட வேண்டும்…! என்று
2.நிறுத்தி நிதானமாக அதை விளக்கமாக எடுத்துச் சொல்லி கொண்டே வந்தால் எல்லோருக்கும் மனதில் பதியும்.

புத்தகத்தை எடுத்து ஒரு பத்து நிமிடத்தில் வேகமாகப் படித்த பின்… அடுத்தாற் போல் “அதிலே என்ன விளக்கம் இருக்கிறது…?” என்று கேட்டால் படித்தது மட்டும் தான் மிச்சமாக இருக்கும்… விளக்கம் தெரியாது.

ஏனென்றால்… யாம் கொஞ்சம் தான் கற்றிருக்கின்றோம்…!
1.என்னுடைய சீடர்கள் இதைக் காட்டிலும் நிறையக் கற்றுக் கொள்ள முடியும்.
2.உண்மையின் உணர்வுகளை எடுத்துச் சொல்லக்கூடிய நிலை வரும்.

பகைமையுடன் அல்ல…! “நான் தெரிந்து கொண்டேன் என்ற நிலை இல்லாதபடி…” உபதேசக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் படித்துப் பதிவாக்குங்கள். அது ஞானத்தின் வழியில் உங்களை அழைத்துச் செல்லும். அதற்குத் தான் இதை ஞாபகப்படுத்துகிறேன்.

காரணம் இந்த உடலில் சிறிது காலமே வாழுகின்றோம். அதற்குள் இந்த அருள் உணர்வுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தும் அந்தத் தகுதியை நீங்கள் பெற வேண்டும்.

குருநாதர் என்னிடம் எவ்வளவோ சக்திகளைக் கொடுத்தார்.
1.ஆசைப்பட்ட உள்ளங்களுக்கெல்லாம் இதைச் செய்யப்பா என்றார்.
2.அதன் வழியில் நான் உங்களைத் தயாராக்க வேண்டும் அல்லவா.

ஆனால் ஒரு சிலர் யாம் கொடுக்கும் சக்திகளைத் தன் சுயநலத்திற்குப் பயன்படுத்தி விடுகின்றனர். அது எல்லாம் வேலைக்கு ஆகாது.

நீங்கள் எல்லோரும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்ற உணர்வு வரப்படும் பொழுது எல்லோருடைய உணர்வும் ஒன்றாகின்றது. அதைச் சீராக நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நன்றாக இருப்பீர்கள்.

1.உங்கள் வீட்டில் கர்ப்பம் என்று தெரிந்தாலே அங்குள்ள அனைவரும் சொந்தக்காரர்களும் ஒன்று சேர்ந்து
2.கருவில் வளரும் குழந்தை ஞானியாக வளர வேண்டும் என்ற உணர்வைப் பாய்ச்சுங்கள். பெரிய தத்துவ ஞானியாக அவன் வருவான்.

நாம் பாய்ச்சும் அருள் உணர்வை அந்தத் தாய் நுகர்ந்து அந்த உணர்வுகள் தாயின் ரத்தத்தில் கலந்து அதே அருள் உணர்வு கருவிலிருக்கும் சிசுவிலும் விளையும்.

அப்படிப்பட்ட நிலையில் வளர்ச்சி அடைந்து அந்தக் குழந்தை பிறந்தால் போதும்.

எந்த அருள் உணர்வுகளைப் பாய்ச்சிக் குழந்தையை வளர்த்தீர்களோ அவன் பிறந்த பின் எண்ணம் சொல் வெளி வரும் பொழுது அது நமக்கு சொந்தமாகின்றது.
1.அவனால் பகைமையை நீக்கும் உணர்வுகளைப் பெறுகின்றோம்.
2.நாம் எடுத்துக் கொண்ட உணர்வுகள் தான்.

பல உணர்வின் தன்மையை எடுத்து நமக்குள் அணுக்களாக உருவாக்கப்படும் பொழுது அதை விளைய வைத்து உணவாக உட்கொள்கிறோம்.

இதே போல தான் ஞானிகளாகப் பிறக்கச் செய்வதற்கு மனிதனுடைய ஆறாவது அறிவால்
1.கர்ப்பிணி "செவி கொண்டு நுகரப்படும் பொழுது..." தான் இதைப் பெற வேண்டும்
2.தன் கருவில் இருக்கும் குழந்தையும் அந்த அருள் ஞானம் பெற வேண்டும்
3.உலக ஞானம் பெற வேண்டும் இருளை அகற்றும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்று ஏங்கிப் பெறுதல் வேண்டும்.

நம்மைப் போன்றவர்களின் தூண்டுதல் ஆகி... அந்தத் தூண்டுதலை நல்ல நிலையில் எடுத்துத் தியானித்து ஞானக் குழந்தை உருவாக வேண்டும் என்று செய்தால் மிகவும் நல்லது.

எதிர்காலத்தில் இத்தகைய ஞானிகள் தேவை. தென்னாட்டுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று சொல்வது போல நாம் இதைச் செய்து பழகுதல் வேண்டும். ஞானிகளை உருவாக்க வேண்டும்.

1.நம் தெருவிலே இரண்டு ஞானிகள் வளர்ந்தால் போதும்
2.அந்தத் தெருப் பக்கம் தீமைகள் வராது அருள் ஞானிகள் உணர்வுகளைப் பெறச் செய்யும்.

ஒவ்வொருவரும் இதைப் போன்று ஆங்காங்கு வாழும் இடங்களில் செயல்படுத்தினால் இந்த நாட்டிலேயே உயர்ந்த நிலைகளை உருவாக்கி விஞ்ஞான உலகின் நஞ்சிலிருந்து மீட்டிடும் அருள் சக்தியாகப் பெருகும்.

ஆகவே அருள் ஞானக் குழந்தைகளை உருவாக்க மறந்து விடாதீர்கள்…!

1.ஒவ்வொருவரும் குரு காட்டிய வழியில் ஞானிகளாக மாறுங்கள்.
2.கூட்டமைப்பாகச் செயல்பட்டு உலகில் வரக்கூடிய தீமைகள் அனைத்தையும் நீங்கள் மாற்றி அமைக்க முடியும்…!

நிச்சயம் நீங்கள் செய்வீர்கள்…!

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெற வேண்டும் என்ற நினைவை நம் உடலுக்குள் செலுத்தினால் தீமைகளை அடக்கி நமக்குள் சிந்திக்கும் ஆற்றலாக உருவாகின்றது.

அதற்குப் பின் நோயாளியைப் பார்த்து "நீ நன்றாகி விடுவாய்…" என்று இந்த உணர்வைச் சமைத்து இந்த உணர்வின் சொல்லாகச் சொல்லப்படும் பொழுது அவனுக்கு ஊக்கமூட்டும் உணர்ச்சிகளாக இது அமைகிறது. அதே சமயத்தில்
1.நோயை நீக்க அவன் உட்கொள்ளும் மருந்தைச் சீராகப் பயன்படுத்தும் நிலையும்
2.அந்த மருந்து உடலுக்குள் சென்று நன்கு வேலை செய்யும் தன்மையும் வருகிறது.

ஆனால்… இப்படி ஆகிவிட்டதே என்று அவன் வேதனைப்படும் உணர்வை நாம் நுகர்ந்து… வேதனையும் பதட்டத்தையும் பட்டு… பயத்துடன் நாம் அந்த மருந்தினைக் கொடுத்தால்
1.இதே உணர்வுகள் இயக்கப்பட்டு
2.அந்த மருந்துக்கே வேலை இல்லை என்று ஆகி எதிர் நிலையாகிவிடும்.

ஒரு சிலர் பாருங்கள்... நோயான பின் பதட்டத்தோடு மருந்தினைக் கொடுப்பார்கள். இப்படி எத்தனை மருந்து கொடுத்தாலும் அந்த நோயிலிருந்து அவர்கள் விடுபட முடியாது.

ஏனென்றால்... பாசத்தாலோ அல்லது நண்பர் என்ற நிலையிலோ பழகிய நிலைகள் கொண்டு "இப்படி ஆகிவிட்டதே... இப்படி ஆகிவிட்டதே..." இப்படி ஆகிவிட்டதே...! என்று தியானிப்பார்கள்.
1.அவர்கள் உடலிலும் இத்தகைய தீமைகள் விளையும்
2.அதே சமயத்தில் அந்த நோயாளி உடலிலும் அதே உணர்வுகள் விளையும்.

இதுவும் தியானம் தான்...!

இதையெல்லாம் மாற்றிட அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நாங்கள் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள் அனைத்தும் பெற வேண்டும் என்ற இந்த உணர்வினை நம் உடலுக்குள் செலுத்தி அந்தத் தீமை என்ற நிலைகளை நாம் அடக்கிப் பழக வேண்டும்.

அதற்குப் பின் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நோயுற்றவர் உடலில் படர வேண்டும்
1.அவர் நோய்கள் நீங்க வேண்டும்
2.அவர் மன உறுதி பெற வேண்டும்
3.நல்ல உணர்வுகள் அவருக்கு கிடைக்க வேண்டும்
4.சிந்திக்கும் ஆற்றல் அவருக்குள் பெருக வேண்டும்
5.மன வலிமையுடன் வளரும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்ற உணர்வை நாம் எடுத்தால் இந்த வலு நமக்குக் கிடைக்கின்றது.

அந்த உணர்வோடு அவரிடம் சொல்லி "சீக்கிரம் நலமாகி விடுவீர்கள் உடல் நலம் பெறுவீர்கள்..." என்ற உணர்வினை இங்கே சமைத்தால்... அந்த உணர்வின் சொல் அவர் செவிகளிலே பட்டு நல்ல உணர்ச்சிகளைத் தூண்டி... அவருடைய இரத்தங்களிலே கலந்து அவர் தீமையின் உணர்வை அடக்கி நல்ல உணர்ச்சிகளை அவருக்குள் ஊட்டும்.

உங்கள் அனுபவத்தில் இதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் அவர் எடுத்த வேதனையை நமக்குள் எடுத்து உனக்கு இப்படி ஆகிவிட்டதே…! என்று எண்ணினால் நமக்குள்ளும் அதே பயமும் பதட்டமும் வேதனையும் வருகின்றது.

திருப்பி இதையே வலுவாக்கிச் சொல்லப்படும் பொழுது நோயே வலிமை பெறுகின்றது.

இதைப் போன்ற நிலைகளில் இருந்து நீக்குவதற்குத் தான் ஆலயங்களிலே சிலைகளை வடித்து… அதன்படி நாம் எப்படி நல்ல குணங்களைச் சேர்க்க வேண்டும்…? தீமையிலிருந்து எவ்வாறு விடுபடுவது…? என்ற நிலைகளைக் காட்டுகின்றார்கள்.

இந்தத் தெய்வம் நல்லதைச் செய்யும்…! என்று ஸ்தல புராணங்களை வடித்து வைத்துள்ளார்கள்

ஆனால் நாம் என்ன செய்கின்றோம்…?

அங்கே அபிஷேகங்களையும் ஆராதனையும் செய்துவிட்டு… இப்படி நோயுடன் இருக்கின்றார்களே… தெய்வமே…! கஷ்டமாக இருக்கின்றதே… நீ எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றாயே…! என்ற வேதனை கலந்த உணர்வைத்தான் நாம் எடுத்து வளர்த்து
1.அவர்கள் நலம் பெற வேண்டும் என்று எண்ணினாலும்
2.விஷத்தைக் கலந்து பாலைக் கொடுத்தது போன்றாகி விடுகின்றது.

ஏனென்றால் வேதனை (நஞ்சு) கலந்த பின் இப்படித்தான் ஆகும். ஆகவே கோவிலுக்குச் சென்றால் நான் எப்படிச் செயல்பட வேண்டும்…?

மலரைப் போன்ற மணமும் மகிழ்ந்து வாழும் சக்தியும்… வைரத்தைப் போன்று சொல்லில் ஜொலிப்பும் செயலில் ஜொலிப்பும் வாழ்க்கையில் ஜொலிப்பும் பெற வேண்டும் என்ற உணர்வைத் தனக்குள் படைத்து… இந்தத் தெய்வீக பண்புகள் அவருக்குள் வளர வேண்டும்.. தீமைகளை அகற்றிடும் அருள் சக்தி அவர் பெற வேண்டும் அருள் வழி வாழும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்று எந்த நோயாளியை பார்த்து நாம் எண்ணினோமோ
1.அருள் உணர்வை எண்ணிச் சுவாசித்து இங்கே படைத்தால் நம் உயிருக்கு இது அபிஷேகம் ஆகின்றது.

2.இந்த உணர்ச்சிகள் நம் இரத்தங்கள் முழுவதும் கலக்கின்றது
3.தீமையை அகற்றிடும் நல்ல அணுக்கள் நமக்குள் விளைகின்றது.

இந்த உணர்வின் சொல்லை வெளிப்படுத்தும் போது... எந்த ஆலயத்தில் நாம் இதை உற்றுப் பார்த்து எண்ணுகின்றோமோ அங்கே "நாம் தெய்வமாகின்றோம்...!"

அவ்வாறு நாம் தெய்வமாகி அவன் உடல் நலம் பெற வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும். இது தான் ஞானிகள் நமக்குக் காட்டிய சாஸ்திரம்.






**தியான வழியில் உள்ள சிலர்... காசுக்காக ஞானத்தை இழந்து தவறான வழியில் சென்று கொண்டுள்ளார்கள்**

1.இப்பொழுது நாம் பயன்படுத்தக்கூடிய சில பொருள்களிலும் சரி உணவுப் பொருள்களிலும் சரி
2.கெமிக்கல் கலக்காதது "இது அனைத்துமே பச்சிலைகள் சார்ந்தது..." என்று சொல்லிக் கொண்டு நிறையப் பேர் வருகின்றார்கள்.

துணிகளிலும் கூட பச்சிலைகளைப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் அந்த துணிகள் இத்துப் போய்விடும். கெமிக்கல் கலக்காமல் செய்ய வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து அப்படிக் கொண்டு வந்துள்ளார்கள்.

சில பச்சிலைகளைக் கையில் எடுத்தால் அரிப்பு அதிகமாகும். கெமிக்கல் எதிலிருந்து வருகின்றது...?
1.நுகர்ந்த உணர்வுகள் கெமிக்கலாக மாறுகின்றது.
2.பச்சிலைகளிலும் அது இணைந்து நமக்குத் தெரியாமலே அவ்வாறு ஆகின்றது.

அமெரிக்காவிலிருந்து எவ்வளவோ பொருள்கள் இப்படிக் கெமிக்கல் இல்லாதது என்று சொல்லி இறக்குமதியாகி இங்கே வந்து கொண்டிருக்கின்றது.

இது எவ்வளவு பெரிய விளைவுகளைன் உண்டாக்கும்…? என்பது “பின்னாடி தான் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்…”

1.அமெரிக்காவின் ராஜதந்திரம்… மற்றவருடைய புத்திகளைக் கெடுப்பதற்கு அதிலே ஆசையால் மோகம் வரும்படிச் செய்து
2.அனைவரும் அதன் பின் செல்லும் நிலையாக… தன்னை அறியாமலே இயங்கிக் கொண்டுள்ளார்கள்.
3.இதிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். நாம் நினைக்கிறோம்… இது நல்லது என்று…!

ஆனால் நம்மை எங்கேயோ அது கொண்டு போய் விட்டு விடும்.

தியானத்தைக் கடைப்பிடிப்பவர்களும் சிலர் இதிலே இணைந்து கொண்ட நிலையில் இவ்வளவு பணம் கிடைக்கும் என்ற நிலையில் செயல்பட்டுக் கொண்டுள்ளார்கள்…
1.கடைசியில் தியானத்தை விட்டு விடுவார்கள்.
2.அந்த மோகம் கொண்ட நிலையில் அதன் பின்னாடி தான் சென்று கொண்டிருப்பார்கள்
3.ஏனென்றால் அந்த மோகம் “தன் நிலையை” மறக்கச் செய்யும்.

யாம் கற்றுக் கொடுத்த உணர்வின் தன்மைகள் எல்லாம் அவர்களுக்குள் மாறி… இறக்குமதியாகும் அந்தப் பொருள்களை விற்றால் “இவ்வளவு சம்பாதிக்கலாம்…” என்று வீடு வீடாகச் சென்று கொடுத்தால் நல்லது என்று அவர்களின் ஆசை இப்படிச் சென்று கொண்டிருக்கிறது.

“குருநாதர் காட்டிய வழியில் ஆன்மீகத்தை வலுப் பெறச் செய்வதற்குப் பதில்…” இந்தப் பொருள்கள் இத்தனை வருடம் உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்… சுத்தமானது… கெமிக்கல் கலக்காது…! என்று வீட்டு வீட்டுக்குச் சென்று சொல்லி
1.நாலு காசுக்காக இந்த மாதிரிச் செய்து கொண்டுள்ளார்கள்.
2.காசு ஆசையும் உடல் ஆசையும் இந்த உணர்வை இயக்குகின்றது.

கெமிக்கல்களில் உள்ள கெடுதல்களைப் பற்றி யாம் ஏற்கனவே பல முறை உபதேசித்துள்ளோம். ஆக இதிலே எத்தனை பேர் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்பது இனி பின்னாடி தான் தெரியும்.

அமெரிக்காவின் தந்திரங்கள் (TRICKS) இது போன்ற நிலைகளைச் செய்து கொண்டு நுண்ணிய அலைகளை எடுத்து மனிதனின் சிந்தனையைப் பித்து பிடித்துப் பேய் மாதிரி செயல்பட்டுக் கொண்டுள்ளது.
1.அவர்களுக்குச் சிந்தனையே இருக்காது.
2.ஞானத்தை இழக்கும் தன்மைகளுக்கு தான் வந்து கொண்டுள்ளதே தவிர
3.பண்பென்ற நிலைகள் முழுவதும் அழியக்கூடிய நிலை தான் அதில் இருக்கின்றது.

உங்கள் வீடுகளுக்கெல்லாம் தேடி வருவார்கள் இத்தனை வருடத்திற்கு இது பயனுள்ளதாக இருக்கும் அப்படி இருக்கும் இப்படி இருக்கும் என்று வந்து "கத்து... கத்து..." என்று சப்தமிட்டுக் கொண்டுள்ளார்கள்.

1.இதுகள் எல்லாம் எங்கே கொண்டு போய் விடும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்...!
2."இது எல்லாம் தவறான வழி...!"

நாம் இந்த ஆன்மீகத்தின் வழியில்... அழியா உணர்வுகளைப் பெருக்கி நல்வழியில் நாம் ஜீவிக்கும் தன்மைக்கு வர வேண்டும். ஆகையால் தயவு செய்து நெறிப்படுத்திக் கொள்ளுங்கள்... நல்வழியில் நீங்கள் வளருவீர்கள்...!

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அருள் மகரிஷிகளின் அருள் சக்தி உங்களுக்குள் பதிவாக வேண்டும் என்று தான் திரும்பத் திரும்ப உபதேசிக்கின்றேன். அந்தப் பதிவின் துணை கொண்டு உங்களை நான் (ஞானகுரு) பிரார்த்திக்கும் பொழுது உங்கள் உடலான ஆலயத்தைச் சுத்தப்படுத்தவும் உங்கள் உயிரான ஈசனுக்கு அமுதைக் கொடுப்பதும் அது அபிஷேகிக்கும் நிலையாகவும் அடைகின்றது.

அதை நீங்கள் சுவாசிக்கப்படும் பொழுது உங்கள் உடலுக்குள் சென்று நல்ல உணர்வுகளைச் சேர்ப்பிக்கும் சந்தர்ப்பமாக இப்போது உருவாகின்றது.
1.உங்கள் உயிரைக் கடவுளாக மதித்து உங்கள் உடலைக் கோவிலாக மதித்து நான் தியானிக்கின்றேன்.
2.உங்களை எண்ணி நல்லதாக வேண்டும் என்று நான் எண்ணும் பொழுது எனக்குள்ளும் அது உமிழ் நீராகி அருள் சக்தியாக மாறுகின்றது
3.அருமருந்தாக மாறுகின்றது... அருள் வழி வாழவும் முடிகின்றது.
4.உங்களால் நானும் நன்மை அடைகின்றேன்... என்னால் உங்களுக்கும் நன்மை ஏற்படுகிறது.

ஆகவே நாம் அனைவரும் குருநாதர் காட்டிய அருள் வழியைப் பின்பற்றுவோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் எது இருந்தாலும்... இந்த உலகம் முழுமைக்குமே தீவிரவாதம் என்ற நிலைகளில் மனிதனுக்கு மனிதனே கொன்று புசிக்கும் நிலையாக வந்துவிட்டது.

1.கருவில் இருக்கும் பிண்டங்களை அழித்து
2.அதையே உணவாக உட்கொள்ளும் நாகரீகம் உலகமெங்கும் பரவி விட்டது.

தாய்லாந்து அமெரிக்கா சீனா ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லாம் கருச்சிதைவாக்கப்பட்டு கருசிதைவான அந்தக் குழந்தைகளை உணவாக எடுக்கப்படும் பொழுது "முதுமையானவன் இளமையாக முடியும்..." என்று விஞ்ஞான அறிவில் கூறப்பட்டு... தவறான வழிகளில் நடந்து கொண்டிருக்கின்றது.

இப்படி நடந்து கொள்வோர் நாளை எங்கே செல்வார்கள்...?

நரமாமிசத்தை உட்கொள்ளும் "அகோரிகள்" இங்கே இந்தியாவில் இருக்கின்றார்கள் சுடுகாட்டில் வெந்து கொண்டிருக்கும் உடல்களை "அதைத் தள்ளி விட்டு எனக்குக் கொடு..." என்பார்கள்.

அவருடைய தசைகளைத் தின்று சொர்க்கத்துக்கு அவனை அனுப்புகிறேன் என்று சொல்லும் அகோரி என்ற சாமியார்களும் உண்டு.

இதைப் போன்ற அசுர உணர்வுகள் பரவிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த உலகைக் காக்க நமது குருநாதர் காட்டிய அருள் வழியில்
1.ஒவ்வொரு உயிரையும் ஈசனாக மதித்து
2.உடலுக்குள் அருள் ஞான சக்திகளைப் பெருக்கி
3.உங்கள் மூச்சும் பேச்சும் உலக இருளை நீக்கிடும் சக்தியாக நீங்கள் அனைவரும் பெற வேண்டும்.

தென்னாடுடைய சிவனே போற்றி... எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...! என்று தென்னாட்டில் தோன்றிய அந்த அகஸ்தியன் தான் துருவனான்... துருவ நட்சத்திரமாக இன்றும் இருக்கின்றான்.

அந்த அருள் சக்தியை நாம் பெற்று எந்நாட்டரையும் பெறச் செய்தால் அவர்கள் அறியாத நிலையில் இருந்து அவர்களும் மாறுபட்டு மனிதன் மனிதன் என்ற நிலைகள் உணர்ந்து அருள் வாழ்க்கை வாழ்ந்து இந்த உடலுக்குப் பின் பிறவியில்லா நிலை அடைய முடியும்.

இந்த நிலை நீங்கள் அனைவரும் பெற வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்... எல்லா மகரிஷிகளையும் வேண்டுகின்றேன்.






## மழை நீர் உருவாகும் விதம்

அகஸ்தியன் தாய் கருவிலிருக்கும் பொழுது நஞ்சினை வென்றிடும் அருள் சக்தி பெற்றான்.

அவன் குழந்தையாகப் பிறந்த பின் அவன் உடலில் இருந்து வெளிப்படும் மணங்கள் நஞ்சு கொண்ட உயிரினங்கள் அவனை அணுகாது அவனைப் பாதுகாக்கும் நிலையாக அமைந்தது.
1.அத்தகைய மணம் உண்மையின் உணர்வின் தன்மையை இயக்கி அதன்வழி அவன் வளர்ந்து
2.வான் வீதியின் உணர்வுகளை நுகர்ந்து வளர்ச்சி பெற்றான்.

நஞ்சை வென்றிடும் சக்தியைத் தாயின் கருவிலே பெற்றான். அதன் வழி கொண்டு வான் வீதியிலிருந்து நுகர்ந்தான் என்றால்... எதை...?

நம் பிரபஞ்சத்தில் உள்ள 27 நட்சத்திரங்களும் பிற மண்டலங்களிலிருந்து விஷத் தன்மையைத் தான் கவர்கின்றது. பால்வெளி மண்டலங்களாக மாற்றிக் கொள்கின்றது.

பால்வெளி மண்டலங்களாக மாற்றும் பொழுது தூசுகளாக வருகின்றது.
1.இந்தத் தூசிகள் சூரியன் அருகிலே வரப்படும் பொழுது மோதுகின்றது.
2.ஒன்றுடன் ஒன்று மோதி எதிர் நிலையாகி மின்கதிர்களாக மாறுகின்றது.

மின் கதிர்களாக மாறும் ஒளிக் கற்றைகளை வெள்ளிக் கோள் எடுத்துக் கொள்கின்றது. அதிலே விஷத்தின் தன்மை பிரிவதைக் கேதுக் கோள் அந்த விஷத்தினைத் தான் வலு கொண்டு கவர்ந்து கொள்கின்றது. அதே சமயத்தில் இணைத்த உணர்வின் தன்மையை ராகுக் கோள் தனக்குள் கவர்ந்து தன்னுடன் இணைத்துக் கொள்கிறது.

இதிலே வரும் ஓசை... சப்தத்தை செவ்வாய்க் கோள் எடுத்துக் கொள்கின்றது. இதிலே வரும் கழிவு ஆவித் தன்மை தனித்தன்மை அடைந்ததைச் சனிக்கோள் எடுத்துக் கொள்கின்றது.

சாதாரணமாக... நாம் சமையல் செய்யும் போது நாம் பல பொருள்களை எடுத்து வேக வைக்கின்றோம் அப்பொழுது அந்தச் சத்தெல்லாம் ஒன்றுடன் ஒன்று கலந்து விடுகின்றது.

ஆவித் தன்மைகள் மேலே செல்லுகின்றது. ஆவித் தன்மை அடைந்தபின் மேகக் கூட்டத்துடன் இணைந்து கொள்கின்றது.
1.அதில் நீர் என்ற நிலைகள் வந்தாலும் மேகக் கூட்டத்திற்குள் கலந்தபின்
2.அதன் உணர்வின் தன்மையை பல வர்ணங்களில் பல ஒளிக் கற்றைகள் மின்னல்கள் தாக்கப்படும் பொழுது
3.அதில் கலந்து கொண்ட உணர்வின் தன்மையுடன் மோதுகின்றது….
4.அப்பொழுது பளீர்…ர்ர் என்று மின்னல் ஆகிறது... மின் கதிர்கள் அதைக் கருக்குகின்றது.
5.கருக்கிய நிலைகள் கொண்டு ஆவித் தன்மை மேகம் சுத்தம் ஆகின்றது.
6.சுத்தமான பின் இதிலே பிரிந்த உப்புச் சத்தின் தன்மை கலக்கப்படும் பொழுது மழை நீராகப் பெய்கின்றது.

எத்தனையோ வகைகள் இப்படிச் செல்கின்றது.

ஆனால் மனிதனான பின் விஷம் கலந்த உணர்வின் தன்மை (தொழிற்சாலைகளிலிருந்து வருவது) ஆவியாக மாறப்படும் பொழுது வான் வீதியில் சென்று அது மேகக் கூட்டங்களாக மாறி மழை நீராக வரப்படும் பொழுது "கெமிக்கல் மழை..." என்று விஞ்ஞானத்தின் தன்மையால் ஏற்படுகின்றது.

**ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்**

துருவ நட்சத்திரத்தின் சக்தியை ஒவ்வொரு நாளும் வளர்க்க
1.நாம் உடல் ஆரோக்கியம் பெறுவதோடு மட்டுமல்லாதபடி...
2.அது வலுவாகும் பொழுது இந்த உடலை விட்டுச் சென்றால் இன்னொரு பிறவிக்கு வராதபடி
3.துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டதிற்கு நாம் சென்று இந்த உடல் பெற்ற நஞ்சுகளை அங்கே கரைத்துப்
4.பிறவி இல்லா நிலை அடையவும் இது உதவும்.

அதற்கு நம்முடைய முன்னோர்கள் மூதாதையர்களை விண் செலுத்தினால் அவருடைய தொடர் கொண்டு நாம் அந்தச் சக்தி எளிதில் பெற முடியும். துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெருக்கித் தீய உணர்வுகளை நல்ல அணுக்களாக நாம் மாற்றிக் கொள்ள முடியும்.

எப்படி ஊசி மூலம் மருந்தை ஏற்றி அதை இன்ஜெக்ஷன் செய்து இரத்தத்தில் கலக்கச் செய்து நோய் உருவாக்கும் அணுக்களை மாற்றி அமைக்கின்றார்களோ அதைப் போன்று
1.துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் புருவ மத்தியில் எண்ணி
2.கண்ணின் நினைவை உடலுக்குள் செலுத்தி இரத்த நாளங்களில் கலக்கச் செய்து
3.உடல் முழுவதும் பரவச் செய்ய வேண்டும்.

உடல் உறுப்புகளை உருவாக்கிய அணுக்களில் எல்லாம் காந்தம் உண்டு. இதை இணைத்து அங்கே பெருக்கச் செய்ய வேண்டும். உடலில் இருக்கக்கூடிய தீமைகள் அனைத்தும் நீங்கும். இது ஒரு பழக்கத்திற்கு வர வேண்டும்.

கஷ்டம் என்பதைத் தள்ளி விடுங்கள். குடும்பத்தில் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று எண்ணுங்கள்.

நீங்கள் இடும் மூச்சலைகள் அனைத்தும் இந்தக் காற்று மண்டலத்திலே பரவி இந்தப் பூமியும் பரிசுத்தமாகும்... ஊரில் வாழும் மக்கள் அனைவரும் தெளிவாக இது உதவும்.

ஆகவே இந்தத் தியானத்தை மேற்கொண்டு துருவ நட்சத்திரத்தின் உணர்வலைகளைப் பரப்புங்கள்
1.இந்தக் காற்று மண்டலத்தில் உள்ள நச்சுத்தன்மைகளை அகற்றிடுங்கள்
2.அருள் ஞானத்தின் உணர்வைக் குவியுங்கள்... எல்லா இடங்களிலும் பரவச் செய்யுங்கள்
3.இந்த பூமியில் மன பேதம் இன பேதம் மொழி பேதம் என்ற நிலைகளை மாற்றி அமையுங்கள்.

அருள் உணர்வு கொண்டு சகோதர உணர்வை வளர்த்து ஒன்றுபட்டு வாழும் சக்தியைப் பெருக்குங்கள். இதை நாம் செய்தோமென்றால் சகோதர உணர்வுகள் வளரும். அருள் ஞானம் பெருகும்.
1.அருள் வாழ்க்கை வாழும் மகரிஷிகள் நாடாக மாற்றலாம்
2.இதை வைத்து உலகையே மாற்ற முடியும்.


ஏனென்றால் அணுவிசையால் இந்த உலகையே அழித்திடும் தன்மைகள் வரப்படும் பொழுது அந்த அணுக்கதிரியக்கங்கள் பரவாதபடி தடுத்து நிறுத்தும் சக்தி
1.இந்தியாவில் உள்ள நாம் அனைவரும் பெறுவோம் என்றால்
2.உலகையும் நாம் காக்கும் திறன் பெற முடியும்... அணுகுண்டுகள் வெடிக்காதபடி நாம் செய்ய முடியும்.
3.விஷத்தன்மை பரவாதபடி கதிரியக்கங்கள் வெளிப்படாதபடி செய்ய முடியும்.

முழுமையாக இதை நம்புங்கள் உங்களுக்கு அந்தத் திறன் உண்டு உலக இருளைப் போக்குவோம். அருள் ஞானத்தைப் பெருக்குவோம். விஞ்ஞானத்தின் செயலினால் வரும் தீமைகளில் இருந்து மக்களை விடுவிப்போம்.

ஆகவே... அருள் உணர்வுடன் வாழ்க்கையை நீங்கள் தொடருங்கள் என்று பிராத்திக்கின்றேன்.




அணு விசையால் உலகையே அழித்திடும் தன்மைகள் வரப்படும் போது அந்த அணுக் கதிரியக்கங்கள் பரவாதபடி தடுத்து நிறுத்தும் சக்தி நாம் அனைவரும் பெறுவோம் என்றால் நாம் உலகைக் காக்கும் திறன் பெற முடியும்...! அணு குண்டுகள் வெடிக்காதபடி... விஷத் தன்மை பரவாதபடி... கதிரியக்கங்கள் வெளிப்படாதபடி... செய்ய முடியும்.




**விஞ்ஞானத்தின் விளைவால் வரும் விஷத்தை அடக்கி அதை ஒளியாக மாற்றுங்கள்**

இன்று "பல கெமிக்கலைக் கலந்து…" பல விதமான வர்ணங்களை உருவாக்குகின்றார்கள். அத்தகைய வர்ணங்களை ஆடைகளில் ஏற்றப்படும் பொழுது விஷத்தன்மையாகின்றது.

1.அந்த ஆடையை நாம் அணிந்திருக்கும் பொழுது அது உடலுடன் ஒட்டி
2.எந்த விஷத்தின் தன்மை (வர்ணமாக) ஆடையில் கலக்கப்பட்டதோ
3.அது வெளிப்பட்ட உணர்வுகள் சூரியனுடைய காந்த சக்தியால் கவரப்பட்டுக் காற்றிலே கலந்திருப்பது
4.நம் ஈர்ப்பிற்குள் வந்து உடலில் ஜீவன் பெறும் சக்தியாக மாறும்.

இதன் வழி அந்த விஷத்தன்மைகள் நம் உடலுக்குள் சிறுகச் சிறுக ஊடுருவத் தொடங்கும். எதிர்மறையான விளைவுகளை உருவாக்குகின்றது.

ஆனால் நாம் தவறு செய்யவில்லை...!

விஞ்ஞான உலகில் வாழுகின்றோம்... ஆனந்தமாக இருக்கின்றோம். ஆனால் மேலே சொன்ன விஷ தன்மைகள் பரவி அணுக்களின் தன்மை மாற்றப்படும் பொழுது உறுப்புகள் சிதைந்து விட்டால் "மாற்று உறுப்புகளைச் செய்து..." மனிதனை வாழ வைக்கின்றார்கள்.

எத்தனையோ வகையான மாற்றங்களை இன்று பார்க்கின்றோம் அல்லவா...!

சர்க்கரைச் சத்து உடலில் அதிகமாகும் பொழுது...
1.மற்ற இணைந்து வாழ்ந்து மகிழ்ச்சியூட்டும் உணர்வுகளில் அது பிரிக்கப்படும் பொழுது...
2.ஒன்று சேர்த்து வாழும் அந்த சர்க்கரைச் சத்து என்ற நிலைகள் ரத்தத்தில் அதிகமாகி விடுகின்றது.
3.சர்க்கரைச் சத்து என்று சுவை மிக்க நிலை வரும் போது தீய அணுக்களைப் பரப்பும் தன்மை வருகின்றது.
4.ரத்தத்திலே கலக்கும் நல்ல அணுக்களை மாற்றி... ரத்தத்தில் இருக்கும் உணர்வை இது எடுத்துக் கொள்கின்றது.
5.ஆனால் நீராக மாற்றி விடுகின்றது.

ரத்தம் நீராக மாறி விட்டால் என்ன ஆகும்...? ஊடுருவித் தன் நிலைகளை மாற்றி விடுகிறது.

மனிதனாக வாழும் காலத்தில்... உடலுக்குள் தீய விளைவுகளை ஏற்படுத்தும் இத்தகைய கெமிக்கல்களை நுகர்ந்து விட்டால் "டாக்டரிடம் சென்றால்... ரத்தத்தைக் காணோம்..." என்பார்.

மனித வாழ்க்கையில் இப்படி எல்லாம் விஞ்ஞான உலகில் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டுள்ளது. இதை மாற்றுவது யார்...? இதை மாற்றி அமைத்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் அல்லவா.

அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்...? இந்த விஞ்ஞான உலகில் இத்தகைய தீய விளைவுகளிலிருந்து மனிதன் தப்ப வேண்டுமா இல்லையா...?

அதற்குத் தான் ஆத்ம சக்தி என்ற கடுமையான ஆயுதத்தைக் கொடுத்துள்ளோம். பல விதமான உணர்வுகள் தாக்கப்படும் பொழுது
1.அந்த உணர்வின் உணர்ச்சியின் இயக்கங்களைப் பற்றி இந்த உபதேச வாயிலாகச் சொல்லப்படும் பொழுது இதுவும் பதிவாகின்றது.
2.இந்த உணர்வால் வரப்படும் பொழுது தன்னை எது இயக்குகின்றது...? என்பதைத் தன்னை அறிந்து கொள்ள முடியும்.

அடுத்த நிமிடமே ஆத்ம சுத்தி செய்தால் உங்களுடைய மனக் கலக்கம் நீங்குகின்றது... வரும் வேதனை உணர்வுகள் தடுக்கப்படுகின்றது... துருவ நட்சத்திரத்தின் சக்தி ஈர்க்கப்படுகின்றது... அதன் வலுவின் தன்மை நமக்குள் சேர்க்கப்படுகின்றது.

காரணம்... இன்று மின்னல்கள் தாக்கப்படும் பொழுது வெள்ளிக் கோள் அந்த உணர்வின் அலைகளைத் தனக்குள் எடுத்துக் கொள்கின்றது. இதைப் போல்
1.உங்களுக்குள் அந்த அருள் ஞானிகள் உணர்வைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பதிவு செய்யப்படும் பொழுது
2.மின்னல்கள் கடுமையான நிலைகளை எடுத்தாலும்
3.இந்த உணர்வின் தன்மை கண் கொண்டு பார்த்தாலும் உயிர்வழி ரத்தத்தில் கலக்கப்பட்டு
4.உடலில் உள்ள அணுக்கள் ஒளிக்கற்றைகளாக மாற்றும்.

மின்னல் (ஒளியின் தன்மை) என்பது 27 நட்சத்திரங்களின் எதிர்நிலையான போர் மறை தான் அது.




## வினை... வினைப்பயன் என்று சொல்வதன் பொருள்

இன்று கசாப்புக் கடையில் பார்க்கலாம்... அங்கே உயிருடன் அறுக்கின்றார்கள்... சூடாக இருக்கும் தண்ணீரில் "டபக்" என்று முக்குகின்றார்கள்... அது வேதனைப்படுகிறது. ஆனால் அந்த மாமிசங்களைத் தான் உட்கொள்கின்றோம்.

சுடு தண்ணீரில் முக்கும்பொழுது அவன் பாவத்தைச் செய்கின்றான்... அதை நாம் உற்று நோக்குகின்றோம். ஆனால் அதற்காக அதை உட்கொள்ளாமல் இருப்பதில்லை.

1.சுடு தண்ணீரில் முக்கும் பொழுது கஷ்டமாக இருக்கின்றது.
2.அந்தப் பாவ நிலைகள் நமக்குள் பாவ வினையாகச் சேருகின்றது.

ஏனென்றால் கண்ணிலே உற்றுப் பார்த்தோம்... சுடு தண்ணீரில் அது எப்படி எரிகின்றதோ அந்த உணர்வை நுகர்கின்றோம்... நம் ரத்தத்தில் அது கலக்கின்றது.

1.ஒரு நான்கு ஐந்து தடவை இவ்வாறு கோழிகளை உயிருடன் சுடு தண்ணீரில் அமுக்கும் போது பார்த்தோம் என்றால்
2.அந்த எரிச்சல் நிச்சயம் நம் உடலில் உருவாகும்.

அந்தக் கோழியைத் தான் சாப்பிடுகின்றோம். அதனுடன் சேர்ந்து அது எப்படி எரிச்சல் அடைந்ததோ அந்த எரிச்சல் நம் உடலில் நிச்சயம் வரும்.

கடைக்காரன் காசுக்காக அவ்வாறு செய்கிறான். பாவமே...! என்று பார்க்கின்றோம். உணவாக உட்கொள்வதற்காக நாம் இதை நுகர வேண்டி இருக்கின்றது. இருந்தாலும் உட்கொள்ளும் போது ருசித்து உட்கொள்கின்றோம்.

ஆகவே இந்த உணர்வின் இயக்கங்கள் எப்படி இருக்கும்...? சற்று சிந்தித்துப் பாருங்கள். இது எல்லாம் பாவ வினைகள்.

ஒருவன் தீய செயலைச் செய்கின்றான். "இப்படிச் செய்கின்றானே..." என்று நாம் கூர்மையாக உற்று நோக்கிப் பார்க்கின்றோம்... அது தீய அலைகள்...!
1.அந்த உணர்வை நுகர்கின்றோம்.
2.நம் ரத்தத்திலே கலந்து அணுவாக மாறுகின்றது. இது தீய வினை.

ரோட்டில் ஒருவன் எவனையோ பார்த்து நாசமாகப் போ...! என்று சாபமிடுகின்றான். அது சாப அலைகள்.
1.நாம் அதைப் பார்க்க நேர்ந்தால் அவன் விடும் சாபத்தை நுகர்ந்து விடுகின்றோம்.
2.உடலுக்குள் சென்ற பின் அது தீய செயல்களையே செய்கின்றது.

ஆரம்பத்தில் தாய் கருவிலே சிசுவாக இருக்கின்றோம். தாய் இது போன்று எத்தனையோ அதிர்ச்சியான நிலைகளையோ தவறு செய்பவர்களையோ உற்றுப் பார்த்து நுகர்ந்திருக்கும்.
1.தாயின் இரத்தத்தின் வழியாக அந்த உணர்வுகள் கருவிலேயும் சேர்ந்து விடுகிறது
2.இது பூர்வத்தில் வரும் வினை.

இப்படிப் பல விதமான உணர்வுகள் அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கு எது எதை நுகர்கிறோமோ அவை எல்லாம் நமக்குள் வந்து சேருகின்றது.

பாவத்தைப் பார்க்கும் பொழுது “அடப் பாவமே…” என்று எண்ணுகிறோம்… அந்தப் பாவத்தை வளர்க்கின்றோம். தீய செயல்கள் செய்பவனை உற்றுப் பார்க்கும் பொழுது தீய வினைகளை நமக்குள் வளர்க்கின்றோம். அந்தந்த அணுக்கள் உருவான பின் அதனதன் ருசியையேத் தேடுகின்றது.

இந்த வினைகளை எல்லாம் போக்க வேண்டுமல்லவா…!

வினை என்றால் வித்து. செடி கொடிகள் வளரும் பொழுது அதில் வித்துக்கள் உருவாவது போல்
1.நாம் நுகர்ந்த உணர்வுகள் அனைத்தும் வினையாகி உணர்ச்சியாக இயக்கி
2.உடலில் விளையும் பொழுது அணுக்களாக மாறுகின்றது… வித்தாக மாறுகின்றது…!

சொல்வது அர்த்தம் ஆகிறது அல்லவா…! இவை அனைத்தையும் நமது சாஸ்திரங்கள் தெளிவாகக் கொடுத்துள்ளது.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அந்தந்தக் கால கட்டங்களில் குருநாதர் காட்டிய மெய் உணர்வுகளை அவ்வப்பொழுது துணுக்குத் துணுக்காகத் தான் யாம் (ஞானகுரு) சொல்லி வந்தது. அதை ஒன்று சேர்த்துப் பதிவாக்கிக் கொண்டு வந்தால் உங்களுக்குள் உயர்ந்த ஞானம் கிடைக்கும்.

நீங்கள் வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. தியானத்திற்கு முன்
1.பாலோ அல்லது தண்ணீரோ அல்லது ஒரு பதார்த்தத்தை வைத்து
2.தியானம் முடிந்த பின் அந்தப் பொருளை எடுத்து அதில் என்ன வாசனை வருகிறது என்று பாருங்கள்…?
3.நல்ல மணங்கள் அதிலிருந்து வரும். சுவாசிக்கும் பொழுது உங்களுக்குள்ளும் அருள் மணம் கிடைக்கும்.

ஒவ்வொருவரும்… ஒவ்வொரு ஊரிலும்… துருவ நட்சத்திரத்தின் அருள் உணர்வுகளை உலகம் முழுவதும் பாய்ச்சி உலக மக்கள் மன பேதமின்றி இன பேதம் இன்றி மொழி பேதம் இன்றி சகோதர உணர்வுடன் ஒன்றுபட்டு வாழும் தன்மை பெற வேண்டும் என்று எண்ணி ஏங்கித் தியானியுங்கள்.

அகஸ்திய மாமகரிஷிகள் அருள் சக்தியும் துருவ மகரிஷிகள் அருள் சக்தியும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் மேகங்களிலே படர்ந்து மேகங்கள்

கூடி நல்ல மழை பெய்து ஏரி குளங்கள் அனைத்தும் நிரம்பி தாவர இனங்கள் செழித்து ஊரும் உலகமும் நலம் பெற வேண்டும் என்று ஒரு பத்து நிமிடமாவது

1.ஆங்காங்கே இருக்கக்கூடியவர்கள்... உலகில் எங்கிருந்து தியானம் செய்பவர்களும் இந்த உணர்வுகளை வானிலே பாய்ச்சுங்கள்.

2.மேகங்களைக் கூட்டி மழை பெய்ய வேண்டும் என்று தியானியுங்கள்

3.இப்பொழுது உபதேசிக்கக் கூடிய உணர்வுகள் இந்தப் பூமி முழுவதும் படரப்பட்டு

4.அந்த மழை நீர் மூலமாக தாவர இனங்களிலே இணைந்து அருள் தாவர இனங்களாக விளையும்.

ஆனால் அதே சமயத்தில் மனித உடலில் எத்தனை வேதனைப்பட்டோமோ நோய்களாக வந்து நம் உடலை வேதனைப்படச் செய்கின்றதோ இந்த உணர்வெல்லாம் என்ன செய்கிறது...?

நாம் எந்தத் தாவர இனத்தை உணவாகப் புசித்தோமோ... நம் உடலில் இருந்து வெளிப்படும் வேதனைப்படும் உணர்ச்சிகள் தாவர இனங்களில் பட்டு அந்தத் தாவர இனத்தையே உண்டு விடுகின்றது. நமக்கு உணவில்லாது ஆக்கி விடுகின்றது.

உரத்தைப் போட்டுப் பூச்சி மருந்தைப் போட்டு பயிர்களை வளர வைத்து மகசூல் எடுக்கலாம் என்று கொண்டு வருவதற்கு முன்

1.நாம் வெளிப்படுத்தக்கூடிய வேதனை என்ற விஷத்தின் தன்மை

2.தாவரங்களில் அதிகமாகப் படர்ந்து விஷத் தாவரங்களாக அது விளைந்து

3.அதையே நாம் மீண்டும் உணவாக உட்கொள்ளும் நிலை ஆகிவிடும்.

ஆகையினால் இதை மாற்றி அமைக்க முதலில் சொன்ன மாதிரி அகஸ்திய மாமகரிஷிகள் உணர்வுகளை வானிலே பாய்ச்சி மேகங்களைக் கூடச் செய்து நல்ல மழை பெய்ய வேண்டும் என்று மேகங்களில் எண்ணத்தைச் செலுத்தினால் அந்த மழை நீர் தாவரங்களில் பட்டு இணையும்

1.காரணம் எல்லாவற்றிலும் காந்தப் புலனறிவுகள் உண்டு.

2.அந்த அலைகளை எடுத்து நாம் பாய்ச்சி அதற்குள் இணைக்க முடியும்.

எப்படி ஒரு அணு பட்டு அந்தச் சத்தினை நுகர்ந்து அதை வைத்து உடல் பெற்றதோ இதைப்போல இதே சத்தினை நுகர்ந்து அதன் உணர்வின் தன்மை மலமாக்கி அந்தத் தாவர இனங்களுக்கு நாம் பாய்ச்சும் போது நல்ல சத்தாக மாறும்.

பயிரினங்களில் அகஸ்திய மாமகரிஷிகளின் அருள் சக்தியும் துருவ மகரிஷிகளின் அருள் சக்தியும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர வேண்டும் என்று இது ஒரு கூட்டமைப்பாகப் பாய்ச்சிப் பாருங்கள்.

1.உங்கள் வயலை நினைவுக்குக் கொண்டு வாருங்கள்… பயிரினங்களை நினையுங்கள்
2.அதற்குள் அருள் சக்திகளைப் படரச் செய்யுங்கள்… நல்ல அணுக்கள் உருவாகி நல்ல வளர்ச்சி பெறும்.

வைரஸ் என்ற அணுக்கள் நம் உடலில் பாய்ந்தால் நம்மைக் கொல்கிறது. நம் உறுப்புகளைக் கொல்லக்கூடிய அந்தத் தீய அணுக்களைக் கொன்று நல்ல உறுப்புகளை உருவாக்கக்கூடிய அளவுக்கு விஞ்ஞான அறிவு கொண்டு "அத்தகைய வைரஸ்களாக… மாற்று மருந்தாக உருவாக்குகின்றார்கள்…."

இதே போல் மனிதனான நாம் அருள் உணர்வுகளை மழை மேகத்துடன் கலந்து விட்டால் நல்ல அணுக்களாக உருவாக்க முடியும்.

ஆனால் நாம் இன்று உலகெங்கிலும் என்ன செய்கின்றோம்…?

தவறான உணர்வுகளையும் வேதனைப்படும் உணர்வுகளையும் மனிதனுக்கு மனிதன் அழிக்க வேண்டும்… மற்றவனைக் கொன்று அவனை வீழ்த்தி விட்டு அவன் செல்வத்தை அபகரித்துத் தான் வாழ வேண்டும்… என்ற உணர்வுகள் தான் அதிகமாகப் படர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த உணர்வுகள் எல்லாம் தாவரங்களில் பட்டால் பயிரினங்களும் அழிகின்றது. உரத்தையும் மருந்தையும் போட்டு விளைய வைத்தாலும் அதை நாம் உணவாக உட்கொள்ளும் பொழுது நம் உடலுக்குள் விஷத் தன்மை பெருகி நல்ல குணங்களைக் கொன்று குவித்துவிடும் (அது தான் இன்று இயங்கிக் கொண்டுள்ளது)

இதைப் போன்ற நிலைகளிலிருந்தெல்லாம் நீங்கள் மீள்தல் வேண்டும்.
1.மற்றவர்களுக்கும் இதைத் தெரியப்படுத்தி மேகங்களைக் கூடச் செய்து அருள் மழையாகப் பொழிய வேண்டும்…
2.ஊர் செழிக்கட்டும் நாடு செழிக்கட்டும் என்று இது போன்று நாம் செய்யப் பழக்க வேண்டும்.

விவசாயம் செய்பவர்கள் இதைப் போன்று செய்து பழக வேண்டும். உங்கள் நிலத்தை உற்றுப் பார்த்து
1.அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி படர வேண்டும் என்று
2.உங்கள் கண்ணின் நினைவை அங்கே உற்றுப் பார்த்து அந்தச் சக்திகளைப் பாய்ச்சுங்கள்.
3.பயிரினங்கள் செழித்து வளர வேண்டும் என்று நினைவை உணர்வைப் பாய்ச்சுங்கள்... உங்கள் எண்ணம் அங்கே ஊடுருவும்.

ஏனென்றால் தாவரங்களில் விளைந்ததை உணவாக எடுத்துத் தான் நாம் வளர்ந்து வந்திருக்கின்றோம். அந்த உணர்வின் சத்து தான் நமக்குள் எண்ணங்களாக இருக்கின்றது அந்த எண்ணத்தைக் கொண்டு அருள் உணர்வுகளை நாம் பாய்ச்ச முடியும்

1.மனிதர்கள் நாம் தான் இதைச் செயல்படுத்த முடியும்...
2.அவசியம் நாம் இதைச் செய்ய வேண்டும்.




ஆங்காங்கே இருக்கக்கூடியவர்கள்... உலகில் எங்கிருந்து தியானம் செய்பவர்களும் இந்த உணர்வுகளை வானிலே பாய்ச்சுங்கள். மேகங்களைக் கூட்டி நல்ல மழை பெய்ய வேண்டும் என்று தியானியுங்கள். இந்த உணர்வுகள் பூமி முழுவதும் படரந்து மழை நீர் பெய்து தாவர இனங்களிலே இணைந்து அருள் தாவர இனமாக விளையச் செய்யும். மனிதர்கள் தான் இதைச் செயல்படுத்த முடியும்... அவசியம் செய்ய வேண்டும்.




## உலக மாற்றத்தின் காலம்

ஒவ்வொரு நிமிடமும்... ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்... எது... எவ்வாறு... எதனுடன் சேர்ந்தபின்... அதன் உணர்வுகள் எப்படி மாறுகிறது...? என்ற உண்மையை அடிக்கடி சொல்லி வரும் போது அது உங்களுக்குத் தெளிவாகின்றது

1.அருள் உணர்வை நீங்கள் வளர்க்க வேண்டும்...
2.மறந்து விடாதீர்கள்...! கருவில் வளரும் குழந்தைகளுக்கு அந்த அருள்

ஞானத்தை உங்கள் வீட்டிலிருந்தே ஊட்டுங்கள்.
3.அருள் உணர்வு பெற்று அந்தக் குழந்தைகள் வளர்ந்தால் உங்கள் துயரைத் துடைப்பான்... அருள் ஞானத்தைப் பெருக்குவான்... உலக சக்திகளைப் பெறுவான்.
4.அவன் பேச்சும் மூச்சும் உங்களை நலமாக்கும் உங்கள் வீட்டையும் நலமாக்கும் ஊரையும் நலமாக்கும்.
5.இப்படி அருள் ஞானிகளை நாம் உருவாக்க வேண்டும்.

அப்பொழுது தான் இந்த உலகத்தில் விஞ்ஞானத்தால் வரும் அஞ்ஞான வாழ்க்கையில் இருந்து விடுபட்டு மெய் ஞான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்ல முடியும்.
1.மூவாயிரத்திற்கு முன் பேரருள் பெற்ற உலகமாக மாறி
2.இங்கே படர்ந்துள்ள இருள்களை அகற்றி விட்டுப் பேரின்ப பூமியாக மாறும்.

அதே சமயத்தில்... மூவாயிரம் ஆவதற்கு முன் இந்த பூமியில் நீர் நிலைகள் அதிகமாகிவிடும். நாளடைவில் இது சூரியனைக் கடந்து சென்றுவிடும்... பனிப்பாறைகளாக மாறும்.

குருநாதர் காட்டிய அருள் வழியில் நாம் நுகர்ந்த அருள் உணர்வுகள் வளரப்படும் பொழுது இந்த அருள் ஞானிகள் உணர்வின் தன்மை "துருவ நட்சத்திரத்துடன் நாம் இணையும் பருவம் வரும்..."

ஒளியின் சக்தியாக... என்றும் நிலையாக... பிறவி இல்லா நிலையாக... பேரின்ப நிலையாக... என்றும் அருள் ஞான உணர்வாக... வரும் இருளை அகற்றிடும் உணர்வாக... "என்றும் ஏகாந்தமாக வாழும் சக்தியை" நாம் பெறுகின்றோம்.

ஆகவே அருள் ஞானக் குழந்தைகளைக் கருவிலேயே உருவாக்கி விடுங்கள். அருள் உணர்வைப் பெருக்கச் செய்யுங்கள்.

1.இந்தப் பூமி அதனுடைய செயலைக் கூடிய சீக்கிரம் இழக்கத் தான் போகின்றது.
2.எப்படித்தான் இருந்தாலும் இந்த உடலும் நாளடைவில் பாழடையத்தான் போகின்றது.

இந்த உண்மைகளை உணர்ந்து நம்முடைய எல்லை... பிறவி இல்லா நிலை... சப்தரிஷி மண்டலம் அடைவது தான்...! என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வாழுங்கள்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

யாம் ஞானகுரு) சொன்ன முறைப்படி யார் இந்தத் தியான வழியினைச் சீராகக் கடைப்பிடித்து வழி நடக்கின்றார்களோ "அவர்களுக்கு நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும்..."

ஆனால் தீமை என்ற அடிப்ப்படையில் ஆசை நிலையில் அதைக் கொண்டு வந்தால் பாலிலே பாதாமைப் போட்டுப் பல சத்துக்களைப் போட்டு விஷத்தைப் போட்ட மாதிரி ஆகிவிடும்.

அதாவது... செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த ஆசையுடன் தியானத்திற்கு வந்தார்கள் என்றால்... நிச்சயம் அவர்களுக்குக் கெடுதலாகும் அவர்கள் வார்த்தையைக் கேட்டு வழி நடப்பவர்களுக்கும் கெடுதலாகும்.

ஏனென்றால்
1.அவர்கள் ஆசையைக் கூட்டப்படும் பொழுது அதே ஆசை அடுத்தவர்களுக்கும் வந்து சேர்ந்து விடுகின்றது
2.கடந்த காலங்களில் இப்படித்தான் யாம் கொடுத்த பல உயர்ந்த சக்திகளை எல்லாம் இப்படித் தான் கெடுத்து விட்டார்கள்.

அதையெல்லாம் எவ்வளவு நாள் அடக்கி வைத்திருந்தேன்... ஆனால்
1.நல்லதை எண்ணி ஏங்கி வருபவர்களுக்கு அது எப்படியும் தனித் தனித் தன்மைகளில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று
2.இப்பொழுது விளக்கமாகச் சொல்லி வருகின்றேன்... அருள் உணர்வுகளைக் கிடைக்கும்படி செய்து கொண்டிருக்கின்றேன்..

என்னை நீங்கள் தேடுவதற்குப் பதில் எங்கிருந்தாலும் அங்கே அமர்ந்து அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும்... எங்கள் இரத்த நாளங்களில் கலக்க வேண்டும் எங்கள் உடலில் இருக்கக்கூடிய ஜீவான்மாக்களும் ஜீவணுக்களும் பெற வேண்டும்.
1.எங்கள் உடலில் அறியாது சேர்ந்த நோய்கள் நீங்க வேண்டும்
2.சர்வ தோஷங்களையும் நீக்கக்கூடிய அருள் சக்தி பெற வேண்டும் என்று
3.மறுபடி மறுபடி இந்த உணர்வைக் கூட்டிக் கொண்டே வாருங்கள்.

உட்கார்ந்து தியானியுங்கள்.. இதையே எண்ணி ஒரு பழக்கமாகக் கொண்டு வந்தால் உங்கள் வாழ்க்கையில் வரக்கூடிய துன்பங்களைப் போக்க முடியும்.

நீங்கள் அந்தச் சக்தி பெற வேண்டும் என்பதற்குத்தான்
1.அந்த மகரிஷிகளின் அருள் சக்தி உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று
2.உங்களை எண்ணிச் சதா நான் தவம் இருக்கின்றேன்.

நண்பன் என்று அவன் அமெரிக்காவில் இருந்தாலும் எனக்குத் துரோகம் செய்தான் பாவி...! என்றால் எப்படிப் புரையோடி அவனை இயக்குகின்றதோ... அதே சமயத்தில்... நன்மை செய்தான் என்று எண்ணினால் எப்படி விக்கலாகிறதோ அதைப் போன்று "உங்களை எண்ணி நான் தவம் இருக்கும் பொழுது அந்தச் சக்தி உங்களுக்கு எளிதில் கிடைக்கும்..."

ஏக்கமாக இருக்கும் பொழுது உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றது... ஆகவே ஏங்கித் தியானிக்க வேண்டும்.

ஆனால் "ஆசையை வேறு பக்கம் வைத்து" அவன் இப்படிச் செய்கின்றான்... இவன் ஏன்னைக் கேவலமாகப் பேசுகின்றான்... இவன் என்னைத் தவறாகச் சொல்கின்றான்... என்ற இந்த உணர்வு வரும் போது கலக்கமாகிறது.
1.என்னா சாமி...? எல்லாம் செய்தேன் ஒன்றும் நடக்கவில்லையே...! என்பார்கள்.
2.ஏனென்றால் இந்த ஆசையோடு கலக்கப்படும் பொழுது இந்தக் கலக்கம் தான் வரும்.

ஆகவே... தியானத்தைச் சீராகக் கடைபிடித்து வாருங்கள்... பேரருளைப் பெறக்கூடிய தகுதி பெறுவீர்கள்.

நீங்கள் எல்லோருமே துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெருக்கி இந்தக் காற்று மண்டலத்திலே சூழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நச்சுத்தன்மைகளை விரட்டக் கூடியவர்களாக நீங்கள் வளர்ச்சி பெற வேண்டும்.

எல்லாருக்கும் அதைக் கிடைக்கக் கூடிய சக்தியாக நீங்கள் பெற்று... விஞ்ஞான அறிவால் வரும் பேரழிவிலிருந்து மீட்க வேண்டும்.




நம் நண்பன் அமெரிக்காவில் இருந்தாலும் எனக்குத் துரோகம் செய்தான் பாவி...! என்றால் எப்படிப் புரையோடி அவனை இயக்குகின்றதோ... அதே சமயத்தில்... நன்மை செய்தான் என்று எண்ணினால் எப்படி விக்கல் ஆகிறதோ அதைப் போன்று "நான் உங்களை எண்ணித் தவமிருக்கும் போது அந்தச் சக்தி நீங்கள் எளிதில் பெறுவீர்கள்..."

ஏக்கமாக இருக்கும் பொழுது உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது... ஆகவே ஏங்கித் தியானியுங்கள்.




## டெலிபதி என்பது உண்மைதான்

இந்த உபதேசத்தின் வாயிலாக உங்களைத் தியான நிலைக்கே அழைத்துச் செல்கின்றோம்.

1.வாழ்க்கையில் வந்ததை எல்லாம் மறந்து விட்டு
2.உங்களை எல்லாம் நேரடியாக அந்தத் துருவ நட்சத்திரத்திற்குத் தான் கொண்டு செல்கின்றோம்.

3.இந்த உணர்வுகள் சேரச் சேர உங்கள் உடலில் இருக்கக்கூடிய அணுக்கள் எல்லாம் ஒளியாக மாறும்.

யாம் உபதேசம் கொடுக்கும் பொழுது நீங்கள் என்ன செய்கின்றீர்கள்…? வீட்டில் பொருட்களை எல்லாம் அப்படியே வைத்து விட்டு வந்திருக்கின்றோம்…! கதவு திறந்திருக்கிறது…! ஒருவேளை திருடன் வந்து விடுவானா…! என்று நினைத்தால்… திருடன் நிச்சயம் அங்கே போவான்.

அதே போன்று வீட்டை விட்டு விட்டு வந்து விட்டோம்… நம் பிள்ளைகள் எல்லாம் அங்கே என்ன செய்கின்றதோ…? ஏது செய்கின்றதோ என்று எண்ணினால் அங்கே ஏதாவது அவர்கள் நிச்சயம் குறும்புத்தனம் செய்வார்கள்.

நான் நினைத்தேன்… நினைத்த மாதிரி நடந்து விட்டதே என்று சொல்வீர்கள்.

ஆனால் வீட்டில் எல்லாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று எப்படி எண்ண வேண்டும்…?
1.மகரிஷிகளின் அருள் சக்தி எங்கள் வீடு முழுவதும் படர வேண்டும்.
2.அங்கிருப்பவர்கள் அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று இங்கிருந்து எண்ணி அதை அங்கே அனுப்ப முடியும்.
3.டெலிபதி போன்று இது வேலை செய்யும்.

உங்கள் அனுபவத்தில் நீங்கள் அதை நிச்சயம் உணர முடியும்.

துரோகம் செய்தான் பாவி… அவன் உருப்படுவானா…? என்று பகைமை கொண்டவனை நாம் எண்ணினால் "அவன் அமெரிக்காவில் இருந்தாலும்…" அவனைச் சென்று இந்த உணர்வு ஆட்டிப் படைக்கிறது எல்லவா…!

அது போன்று தான் நம் குடும்பத்தில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு என்றோ… நாம் செய்யும் தொழிலுக்கு நல்லதோ என்று இருந்தாலும்…
1.நாம் பாய்ச்சும் அந்த உயர்ந்த சக்தி அங்கே சென்று நல்லதாக அது இயக்கும்.
2.அருள் உணர்வு கொண்டு அங்கே நாம் இணைத்து விட்டால் எதையும் நாம் சீராக்க முடியும்.

ஏனென்றால் குருநாதர் எம்மைத் துருவ நட்சத்திரத்துடன் ஆயுள் மெம்பராக இணைத்தார். யாம் உங்களை எல்லாம் இந்த உபதேசத்தின் வாயிலாகத் துருவ நட்சத்திரத்திற்கே அழைத்துச் செல்கின்றோம்.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை நீங்கள் உங்களுக்குள் விளைய வைத்துக் கொள்ளுங்கள்.

1.சூரியன் எடுத்து வைத்துக் கொள்கிறது... அதை இந்தக் காற்று மண்டலத்தில் பரவச் செய்கிறது.

2.அதே போல் உங்கள் வீட்டிலேயும் துருவ நட்சத்திரத்தின் சக்தியை அதிகமாகப் பரப்பி வைத்துக் கொள்ளுங்கள்... குடும்பத்தில் சந்தோஷம் வரும்.

அதே போன்று நாங்கள் வசிக்கும் எங்கள் தெருவெல்லாம் அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி படர வேண்டும் என்று பரப்புங்கள். உங்கள் தெருவிலும் அமைதி வரும்.

ஒரு சிலர் தவறான நிலைகள் கொண்டு செயல்பட்டாலும் அவர்களுக்கும் இந்தத் துருவ நட்சத்திரத்தின் அருள் சக்தியைப் பாய்ச்சி அவரை அறியாத இருள்கள் நீங்க வேண்டும். அவர்கள் குடும்பத்தில் உள்ளோர் தெளிந்த நிலைகள் பெற வேண்டும் என்ற இந்த உணர்வை நாம் எடுத்தால்... தீமைகளை நீக்கக் கூடிய அரும்பெரும் சக்திகளாக நாம் வளருவோம்.

1.துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுத்து நமக்குள் வளர்த்து குடும்பத்தில் பெருக்கி ஊரிலும் உலகிலும் பெருக்கி

2.தீமைகளை அகற்றிடும் சக்தி வாய்ந்த நிலைகளாக நாம் உருவாக்க வேண்டும்.

அது தான் கூட்டுத் தியானத்தின் நோக்கம்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

1.எம்மை நேரடியாக நீங்கள் சந்திக்க வேண்டியதில்லை.

2.இருக்கும் இடத்திலிருந்து எண்ணினாலே என்னுடைய (ஞானகுரு) அருள் உங்களுக்குக் கிடைக்கும்.

அந்தப் பயிற்சியைத் தான் இங்கே கொடுக்கின்றேன்.

ஈஸ்வரா என்று உயிரை எண்ணுங்கள். அம்மா அப்பா தான் முதல் தெய்வங்கள் அவர்களால் தான் நாம் உடல் பெற்றோம். அவர்களின் நல்லாசி பெற வேண்டும் என்று எண்ணுங்கள்.

அதே போன்று இந்தப் பேருண்மைகளை எல்லாம் எனக்கு உணர்த்தியது மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர்.

1.அந்த மாமகரிஷி ஈஸ்வராய குருதேவரின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்.
2.ஈஸ்வராய குருதேவரின் அருளால் துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பெற வேண்டும் என்று எண்ண வேண்டும்.
3.கண்ணிலே ஏங்கி நேராக உற்றுப் பார்த்துத் தியானியுங்கள்.

இப்போது கண் வழியாக அதை இழுத்துக் கவர்கின்றீர்கள் அடுத்து கண்ணின் நினைவு புருவ மத்திக்குக் கொண்டு வாருங்கள். துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று ஏங்குங்கள்.

அங்கே காந்தம் இருக்கின்றது அதிலே நாம் துருவ நட்சத்திரத்தினைச் சேர்த்து இணைத்து விடுகின்றோம்.

ஆனால் வழக்கமாக நாம் மூக்கு வழியாகச் சுவாசிக்கின்றோம். நுகர்கின்றோம் உயிரிலே மோதி அந்த உணர்ச்சிகள் நம்மைத் தெரிய வைக்கின்றது… இயக்குகின்றது.

ஆனால் அதை முதலில் சொன்ன முறைப்படி
1.புருவ மத்தி வழியாகத் துருவ நட்சத்திரத்தை அந்தக் காந்தத்தின் வழி கவரும் பொழுது
2.பிற தீமைகள் சுவாசத்தின் வழி உள்ளே புகாதபடி துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள் அடைப்பாகி விடுகிறது.
3.தீமைகள் நமக்குள் போகாது நாம் தடைப்படுத்தி விடுகின்றோம்.

ஆனால் உள்ளே சென்று விட்டால் இரண்யன். நல்ல அணுக்களை அது கொன்றுவிடும். அது வேதனை… கடும் நஞ்சு…அ1 அதை நாம் குரு காட்டிய வழியில் தடைப்படுத்தித் துருவ நட்சத்திரத்தினை கண்களிலே நினைத்து இங்கே கொண்டு வருகின்றோம்.

துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா என்று கண்ணைத் திறந்தே தியானியுங்கள். பின் கண்களை மூடித் துருவ நட்சத்திரத்தின் பேரருளை நாங்கள் பெற வேண்டும் துருவ நட்சத்திரத்தின் பேரருளை நாங்கள் பெற வேண்டும் என்று அப்படியே திரும்பத் திரும்ப எண்ணி ஏங்கிக் கொண்டே இருங்கள்.

பின் கண்ணின் நினைவை உடலுக்குள் செலுத்துங்கள் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று அந்த இரத்தங்களில் அதனைக் கலக்க வேண்டும் என்று எண்ணுங்கள்

சிறிது நேரம் அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி இரத்தத்தில் கலக்க வேண்டும் இரத்த நாளங்களில் கலக்க வேண்டும் என்று செலுத்தி விட்டு
1.அடுத்து அந்த இரத்தம் போகும் பாதைகள் அனைத்துமே
2.அந்த இரத்தங்கள் முழுவதுமே துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளி படர வேண்டும் என்று நினைவைச் செலுத்துங்கள்.
3.அது உடல் முழுவதும் சுழன்று எல்லா உறுப்புகளுக்கும் செல்லும்
4.அங்கிருக்கக்கூடிய ஜீவணுக்களும் ஜீவான்மாக்களும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று எண்ணுங்கள்.

நாம் மற்றவருடன் பிரியமாக பழகி அன்புடன் இருந்து அவர் திடீர் இறந்து விட்டால் நம் மீது பாசமாக இருந்தால் அந்த ஆன்மா நம் இரத்தத்தில் தான் இருக்கும்.

அவருடைய கெட்டதெல்லாம் இரத்தத்தில் இருந்து கொண்டு நமக்கு அது தொல்லைப்படுத்தும் நிலையாக வரும். நம்முடைய சிந்தனைகளைக் குறைக்கும். அது உடலுக்குள் வந்து விட்டால் ஒன்றும் செய்ய முடியாது.

அதனால் அந்த ஜீவான்மாக்கள் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்ற அவசியம் நாம் அந்த நினைவினைச் செலுத்த வேண்டும்.

1.உடலில் இருக்கும் எல்லா இடங்களுக்கும்
2.துருவ நட்சத்திரத்தின் சக்தி பரவ வேண்டும் என்று நினைவைச் செலுத்த வேண்டும்.

அடுத்து இந்த வாயு மண்டலங்கள் அதாவது அந்த நரம்பு மண்டலங்கள் முழுவதும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் அதில் இருக்கக்கூடிய ஜீவான்மாக்கள் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று நினைவினைச் செலுத்துங்கள்.

1.நாம் சர்வ காலம் கண்களில் எத்தனையோ உற்றுப் பார்க்கின்றோம்.
2.எக்ஸ்ரே எப்படி ஊடுருவிச் செயல்படுத்துகின்றதோ அது போன்று கண்களால் பார்த்து எலும்புக்குள் ஊனாக இருக்கும்.

3.நாம் எதையெல்லாம் பார்க்கின்றோமோ வரிசையில் அங்கே பதிவாக்கிக் கொண்டே இருக்கும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி எங்கள் எலும்பு மண்டலம் முழுவதும் படர்ந்து அதில் இருக்கக்கூடிய ஊனில் துருவ நட்சத்திரத்தின் பேர்ருள் பேரொளி படர வேண்டும் என்று கண்ணின் நினைவை உள்ளே செலுத்துங்கள்.

மீண்டும் புருவ மத்திக்குக் கண்ணின் நினைவைக் கொண்டு வந்து துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று அங்கே நினைவைச் செலுத்துங்கள்.

இப்படியே மாற்றி மாற்றி எல்லா இடங்களுக்கும் நினைவைச் செலுத்தி பல முறை தியானியுங்கள்.
1.இப்படிச் செய்வதற்கு... என்ன காசா பணமா...? ஒன்றும் இல்லை.
2.உங்கள் நினைவு மட்டும் தான் தேவை
3.இதைச் செய்வதற்கு என்ன வந்தது...?
4.சிறிது நாளைக்குப் பழகிக் கொண்டால் தன்னாலே அந்த உணர்வுகள் வேலை செய்யும்.

நம்மைத் திட்டியவனையோ அல்லது உடல் நிலையைப் பற்றிய வேதனையோ திரும்பத் திரும்ப எண்ணுவதற்குப் பதிலாக அருளைப் பெற வேண்டும் என்று நாம் எண்ணினாலே போதுமானது.


1.ஏனென்றால் இனி வரக்கூடிய காலங்கள் மிக விஷத்தன்மை வாய்ந்ததாக இருப்பதால்
2.அதையெல்லாம் மாற்றி அமைக்கக்கூடியவர்களாக நீங்கள் வரவேண்டும்... அந்தச் சக்தியைப் பெற வேண்டும் என்பதற்குத்தான்
3.இதை மீண்டும் மீண்டும் உங்களுக்கு பல வகைகளிலும் எடுத்துச் சொல்லிக் கொண்டே வருகின்றேன்.

கடவுளின் அவதாரத்தில் வராக அவதாரத்தினைக் காட்டியிருப்பார்கள்.

பன்றி சாக்கடைக்குள் உள்ள நாற்றத்தைப் பிளந்து அதில் இருக்கும் நல்ல மணத்தை நுகர்கின்றது. அதே போன்று நீங்கள் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை பெற்று அதன் உணர்வை உங்களுக்குள் வலுப்பெறச் செய்ய வேண்டும்.

எத்தகைய விஷத்தன்மையாக இருந்தாலும் அதைப் பிளந்து விட்டு உங்கள் சிந்தனை கலையாது உங்கள் வாழ்க்கையை அருள் ஞானத்தைப் போதிக்கும் அருள் உணர்வுகளை உங்களுக்குள் சேர்ப்பிக்கும் அந்தச் சக்தி பெற வேண்டும்.

1.இந்த உடலை விட்டு எப்பொழுது சென்றாலும் அந்தத் துருவ நட்சத்திரத்தோடு இணைய வேண்டும்
2.பிறவி இல்லா நிலை அடைய வேண்டும் என்பதற்குத் தான் இந்த உபதேசமே.



## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நம் உடல் ஒரு கோவில்... எதன் உணர்வை நாம் எண்ணுகின்றோமோ அது இறையாகின்றது. உணர்வின் தன்மை இறையான பின் மீண்டும் அதை எண்ணும் பொழுது இறையின் உணர்வு செயலாகும் பொழுது அதுவே தெய்வமாகின்றது.

1.வேதனை என்ற உணர்வாகும் பொழுது வேதனைப்படுத்தும் செயல்களையே சேர்த்து...
2.வேதனைப்படுத்தும் தெய்வமாக நமக்குள் குடிகொள்கின்றது.

அதை மாற்ற வேண்டும் அல்லவா. இதற்காகத்தான் ஞானிகள் கோவிலை அமைத்தது.

நமக்குள் இருக்கக்கூடிய நூறு உணர்வுகளை ஆலயமாக மாற்றுகின்றனர். கோவிலுக்குச் சென்ற பின் இந்தத் தெய்வம் நல்லதைச் செய்யும் என்று சொல்கின்றனர்.

நமக்குள் வேதனை என்ற உணர்வு வரப்படும் பொழுது இங்கே அசுரனாக மாறி விடுகின்றது. பத்துத் தலை இராவணன் என்ன செய்கின்றான்...? சீதாவைச் சிறைப் பிடித்து விடுகின்றான்.

இப்பொழுது கோவிலுக்குச் சென்று நீங்கள் சந்தோஷமாக இருங்கள் பார்க்கலாம். என்னிடம் (ஞானகுரு) வருவோர்களை இங்கே நல்லதை எண்ணிக் கேட்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்...!

என் பிள்ளை சொன்னபடி கேட்க மாட்டேன் என்கிறான்... என் தொழில் நஷ்டமாகிக் கொண்டே போகின்றது... எல்லாம் கஷ்டமாக இருக்கின்றது என்று இதைத்தான் சொல்கின்றார்களே தவிர...
1.சீதா என்ற அந்தச் சந்தோஷத்தை ஏதாவது நீங்கள் இயக்குகிறீர்களா...?
2.கஷ்டத்தை நன்றாக இறுக்கிப் பிடித்துக் கொள்கின்றீர்கள்.

எவ்வளவுதான் நான் சொல்லிப் பார்த்தாலும்... இங்கே பிரசாதம் கொடுக்கும் போது பாருங்கள். என் பையன் இப்படி இருக்கின்றான். எல்லாம் நான் நல்லதைத் தான் செய்தேன் ஆனால் என் குடும்பத்தில் கஷ்டமாக இருக்கின்றது என்று தான் சொல்கிறார்கள்.
1.கஷ்டத்தை நீக்குவதற்குச் சக்தி கொடுங்கள்...

2.கஷ்டத்தை நீக்கக்கூடிய வழியைக் கொடுங்கள்... என்று யாருமே கேட்க மாட்டேன் என்கிறார்கள்.

கீதையிலே சொன்னது... நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்

கஷ்டம் என்ற உணர்வு வரும் பொழுது கண்ணின் நினைவு பையனிடத்தில் செல்கின்றது. நான் சொல்லும் நல்ல எண்ணத்திற்கு இங்கே வருவதில்லை... விலக்கி விட்டு விடுகிறது. அப்பொழுது வேதனையைத்தான் வளர்த்துக் கொள்கின்றீர்கள்

கோவிலிலே சிலையைக் கண்ணுற்றுப் பார்க்கின்றோம்... "இந்தத் தெய்வம் நல்லதைச் செய்யும்..." என்ற எண்ணத்தை எண்ணும் பொழுது...
1.நல்லதைச் செய்யக்கூடிய அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்
2.இந்தக் கோவிலுக்கு வருபவர்கள் எல்லாம் அந்த நன்மை பெற வேண்டும்
3.இந்தக் கோவிலுக்கு வரும் குடும்பம் எல்லாம் அந்த நல்ல நிலை பெற வேண்டும் என்று எண்ணினால்
4.நம் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் அதுவாக (நல்லதாக) ஆகின்றோம்.

எதை எண்ணுகின்றோமோ அதைத்தான் கண்ணிலே காட்டுகின்றது பையனுடைய எண்ணங்களை வைத்துக் கண்ணை அங்கே கொண்டு போய் வைத்துவிட்டுச் சிலையை பார்த்தால் என்ன நடக்கும்...?

அழுகை தான் வரும்

அப்பொழுது நாம் அதுவாக ஆகின்றோம்... மீண்டும் நாம் வேதனையைத் தான் சேர்க்க முடிகிறதே தவிர நல்லதை நாம் பெற முடிகிறதா...? கோவிலை நாம் யாராவது மதிக்கின்றோமா...?

1.நமக்குள் சூட்சமாக இருப்பதை அறிந்து...
2.அதை எவ்வாறு சீராகச் செயல்படுத்த வேண்டும்...? என்று ஞானிகள் காரணப் பெயரை வைத்து ஸ்தல புராணங்களைக் காட்டி
3."இந்தக் குணத்தைச் சுவாசித்தால் உனக்கு அது நன்மை செய்யும்...! என்று சொல்கிறார்கள்.
4.நன்மை பெறுவதற்காகச் சிலையை வடித்துக் காட்டியுள்ளார்கள்.

பக்தி என்றால் இந்த ஆலயம் வருவோர் அனைவரும் நன்றாக இருக்க வேண்டும்... அந்தக் குடும்பம் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

நாம் கடன் கொடுத்திருப்போம். அவருக்கு நல்ல வருமானம் வேண்டும்... திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தி பெற வேண்டும் என்று எண்ணினால் பணம் வந்து சேரும்.

ஆனால் மாறாக நாம் எப்படி எண்ணுவோம்...?

கடன் கொடுத்தேன்...! பாவிப்பயல் என்னை ஏமாற்றுகின்றானே... மோசம் செய்கின்றானே...! என்று கோவிலில் வந்து இப்படிச் சொன்னால் என்ன ஆகும்...?

யாருக்கு நாம் கடன் கொடுத்தோமோ... அவனை மேலே எழுந்திருக்க விடாதபடி... சம்பாதிக்க விடாதபடி... கடனைத் திருப்பிக் கட்ட முடியாதபடி... நம்முடைய எண்ணமே அங்கே தடையாகிறது.

அதுதான் நடக்கின்றது... நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றது அவனால் பணத்தைத் திரும்பக் கொடுக்க முடியாது. உங்களால் வாங்க முடிகிறதா...?

இது எல்லாம் கண்ணின் இயக்கங்களைப் பற்றி...
1.நாம் நுகரும் உணர்வுகள் அதன் வழி வாழ்க்கை எப்படி நடக்கின்றது...? என்பதை
2.நமது சாஸ்திரங்கள் தெளிவாகக் காட்டுகின்றது.




கோவிலிலே சிலையைக் கண்ணுற்றுப் பார்க்கிறோம்… "இந்தத் தெய்வம் நல்லதைச் செய்யும்…" என்ற எண்ணத்தை எண்ணும் பொழுது… நல்லதைச் செய்யக்கூடிய அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் இந்தக் கோவிலுக்கு வருபவர்கள் எல்லாம் அந்த நன்மை பெற வேண்டும் இந்தக் கோவிலுக்கு வரும் குடும்பம் எல்லாம் அந்த நல்ல நிலை பெற வேண்டும் என்று எண்ணினால் நம் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் அதுவாக (நல்லதாக) ஆகின்றோம்.




**துருவ நட்சத்திரத்தின் சக்தி என்பது எம அக்னி (கடும் நெருப்பு)**

துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும். எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் ஈஸ்வரா என்று உடலுக்குள் செலுத்த வேண்டும்.

இவ்வாறு உடலுக்குள் செலுத்திய பின் என்ன நடக்கின்றது...?

1.உதாரணமாக நெருப்பு எரிகிறது என்றால் பக்கத்திலே செல்வோமா...?
2.அதனுடைய காற்றழுத்தில் நம்மைத் தள்ளி விட்டுக் கொண்டேயிருக்கும்.
3.இதைப் போன்று அருள் ஞானிகள் உணர்வை உடலுக்குள் வலு சேர்த்தால் அந்த வெப்பத் தணல் என்ன செய்யும்...?
4.நமக்கு முன் அதனின் வலுவாக நிற்கும்.

அதே போல் எரியும் நெருப்பிலே மிளகாயைப் போட்டால் நெடி வரும். அப்போது அருகில் செல்ல முடியுமா...? நல்ல குணங்கள் கொண்டு இருந்தாலும் அங்கே நாம் அமைதியாக இருக்க முடியுமா...? வேறு எதையும் சிந்திக்க முடியுமா...? இல்லையே...!

நாம் காலையிலிருந்து இரவு வரையிலும் நாம் எத்தனையோ நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்போம்... கேட்டிருப்போம்.

சண்டையிட்டவர்களைப் பற்றி வேதனைப்பட்டவர்களைப் பற்றி திட்டியவர்களைப் பற்றி வெறுப்படைந்தவர்களைப் பற்றியெல்லாம் பாசத்துடன் பரிவுடன் கேட்டிருப்போம்.
1.இது எல்லாம் நமக்குள் பதிவாகி இருக்கும்... நம் ஆன்மாவிலே முன்னாடி இருக்கும்.
2.இந்த உணர்வலைகள் நம் ரத்தத்துடன் கலந்து போய்க் கொண்டிருக்கும்.
3.நம் உடலில் இருக்கக்கூடிய கெட்ட அணுக்கள் அதை உணவாக எடுத்துக் கொண்டிருக்கும்.

ஆனால் நல்ல உறுப்புகளை உருவாக்கிய நல்ல அணுக்கள் அதற்கு நல்ல உணவு இல்லாதபடி சோர்வடையும்... அதனுடைய செயலாக்கங்கள் குறையும்.

அதை நாம் தூய்மைப் படுத்த வேண்டும் அல்லவா...! துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று உள்ளுக்குள் செலுத்திய பின்
1.கெட்ட அணுக்கள் அதனுடைய உணர்வைக் கவர்வதில்லை... அதைத் தள்ளி விட்டுவிடும்.
2.அந்தத் தீமையான உணர்வுகள் நம் ஈர்ப்பு வட்டத்தைக் கடந்து சென்று விட்டால்
3.காலையில் 6:00 மணிக்கெல்லாம் சூரியனுடைய காந்த சக்தி அதைக் கவர்ந்து

கொள்ளும்.
4.அவ்வாறு சூரியன் அதை எடுத்துக் கொண்டால் நமது ஆன்மா சுத்தமடைகின்றது.
5.நம் உடலுக்குள் சென்ற தீமைகளை உயிர் வேக வைக்கின்றது.

சமையல் செய்யும் போது வேக வைத்துத் தான் நாம் எல்லாவற்றையுமே ஒன்றாகச் சேர்த்துச் சுவையாக ஆக்க முடியும். வேக வைக்காமல் ஒன்று சேர்க்க முடியாது.

ஆகவே நாம் அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உடலுக்குள் சேர்த்து எல்லா அணுக்களிலும் அதை இணைத்து வேக வைத்து "நான்கையும் ஒன்றாக்கப்படும் பொழுது…" வேதனையோ மற்ற குறைகளோ எல்லமே அகல்கிறது.

நம் ஆன்மா சுத்தமாகின்றது…!

அதற்குப் பின்… நாம் யாரையெல்லாம் பார்த்தோமோ அவர்கள் குடும்பம் எல்லாம் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும். அவர்கள் தீமைகளிலிருந்து நோய்களிலிருந்து துன்பங்களிலிருந்து விடுபட வேண்டும் அவர்கள் ஒன்றுபட்டு வாழும் சக்தி பெற வேண்டும். அவர்கள் தொழில் நன்றாக இருக்க வேண்டும் என்று யாரையெல்லாம் நாம் சந்தித்தோமோ அவர்களுக்கெல்லாம் இது கிடைக்க வேண்டும் என்று நாம் எண்ண வேண்டும்.

1.வரிசையாக எந்த அளவிற்கு இவ்வாறு எண்ணி எடுக்கின்றோமோ
2.அவர்களுடைய உணர்வுகள் நமக்குள் பதிவாகாது… அதைத் தள்ளி விட்டுக் கொண்டே இருக்கும்.
3.துருவ நட்சத்திரத்தின் சக்தி நமக்குப் பாதுகாப்புக் கவசமாக அமையும்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அன்றைக்கு எனக்கு வரம் கொடுத்தீர்கள் அல்லவா… அந்த வரத்தை இப்பொழுது கேட்கின்றேன் என்று கைகேயி தசரதனிடம் கேட்கின்றது. அந்த வரத்தை நீங்கள் கொடுக்கவில்லை என்றால் உலகம் உங்களைத்தான் தூற்றும். சத்தியத்துக்கு விரோதமானவர் என்று உங்களைத் தான் சொல்லும் என்று சத்தியம் பேசுகிறது.

தசரதன் பல வகைகளிலும் யோசிக்கின்றான் என்ன செய்வது என்று…!

வரத்தைக் கொடுத்த பின் இப்படிக் கேட்கின்றாளே…! இராமனுக்குப் பட்டம் சூட்ட முடியாது போகின்றதே…! என்ற வேதனை அதிகரிக்கிறது.
1.ஆனால் அன்று வெற்றி பெற உதவியாக இருந்தது.. அப்போது மிகவும் சந்தோஷப்பட்டான்.
2.தன் உடலிலே இருந்து அது என்ன செய்கின்றது…?
3.தன் மகனுக்கே (பரதனுக்கு) பட்டம் சூட்ட வேண்டும் என்று அதன்படி அங்கே வேதனையைத் தான் உருவாக்குகின்றது.

தசரதன் பல வகைகளிலும் சிந்திக்கின்றான். அவனால் ஒன்றும் பேச முடியவில்லை… மௌனியாகின்றான்.

இதைப் போன்று தான் உங்கள் உடலில் வெறுப்பும் வேதனையும் அதிகமாகி விட்டால்
1.உங்களால் ஏதாவது பேச முடிகின்றதா…? நல்லதை ஏதாவது செயல்படுத்த முடிகின்றதா…?
2.வேதனை உணர்வுகள் எடுக்கப்படும் பொழுது நல்லதைச் செயல்படுத்த முடிகின்றதா..?
3.வேதனை என்ற உணர்வு வந்து விட்டாலே நல்ல பட்டாடைகளை… புதுத் துணிகளைக் கொடுத்து அணியச் சொன்னால் முடியுமா…?
4.அதை ஏற்றுக் கொள்ள முடிகின்றதா…? இல்லை.

உடலுக்குள் வேதனை அதிகமான பின் நல்லதைச் செயல்படுத்த முடியவில்லை. பல உணர்வுகள் நமக்குள் வந்து புலஸ்தியர்… புலனறிவைக் கொண்டு வரப்படும் பொழுது சந்தோசம் என்ற நிலையை உருவாக்க முடியவில்லை.

தன்னால் செயல்படுத்த முடியவில்லையே…! என்ற அந்த வேதனை உணர்வு தான் முன்னணியில் வருகின்றது.
1.தசரதன் அங்கே வேதனைப்படுத்தினான் முதலிலே
2.அந்த உணர்வைத் தனக்குள் வளர்த்தான்… ஏனென்றால் அதை இச்சைப் பட்டான்
3.மற்ற நாடுகளை அடிமைப்படுத்த வேண்டும் என்று பல கொலைகளைச் செய்தான்… அதை ரசித்தான்
4.அந்த உணர்வின் தன்மை பிரம்மகுருவாக ஆகி அதன் உணர்வே இங்கே செயல்படுத்துகின்றது.
5.தன் உடலுக்குள் இருந்து நல்லதைச் செயல்படுத்த முடியவில்லை…!

அவன் எண்ணிய நல்லதை அங்கே செயல்படுத்த முடிகின்றதா...? அதற்கு மாறாகக் கைகேயி என்ன செய்கின்றாள்...?

இராமனைக் கூப்பிட்டு... "உன் தந்தை சொல்கின்றார்... நீ காட்டிற்குச் செல்... துறவறம் பூண்டு செல்..." என்று சொல்கிறது.

அதன்படி "தந்தை சொல்லிவிட்டார்" என்று தாய் என்ற நிலையில் தட்டாது அவன் சென்று விடுகின்றான்.

அவன் காட்டிற்குச் சென்ற பின் கைகேயி தன் மகன் பரதனைக் கூப்பிட்டு அனுப்புகின்றாள். அவனை வரும்படி செய்தபின் அங்கிருந்து வருகின்றான்.

நகருக்குள் வந்தபின் நாடே சூனியமாக இருக்கின்றது. ஒருவரும் பேசவில்லை... ஊமையாக மௌனமாக இருக்கின்றார்கள் சோர்வாக இருக்கின்றார்கள்...? ஏன்...? என்று வினாக்களை எழுப்புகின்றான்.

ஒருவரும் வாய் திறக்கவில்லை... ஏனென்றால் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னால்... யார் செய்தது...? என்று சொல்லும் போது அதனால் பெரும் வெறுப்பாக வளர்ந்து விடும்...! என்று குற்றத்தைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை.

எல்லோரும் அதனால் மௌனமாக இருக்கின்றார்கள்.

இராமனின் தாயாரிடம் கேட்டால் அதுவும் மௌனமாக இருக்கின்றது. மற்ற உறவினர்களைக் கேட்டாலும் அவர்களும் மௌனமாக இருந்து விட்டார்கள். யாரும் பதில் சொல்லவில்லை. மக்களிடத்திலோ சேனாதிபதிகளிடமோ யாரிடம் கேட்டாலும் எல்லாருமே மௌனமாக இருக்கின்றார்கள்.

கடைசியில் தன் தாயிடமே கேட்கலாம் என்று வருகின்றான்.

அப்பொழுதுதான் தாய் சொல்கின்றது. அன்று போர் செய்யப்படும் பொழுது எனக்கு வாக்குகளைக் கொடுத்தார். அந்த வாக்கின்படி தான் கேட்டேன் அவர் கொடுத்தார் கொடுத்த பின் வேதனையால் அவர் மடிந்து விட்டார்.

நான் தவறு செய்யவில்லை..! இராமனுக்குப் பட்டாபிஷேகம் சூட்ட முடியவில்லை என்று ஏக்கத்திலே இறந்து விட்டார். உனக்குப் பட்டம் சூட்ட

வேண்டும் என்ற நிலை வந்து விட்டது. ஆகவே நீ இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்...! என்று தாய் சொல்கின்றது.

அப்போது தான் பரதன் சொல்கின்றான்... உன் தாயார் வீட்டிலும் இது தான் நடந்தது...!
1.யாரிடத்தில் அந்த வேதனை (முதலில்) உருவாகின்றதோ அது தாயாகின்றது.
2.அதன் உணர்வுகள் எப்படி இயங்குகின்றது...? என்று
3.உணர்வின் எண்ணங்கள் எதன் வலுவோ அதன் வழி எப்படி இயக்குகின்றது...? என்பதை இராமாயணம் தெளிவாகக் காட்டுகின்றது.

பரதன் சொல்கிறான்...
1.உன் தாயார் வீட்டில் இதே தான் நடந்தது.
2.அதனின் மகளாக இருந்து நீ இங்கே வந்ததனால் எங்கள் சாம்ராஜ்யத்தையும் நீ சூனியம் ஆகிவிட்டாய்
3.அன்றே உன்னைக் கொன்றிருந்தால் இந்த நிகழ்ச்சிகள் இங்கே நடந்திருக்காது.

அதாவது... எந்தத் தீமை என்ற நிலையை இச்சைப்படுகின்றோமோ "அன்றே..." நாம் அதை அழித்திருத்தல் வேண்டும் என்று இங்கே தெளிவாகக் காட்டுகின்றார்கள்.

பத்தாவது நிலை அடையக்கூடிய தகுதி பெற்ற நாம்
1.அந்த உண்மையின் உணர்வை எடுக்காதபடி உடலுக்குள் தீமை புகுந்து விட்டால்
2.அது விஷம் என்ற நிலையில் அதனுடைய கடுமைகள் எப்படிச் செயல்படுகின்றது...? என்ற
3.உணர்வின் இயக்கத்தின் வலிமையை இராமாயணம் தெளிவாகக் காட்டுகின்றது.




எந்தத் தீமை மீது இச்சைப்படுகின்றோமோ "அன்றே..." நாம் அதை அழிக்க வேண்டும்.

காரணம்... பத்தாவது நிலை அடையும் தகுதி பெற்ற நாம் அந்த உண்மையின் உணர்வை எடுக்காதபடி உடலில் தீமை புகுந்து விட்டால் அது விஷம் என்ற நிலையில் அதனுடைய கடுமைகள் எப்படிச் செயல்படுகின்றது...? என்ற உணர்வின் இயக்கத்தின் வலிமையை இராமாயணம் தெளிவாகக் காட்டுகின்றது.




## அதிர்ச்சி அடையச் செய்யும் எத்தகைய செய்தியையும் நாம் பாசத்தால் நுகரக் கூடாது

வேதனை வெறுப்பு என்ற நிலைகளில் தற்கொலை செய்து மடிந்து கொண்டவர்களோ அல்லது இடைமறித்து எதிர்பாராது மடிந்தவர்களோ வளர்ச்சி இல்லாத நிலைகளில் கடும் நோயினால் மடிந்தவர்களோ இவர்களின் உணர்வுகளைப் பாசமாக எண்ணி எடுத்துக் கொண்டால் அதனால் பல தீமைகள் விளைகின்றது.

பெண்கள் பாசத்துடன் அதிகமாக நேசிக்கப்படும் பொழுது… குறிப்பாக அதுவும் கர்ப்பமாக இருக்கக்கூடியவர்கள் இதை நுகர்ந்து விட்டால்
1.அவர்களுடைய கர்ப்பப்பையில் விஷத்தன்மைகள் அதிகரித்து அது விரிவடையாது
2.தற்கொலையால் இறந்த உணர்வுகள் ரத்தத்தில் கலந்து கருப்பைக்கு வந்தால் முட்டைகள் சீராக வளர்ச்சி அடையாதபடி
3.இடைவெளியிலேயே அழிந்துவிடும்… தன் இனத்தை விருத்தி செய்யும் நிலைகள் இழந்து விடுகின்றது.

ஏனென்றால் கர்ப்பமாக இருக்கும் தாய்… பல உணர்வு கொண்டு மரணம் அடைந்தவர்கள் துர்மரணம் அடைந்தவர்கள் உணர்வுகளை அதிகமாக நுகரப்படும்

பொழுது
1.கருக்களில் இது சேர்க்கப்பட்டுத் தன் இனவிருத்தி என்று கருப்பைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்
2.அது முழுமை அடையாதபடி அழிந்து விடும்.
3.அத்தகையவர்களுக்குத் தன் இனத்தை விருத்தி செய்யும் தன்மை வருவது மிகக் கடினம் தான்.

இதையெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டு இது போன்ற அதிர்ச்சி ஊட்ட கூடிய உணர்வுகளைக் கூடுமானவரை கருவுற்றவர்கள் தவிர்ப்பது மிகவும் நல்லது.

ஏனென்றால்
1.கர்ப்பமாக இருக்கக்கூடிய தாய் எந்தெந்த உணர்வுகளை ஒன்றிலிருந்து தொண்ணூறு நாட்கள் உற்று நோக்கி
2.தனக்குள் கூர்மையாகப் பதிவு செய்கின்றதோ அதற்கொப்பத்தான் குழந்தையினுடைய குணாதிசயங்களும் உடல் நலமும் மற்ற எல்லாமே…!
3.அதைத் தான் பூர்வ புண்ணியம் என்று சொல்வார்கள்.

ஆகவே வீட்டிலே திருமணம் ஆகிப் கர்ப்பமாக இருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டால்… முதல் அந்த மூன்று மாதத்திற்குள் அவர்களை அணுகி எமது உபதேச நூல்களைக் கொடுத்து அதைப் படித்துக் கேட்கும்படிச் செய்து அதை எல்லாம் கருவிலிருக்கும் குழந்தை பெற வேண்டும் என்று எண்ண வேண்டும்.

குடும்பத்தில் உள்ளோர் தியானமிருந்து கருவிலிருக்கும் சிசு அகஸ்தியன் பெற்ற அருள் சக்தியைப் பெற்று “ஞானக் குழந்தையாக வளர வேண்டும்…” என்று தவம் இருங்கள்.
1.அந்தத் தவம் உங்களைக் காக்கும்.
2.அருள் ஞானி பிறக்கும்… அது உலகத்தைக் காக்கும்
3.அப்படிக் காக்கக்கூடிய நிலைகள் உருவாக வேண்டும் என்று தவத்தை நாம் இருக்க வேண்டும்.
4.இந்த உணர்வை வளர்த்தோம் என்றால் தான் இந்த உலகை நாம் மீட்க முடியும்… உலகைச் சிருஷ்டிக்கும் சக்தியாக நாம் பெற முடியும்.
5.இந்த உடலான உலகத்திலிருந்தும் நாம் மீள முடியும்.
6.மீண்டும் உடல் பெறும் நிலைகளிலிருந்து நாம் மீள முடியும்.

இதைச் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை கொண்டு நாம் செயல்படுவோம். குரு அருள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா என்று ஏங்கித் தியானியுங்கள்.

ஏனென்றால் புருவ மத்தியில் இப்படி எண்ணி விட்டால்... இதற்கு முன்னாடி நம்மை அறியாது சேர்ந்த தீய வினைகளுக்கு ஆகாரம் போகாதபடி தடுக்கின்றோம். அருள் ஞானத்தின் உணர்வுகளை உயிர் வழி நமக்குள் பரப்புகின்றோம்.

1.துருவ நட்சத்திரத்தின் சக்தி உயிரிலே மோதும் போது ஒளிக்கற்றைகள் தோன்றும்.
2.ஒரு வெளிச்சத்தைக் கண்டபின் இருள் எப்படி நீங்குகின்றதோ இதைப் போன்று
3.அந்த துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளைக் கவரப்படும் பொழுது...
4.அது நமக்குள் அறியாமை என்ற இருளை நீக்கிப் பொருள் காணும் நிலையை உருவாக்கும்.

உங்கள் நினைவு அனைத்தையும் துருவ நட்சத்திரத்தின் பால் செலுத்தி அதனின்று வரும் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா என்று கண்ணின் நினைவைப் புருவ மத்தியில் செலுத்தி... உயிரான ஈசனிடம் வேண்டி ஏங்கித் தியானியுங்கள்.

கண்ணின் நினைவை இரத்த நாளங்களில் கலக்கச் செய்து... துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் இரத்த நாளங்களில் கலந்திட அருள்வாய் ஈஸ்வரா என்று ஏங்குங்கள்.

எப்படி ஊசி மூலம் மருந்தை எடுத்து உடலுக்குள் செலுத்திய உடனே இரத்தங்கள் முழுவதும் அந்த மருந்து பரவுகின்றதோ அதே போன்று
1.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி இரத்தங்கள் முழுவதும் படர வேண்டும் என்று
2.உங்கள் கண்ணின் நினைவு கொண்டு உள்ளே செலுத்துங்கள்.

எங்கள் உடல் உறுப்புகள் அனைத்திலும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா என்று உடல் உறுப்புகளை

உருவாக்கிய அணுக்களுக்கு அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தி பெறும்படியாகக் கண்ணின் நினைவை உள்ளே செலுத்துங்கள்.


உறுப்புகளை எவ்வளவு தூரம் எண்ண முடியுமோ உறுப்புகளில் அந்தச் சக்தி படர வேண்டும் என்று ஏங்கி நினைவைச் செலுத்துங்கள்.

உங்கள் உடல் உறுப்புகளில் இப்பொழுது புது விதமான உணர்ச்சிகள் தோன்றும்... அதை உணரலாம்.
1.தீமையான அணுக்கள் இருந்தால் துருவ நட்சத்திரத்தின் சக்தி அதிலே படும் பொழுது அது பலவீனமடையும்.
2.துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள் வலுப்பெறுகின்றது.


உடல் உறுப்புகளில் எத்தகைய தீய அணுக்கள் இருப்பினும் துருவ நட்சத்திரத்தின் சக்தியைக் கண்ணின் நினைவு கொண்டு அங்கே பாய்ச்சப்படும் பொழுது அது வலு இழக்கின்றது.

கண்ணின் நினைவை அவ்வாறு செலுத்தப்படும் பொழுது...
1.அந்த ஜீவ அணுவின் காந்தமும் உங்களுடைய உணர்வின் நினைவும் செலுத்தப்படும் பொழுது
2.எளிதில் உங்கள் உடல் உறுப்புகளுக்குத் துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெறச் செய்ய முடியும்.

ஒரு நல்ல மகிழ்ச்சியூட்டும் உணர்வுகள் உங்கள் உடல் உறுப்புகளில் உருவாகும்.




**எங்கள் உடல் உறுப்புகள் அனைத்திலும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி படர்ந்திட அருள்வாய் ஈஸ்வரா என்று உறுப்புகளை எவ்வளவு தூரம் ஏங்கி எண்ண முடியுமோ... அந்தச் சக்தி அங்கே படர வேண்டுமென்று நினைவைச் செலுத்துங்கள்.**




**நம் வாழ்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நல்லதாக்கித் தருவதே... குருநாதர் காட்டிய அருள் வழி**

நம்முடைய குழந்தையை வளர்க்கின்றோம். செல்லமாக வளர்த்துக் கொண்டும் நேரத்தில் "அவன் குறும்புத்தனம் செய்கின்றான் பார்..." என்று சொல்வோம்.

அவனை நல்லவனாக்குகின்றோம்.
1.ஆனால் அவனுடைய குறைகளை நாம் சொல்லிக் கொண்டே வருகின்றோம்.
2.அதைப் பரிபக்குவமாக எடுத்துச் சொல்லும் நிலை வர வேண்டும்.

குடும்பம் வீடு என்று இருக்கும் பொழுது சில நேரங்களில் குறைகள் வருகின்றது. அதைப் பரிபக்குவமான நிலைகளில் நிவர்த்தி செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

பக்குவம் தவறி விட்டால் சொல்கள் மாறிவிடும். வாருங்கள் என்று கனிவுடன் வரவேற்பதற்குப் பதில் "வாங்கள்….." என்ற சொல் அழுத்தமாக வரும். அது குற்றமாகிவிடும்.

ஆகவே பக்குவத்தின் நிலைகள் என்பது
1.ஒன்றை நல்லதாக்குவதும் கெட்டதாக்குவதும்
2.உணர்வுகளை மாற்றுவதும் குணங்களை மாற்றுவதும்
3.எதிரிகளாக்குவதும் நண்பனாக்குவதும்
4.இது எல்லாம் நம்முடைய உணர்வுகள் வெளி வரும் அதனின் பக்குவத்தைப் பொறுத்துதான் இருக்கின்றது.

ஆக நாம் தொழில் செய்தாலும் சரி மற்ற எதிலும் சரி… பக்குவ நிலை அவசியம் தேவை. சில கஷ்டங்கள் வந்து விட்டாலும் ஓரளவுக்கு நாம் பக்குவமான நிலைகள் கொண்டு சிந்தித்தோம் என்றால் அதிலிருந்து விடுபட்டு அதை நிவர்த்திக்கும் தன்மை வருகிறது… பகைமைகளைக் குறைக்கலாம்.

இதைப் போல வாழ்க்கையில் பரிபக்குவ நிலைகளை நாம் கொண்டு வருதல் வேண்டும். மற்றவருடைய குறையான உணர்வுகள் நமக்குள் வராதபடி தடுக்கத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற வேண்டும் என்று எண்ணி எடுத்து அதை வைத்துத் தடுத்து நிறுத்தினால் அதன் வேகத்தையும் துடிப்பையும் நிறுத்தி உணர்வின் அறிவாக நமக்குள் சிந்தித்துச் செயல்படும் சக்தி வரும்.

1.யாரும் கெட்டவர்கள் அல்ல…
2.சந்தர்ப்பத்தில் தான் இத்தனை நிலைகளும் வருகின்றது. அந்தச் சந்தர்ப்பம் கெட்டவராக மாற்றுகின்றது.
3.அதிலிருந்து மீட்டிடும் வழியே நமது குருநாதர் காட்டிய அருள் வழி.

ஆனால் அதே சமயத்தில் அதற்காக வேண்டி ஒரு முரடனிடமோ குடிகாரனிடமோ பக்குவமாகப் பேசினால் அவன் கேட்பானா...? நாம் அந்த இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்... அது தான் முக்கியம்.

நம்முடைய பக்குவத்தை அங்கே அவனிடம் எடுத்துச் சொன்னால் அவன் கேட்க மாட்டான். அவன் தவறு செய்ய விரும்புகின்றான்... நாம் அதற்குப் பக்குவம் சொன்னால் அவன் கேட்க மாட்டான்.

1.திருடனிடம் சென்று "ஏண்டா இந்த மாதிரிச் செய்கிறாய்...?" என்று பக்குவம் சொன்னால் கேட்பானா...? கேட்க மாட்டான்.
2.அந்த இடத்தில் அவனுடைய உணர்வுகள் நமக்குள் வராதபடி நம்மை நாம் பக்குவப்படுத்த வேண்டும்.

நல்ல பொருள்களை வைத்திருக்கிறோம் என்றால் அதிலே தூசி அதிலே படாதவாறு நாம் பாதுகாக்க வேண்டும். அதைப் பத்திரமாக மூடி வைக்க வேண்டும்.

தீமை நமக்குள் புகாதபடி தடுக்க வேண்டும். ஆனால் அதற்காக வேண்டிப்
1.போக்கிரியையும் திருடனையும் பார்த்த பின் நாம் பக்குவமாக நடந்து கொண்டிருந்தால் எல்லாம் தலைக்கு மேல் சென்று விடும்.
2.நம்முடைய பக்குவமெல்லாம் தலைகீழாகக் கவிழ்ந்து விடும்.

அவன் செய்யும் தவறு நமக்குள் வந்து விடாது... அதனால் நாம் தவறு செய்யாது பக்குவமாக அதைத் தடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவன் தவறு செய்கிறான் என்றால் "இவன் இப்படித் தவறு செய்கின்றானே..." என்று அந்தத் தவறான உணர்வு நமக்குள் வந்தால் அதைத் தான் நம்மையும் செய்யும்படி வைத்துவிடும்.

இதைப் போல
1.நமது வாழ்க்கையில் நடந்து கொள்ள பரிபக்குவ நிலைகள் தேவை.
2.எந்தெந்த இடத்திற்கு எவ்வாறு தேவையோ... அப்போதெல்லாம் நம்மை நாம் பக்குவப்படுத்திப் பழக வேண்டும்.

**ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்**

வான் வீதியில் ஜீவணுக்கள் உருவாகின்றது... "வைரஸ் உருவாகின்றது" என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர் இங்கிருந்து செயற்கைக் கோள்களை விண்ணிலே அனுப்பி அங்கே பார்க்கப்படும் பொழுது இதையெல்லாம் காணுகின்றார்கள்.

சுமார் நாற்பது வருடத்திற்கு முன்பு நான் (ஞானகுரு) ஏற்கனவே இதை எல்லாம் வெளிப்படுத்தி உள்ளேன்.

சூரியனிலிருந்து வரக்கூடிய உணர்வுகளும்... இரண்டு நட்சத்திரத்திலிருந்து வெளிப்படக்கூடிய கதிரியக்கங்களும் அந்த அலைகள் உள்ளே வந்தால்... வியாழன் கோளின் கதிரியக்கமும் அதனுடன் சேர்ந்தால் இந்த உணர்வின் தன்மை சேர்ந்து உயிர்த் துடிப்பாகி உயிரணுவாக உருவாகும் என்று ஏற்கனவே குரு வழியில் விளக்கம் கொடுத்துள்ளேன்.
1.துடிப்பாகும் பொழுது இயக்கமாகிறது...
2.அதனுடைய இயக்கத்தை "ஈசன்" என்று ஞானிகள் பெயரை வைத்துள்ளார்கள்.

ஆனால் வைரஸ் என்ற நிலையானால் எதன் உணர்வைக் கவர்ந்ததோ அதை வளர்க்கும் அந்த அணுவாகின்றது.

உயிரணு தோன்றுவது அங்கே பால்வெளி மண்டலத்தில். பூமி இழுத்துக் கொண்டால் மற்ற சத்தினைக் கவர்ந்து கொள்ளும் பொழுது வைரஸ்.

அதே சமயத்தில் பூமிக்குள் வந்தால் இதன் உணர்வை எடுத்து... அடுத்து இதைக் காட்டிலும் வலுவான தாவரங்களை எடுத்து உடலாக மாற்றிக் கொள்கிறது. கவர்ந்து கொண்ட தாவரத்தின் உணர்வுக்குத் தக்க புழுவாகவோ பூச்சியாவோ உருப் பெறுகின்றது

மனித உடலுக்குள் வந்தால் இந்த உணர்வை உட்கொள்ளும் விஷத்தன்மையாக மாறுகிறது. விஷத்தின் தன்மை எடுக்கப்படும் பொழுது (புதிய வைரஸ்கள்) எந்தெந்த நிலை ஆகின்றது...? என்பதை முன்பே நான் சொல்லி உள்ளேன்.

ஆனால் "ஆராய்ச்சியில் இன்று கண்டுபிடித்தார்கள்" என்று சொல்கின்றார்கள்.

ஏனென்றால் குருநாதர் காடுகளிலும் மேடுகளிலும் மலைகளிலும் பல இடங்களுக்கு என்னை அனுப்பி இந்தக் காற்று மண்டலத்தில் என்னென்ன இருக்கின்றது...? என்ன உருவாகின்றது...? என்று தெளிவாகக் காட்டினார்.

1.நான் கண்ட உண்மைகள் அதிகம்...
2.ஒரே தடவையில் அனைத்தையும் சொல்ல முடியாது
3.சிறுகச் சிறுக அதைச் சொல்லி வருகின்றேன்.
4.சிறுகச் சொன்னால்... சாமி சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை என்று விட்டுவிடாதீர்கள்.

ஒரு நாடாவிலே டேப் மூலம் பதிவாக்கி விட்டால் திருப்பி அதை இயக்கப்படும் பொழுது... எது பதிவோ அதை அப்படியே பேசுகின்றது.

அதே போன்றுதான் யாம் சொல்லக்கூடியதைக் கூர்ந்து கவனித்து நீங்கள் பதிவாக்கி விட்டால் சந்தர்ப்பம் உங்களுக்கு மீண்டும் அது (எம்முடைய பேச்சு) நினைவுக்கு வரும்.

ஒரு தீயவனைப் பார்த்தால் அவனுடைய உணர்வு வராதபடி தடுக்க வேண்டும் என்றால்... ஈஸ்வரா...! என்று உயிரை எண்ணி... அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்ற புருவ மத்தியில் எண்ணிவிட்டால் அந்தத் தீய உணர்வு நமக்குள் புகாது தடுக்கப்படுகிறது.

அவ்வாறு தடுத்து நிறுத்தி விட்டு... அடுத்து நல்லதை எண்ணி நமக்குள் கலக்க வேண்டும். அதைச் செய்யப் பழக்கப்படுத்துவதற்குத் தான் இந்த உபதேசம்.

ஆக மொத்தம் நீங்கள் எல்லோருமே என்னை நம்புகின்றீர்கள்... இல்லையா...!
1.ஏன்..? நானும் மனிதன்தான்... நீங்களும் மனிதன் தான்...!
2.குரு வழியில் நான் எந்த உணர்வைப் பெற்றேனோ அதே உணர்வை நீங்களும் பெற்று ஏன் இதை வளர்த்துக் கொள்ளக் கூடாது...?

"சாமி செய்து தருவார்..." என்று மட்டும் எண்ணுகின்றீர்கள்... ஆனால் "சாமி சொன்ன வழியினை..." நாம் பின்பற்றினோம் என்றால் நிச்சயம் அந்த நன்மை பெற முடியும் என்ற அந்தத் தன்னம்பிக்கை உங்களுக்கு வர வேண்டும்.

என்னுடைய பார்வை என்னுடைய பேச்சு பிறருக்கு எப்படி நல்லதாகின்றதோ "அதே உணர்வை ஒத்து" நீங்களும் உங்கள் பார்வையால் உங்கள் பேச்சால் வெளிப்படுத்தும் பொழுது மற்றவர்களுக்கு நல்லதாக்கலாம் அல்லவா... தீமைகளைப் போக்கலாம் அல்லவா...!

பிறர்படும் கஷ்டங்களைப் பாசத்துடன் கேட்கின்றோம் அந்த உணர்வு வந்தபின் உடலுக்குள் வேதனையைத் தான் கொடுக்கின்றது நோயையும் உண்டாக்குகின்றது. இதைப் போன்ற தீமை உங்களுக்குள் வரக்கூடாது

1.ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எத்தனை வகையான வேதனைகள் வரலாம்.
2.அதை எல்லாம் தவிர்த்துக் கொள்வதற்குத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற்றால்
3.அந்த உணர்வின் தன்மை இங்கே நிறுத்தப்படுகின்றது.

இந்தப் பயிற்சியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.






## வெள்ளாட்டுப் புழுக்கையின் மருத்துவ குணம்

வெள்ளாடு பல விஷச் செடிகளை உணவாக உட்கொள்கின்றது… அந்த விஷத்தன்மைகளைத் தன் உடலில் சேர்த்துக் கொள்கின்றது.

கருவுற்றிருக்கும் ஒரு வெள்ளாடு
1.அந்தச் சமயத்தில் எந்தெந்தத் தாவர இனங்களை உட்கொண்டதோ அந்தக் குட்டி பிறந்த பின் என்ன செய்யும்,…?
2.தாய் கருவுற்ற சந்தர்ப்பத்தில் எத்தகைய செடிகளை உணவாக உட்கொண்டதோ அதையே அந்தக் குட்டியும் உணவாக எடுத்துக் கொள்ளும்.

உதாரணமாக இன்ன இடத்தில் இருக்கக்கூடிய விஷச் செடியை அந்தத் தாய் உட்கொண்டிருந்தது என்றால் அதிலே கருவுற்று வளர்ந்த இந்தக் குட்டியும்
1.இந்த ஆட்டுக்குட்டியை வேறு இடங்களுக்கு விலைக்கு வாங்கிச் சென்றாலும் கூட
2.அதே விஷச் செடியைத் தேடித்தான் செல்லும்… அது இல்லை என்றால் வாடும்.

காரணம் கருவிலே இருக்கும் போது அது நுகர்ந்த உணர்வுக்கொப்ப அதனுடைய உணர்ச்சிகள் அவ்வாறு இயங்குகின்றது.

இத்தகைய விஷச் செடியை உணவாக உட்கொள்ளும் அந்த ஆடு அதில் உள்ள விஷத்தைத் தன் உடலாக மாற்றிக் கொள்கின்றது. ஆனால் அதனுடைய மலம் நல்லதாக வெளி வருகின்றது. அந்த வெள்ளாட்டுப் புழுக்கையை நாம் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

மூட்டு வலி மூட்டு வாதம் சரவாங்கி நோய் என்றெல்லாம் சிலருக்கு இருக்கும். காரணம்
1.பிறருடைய துன்பங்களையும் துயரங்களையும் கேட்டு நுகர்ந்த நிலையில்…
2.வேதனைப்பட்ட மனிதர்களின் உணர்வுகளையும் நுகர்ந்திருந்தால்
3.அதனால் வேதனையை உருவாக்கும் அணுக்கள் உடல் உருவாகி மூட்டுவாதம் முழங்கால் வாதம் போன்ற உபாதைகளும்
3.ஈரக்குலையில் அந்த உணர்ச்சிகளைத் தூண்டும் போது வேதனைப்படும் நிலைகளும் உருவாகின்றது.

இதை மாற்றி அமைக்க அந்த வெள்ளாட்டுப் புழுக்கையைச் சிறிதளவு எடுத்து அதை லேசாகச் சூடாக்கி “அதிலிருந்து வெளி வரும் மணத்தை நுகர்ந்தால்…”
1.உடலுக்குள் இருக்கும் விஷத்தன்மையை முறித்து விடுகின்றது.
2.மூட்டு வீக்கத்திற்கு உண்டான அணுக்கள் மடிகின்றது விஷ நீர்களை அகற்றுகின்றது வாத நோய்கள் குறைகிறது.

இப்படி அந்த வெள்ளாட்டுப் புழுக்கையின் மணம் மருந்தாக மனிதனுக்குப் பயன்படுகிறது.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

கொடூரமான புலி மற்ற சாந்தமான உயிரினங்களை அடித்துக் கொல்வது போல்... சந்தர்ப்பத்தால் நாம் நுகரும் வேதனை வெறுப்பு என்ற உணர்வுகள்... நல்ல அணுக்களால் உருவாக்கப்பட்ட நம் உடலின் உறுப்புகளையும்... அதை உருவாக்கிய அணுக்களையும் கொன்று புசித்துவிடும்..

இதிலிருந்து மீள்வதற்கு நம்முடன் வாழ்ந்து வளர்ந்த முன்னோர்கள் மூதாதையர்களின் ஆன்மாக்களை விண் செலுத்தி... அந்தப் பேரருள் உணர்வுகளை நம் உடலுக்குள் உள் செலுத்தித் தீமையான நிலைகளை மாற்றி இந்த உடலுக்குப் பின் பிறவி இல்லா நிலை அடைய வேண்டும்.

கோடிச் செல்வம் தேடினாலும்... அந்தச் செல்வம் நம்முடன் வருவதில்லை. ஏன்...! இந்த உடலும் நம் கூட வருவதில்லை. ஆனால்
1.பேரருள் என்ற உணர்வின் தன்மை உயிருடன் ஒன்றப்படும் பொழுது
2.ஒளியின் உணர்வாக நாம் பிறவி இல்லாத நிலை அடையலாம்.
3."இதை விரும்புவோர் தான் செயல்படுத்த முடியும்..."

உடல் இச்சை கொண்டால் பலன் இல்லை...!

அருள் உணர்வின் தன்மை இந்த உடலுக்குள் எடுத்து வளர்த்தால் தீமைகளை அகற்றிச் சிந்தித்து செயல்படும் தன்மையும்... தேடிய செல்வத்தைக் காத்திடும் நிலையும்... இந்த உடலைச் சீராக வைத்துக் கொள்ளும் நிலையும் வரும்.

"செல்வத்தை நாம் தேட வேண்டியதில்லை... அந்தச் செல்வமே நம்மிடம் வந்து சேரும்..." ஆனால் செல்வம் குவிகின்றது என்று செல்வத்தின் மீது ஆசை வைத்தால் நம் உணர்வின் தன்மைகள் அனைத்தும் உடலின் பற்றுக்கே வந்து விடுகின்றது.

ஞானத்தினை நாம் வளர்க்கும் பொழுது அருள் ஞானத்தின் வழிகளில் நாம் சென்று இருளை அகற்றி மெய்ப் பொருளைக் காண முடியும்

ஆகையினால் காலையில் ஐந்தரைலிருந்து ஆறரை மணிக்குள்
1.தினசரி துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற்றுத் தீமைகளை

நீக்கிப் பழகுதல் வேண்டும்
2.துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெறுவதை ஒரு வழக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

நாள் முழுவதும்... மற்றும் அவ்வப்போது சேரும் தீமைகளை அகற்றிடும் சக்தியாக... துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெருக்கி அருள் வழியில் நாம் சிந்தித்துச் செயல்படும் தன்மையாக... இந்த இல்லற வாழ்க்கையில் தெளிந்த மனம் கொண்டு வாழ முடியும்.

வேதனை என்ற விஷமோ கோபம் என்று கார உணர்வோ பகைமையான உணர்வுகளோ சாபம் என்ற உணர்வுகளோ நம்மைத் தாக்கப்படும் பொழுதெல்லாம்... துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று ஏங்கித் தியானித்து நம் உடலுக்குள் அதை உட்செலுத்தித் தீமைகளை அவ்வப்பொழுது மாற்றிக் கொண்டால் பகைமைகள் வளராது.

தீமை என்ற நிலையே நம் உடல் அணுக்கள் பெறாதபடி தடுத்துக் கொள்ள முடியும். துருவ நட்சத்திரத்தின் சக்தியை நமக்குள் பெருக்கிப் பிறவியில்லா நிலை அடைய முடியும்.

துருவ நட்சத்திரத்தின் சக்தியை நம் உடலில் அணுக்களாக உருவாக்கிக் கொண்டால்... நம் சொல்லும் செயலும் புனிதம் பெறவும்... நம் உடலில் தெளிந்த நிலையும் உருவாகும்.

1.அந்தத் துருவ நட்சத்திர ஈர்ப்பின் வட்டம் நமக்குள் பெருகும் போது
2.உடலில் விளைந்த சூட்சும சரீரம் துருவ நட்சத்திரத்துடன் இணைந்து
3.நம்மைப் பிறவியில்லா நிலையை அடையச் செய்வது உறுதி.




காலையில் ஐந்தரைலிருந்து ஆறரை மணிக்குள் தினசரி துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற்றுத் தீமைகளை நீக்கிப் பழகுதல் வேண்டும். அதை ஒரு வழக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.




## அருள் ஞானக் கருத்துக்களைத் துணிவுடன் வெளிப்படுத்த வேண்டும்

எம்முடைய உபதேசத்தைக் கேட்டீர்கள். ஆனாலும் அடுத்தவர்களுக்கு இந்த உண்மையை எடுத்துச் சொல்ல அச்சம் ஏற்படுகின்றது. அச்சம் ஏற்படும் போது

சொல்ல வேண்டும் என்ற துணிவும் இருக்கின்றது... சொல்ல முடியாமல் போகும் நிலையும் ஏற்படுகிறது.

காரணம்...
1.நம்மைக் கேவலமாக எண்ணுவார்களோ...?
2.அவருடைய பார்வையைப் பார்த்தாலே வித்தியாசமாக இருக்கிறது என்று விலகிச் சென்று விடுவோம்.
3.இந்த உண்மைகள் சொல்லாக வெளி வராது.

நம்முடன் சகோதரர்களாக இணைந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அவர்கள் குறைகளைக் காணும் பொழுது அந்தக் குறையை நிவர்த்திக்கும் உணர்வின் சத்துக்களை நாம் ஊட்ட வேண்டும்.

இதில் அச்சம் என்பது கூடாது... அச்சமென்று வந்து விட்டாலே "உண்மையை மறைக்கிறோம்..." என்று தான் பொருள்.
1.ஞானிகள் காட்டிய உண்மைகள் இவ்வாறு தான் வேறு வேறு நிலைகளுக்கு மாற்றப்பட்டு
2.உண்மைகள் அறிய முடியாதபடி போய்விட்டது காலம் காலமாக...!

இன்று விஞ்ஞான அறிவில் மனிதனின் குணங்கள் அனைத்தும் அழியும் பருவம் பெற்று விட்டது. அசுரனின் நிலைகளுக்குச் செயலாக்கும் உணர்வுகள் வளர்ந்து கொண்டு வருகின்றது.

இதைப் போன்ற நிலைகளில் துணிவுடன்... உபதேசத்தைக் கேட்பதோடு மட்டுமல்லாதபடி
1.தன் குடும்பங்களில் குறைகள் ஏற்பட்டால் அவர்களுக்குத் தெளிவாக ஞானத்தை எடுத்துரைத்து
2.நாம் எப்படி வாழ வேண்டும்...? என்ற உண்மையினைத் துணிவுடன் எடுத்துச் சொல்ல வேண்டும்.

குடும்பம் எப்படி ஒன்று சேர்ந்து வாழ வேண்டும்...? குறைகள் நம்மை எவ்வாறு சாடுகின்றது...? அதிலிருந்து எப்படி மீள வேண்டும்...? என்ற உபாயங்களைச் சொல்லித்தான் அதை மாற்றுதல் வேண்டும்.

நீ தியானம் செய்து கொண்டே தான் இருக்கின்றாய். ஆனால் நீ தவறு செய்யாமல் இருக்கின்றாயா...? என்று அவர்கள் நம்மைக் கேட்கும் நிலை வந்து விடுகின்றது.

1.அதாவது... தியானம் செய்து கொண்டிருப்பவர்களிடம் சிறிது குறைகள் வந்தாலும்...
2.பார்...! இவன் எனக்கு அன்றைக்கு உபதேசித்தான் ஆனால் இப்போது இவன் என்ன செய்கிறான்...? என்று சொல்லக்கூடிய நிலை வந்து விடுகின்றது.

உயர்ந்த குணங்கள் இங்கே மறைக்கப்படுகின்றது.

நாம் செய்து வைத்திருக்கும் உணவுப் பொருள்களிலே ஒரு துளி விஷம் பட்டு விட்டால் அந்த உணவையே இது கெடுத்து விடும்... செயலற்றதாக மாற்றி விடுகிறது.

நாம் எடுத்துக் கொண்ட உணர்வுகளில்
1.நமக்குள் அறியாது வரும் பிழை உடனே அந்த உணர்ச்சிகளைத் தூண்டும்.
2.அப்பொழுது நமக்கே புரியும்... நம்மை அறியாமல் இந்த சொல் வந்து விட்டது என்று...!
3.இந்தக் குற்றத்தை ஏற்றுக் கொண்டு அவர்கள் மனதைப் புண்படுத்தும் என்ற நிலையில் தன்னைத்தான் உணர்தல் வேண்டும்.
4.இதை உணர்ந்த பின் மகரிஷிகளின் அருள் ஒளியைப் பெற்று அதை நமக்குள் அடக்கிடல் வேண்டும்.

பின்...
1.என்னை அறியாது இயக்கும் இருள்கள் அகல வேண்டும் மெய்ப் பொருள் காணும் திறன் என்னிலே அது வளர வேண்டும் ஈஸ்வரா...!
2.என் பார்வை அனைவரையும் நலமாக்கும் சக்தி பெற வேண்டும்
3.என் சொல் அனைவரையும் மகிழ்ச்சி பெறச் செய்யும் செயலாக வர வேண்டும் என்று இவ்வாறு நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அகஸ்திய மாமகரிஷிகளின் அருள் சக்தியும் துருவ மகரிஷிகளின் அருள் சக்தியும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் சப்தரிஷி மண்டலங்களின் பேரருளும் பேரொளியும் தியானம் இருக்கும் அனைவரது உடல்களிலும் படர்ந்து அவர்களது இரத்த நாளங்களில் கலந்து அவர்களது

உடல்களில் உள்ள ஜீவான்மா ஜீவணுக்கள் அனைத்தும் பெற்று
1.அவர்களது வாழ்க்கையில் அறியாது சேர்ந்த
2.சாப வினைகளால் விளைந்த தீய வினைகளால் விளைந்த பாவ வினைகளால் விளைந்த பூர்வ ஜென்ம வினைகளால் விளைந்த
3.கேன்சர் டிபி இரத்தக் கொதிப்பு சர்க்கரைச் சேர்த்து ஆஸ்த்மா இருதய நோய் மூலநோய் சரவாங்கி நோய் வாத நோய் போன்ற
3.சர்வ நோய்களையும் சர்வ தோஷங்களையும் நீக்கிடும் அருள் சக்தி பெற அருள்வாய் ஈஸ்வரா.

தியானத்தில் இருப்பவர்கள் எல்லோரது உடல்களிலும் சர்வ தோஷங்களும் நீங்கி அவர்கள் உடல் நலம் பெற வேண்டும் என்று ஏங்கித் தியானியுங்கள்.

அவரவர்கள் உடலில்... இடுப்பு வலியோ கை கால் வலியோ தலை வலியோ வயிற்று வலியோ கிட்னி கோளாறோ இருதயத்தில் கோளாறோ மூல நோயோ இருந்தால் மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் உடலில் உள்ள அந்த நோய்கள் நீங்க வேண்டும் என்று இப்பொழுது ஏங்கித் தியானியுங்கள்.

இப்பொழுது உங்கள் உடலில் சர்வ நோய்களையும் நீக்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகின்றது. "எல்லோரும் இந்த நிலை பெற வேண்டும்..." என்று எண்ணி ஏங்குங்கள்.

நோய் நீக்கும் அரும்பெரும் சக்தி இப்போது நீங்கள் பெறுகின்றீர்கள்
1.உங்கள் உடலில் "கரண்ட் பாய்வது போல்..." இருக்கும்
2.சர்க்கரைச் சத்தோ வாத நோயோ ஆஸ்த்மாவோ மூல நோயோ இருதய நோயோ இருந்தால்
3.அங்கெல்லாம் துருவ நட்சத்திரத்தின் சக்தி "மின்சாரம் போல் பாய்ந்து" அந்த உறுப்புகள் சீராக இயங்கத் தொடங்கும்.
4.உங்கள் உடலில் எந்த வலியாக இருந்தாலும் குறையும்... வேதனைகள் அகலும்.

கேன்சர் டிபி போன்ற கடுமையான நோய்களும் குறையத் தொடங்கும் அது உங்கள் உடலில் இருந்து கலைந்து "கீழே இறங்குவதை..." நீங்கள் உணரலாம்.

எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் அதிலே மகரிஷிகளின் உணர்வுகள் படர்ந்து உடல் நலம் பெறும் உணர்ச்சிகள் இப்பொழுது தோன்றும்.

நீங்கள் சுவாசிக்கும் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள் உங்கள் இரத்த நாளங்களில் கலக்கப்பட்டு உடலில் இருக்கக்கூடிய விஷத்தன்மைகள் கலைந்து சென்று அது விலகும்.

1.உடலில் நோய்கள் குறைந்து அருள் உணர்வுகள் பெருகும் சக்தி பெறுகின்றது
2.அகஸ்தியன் அறிந்த... தீமைகளை அகற்றிடும் அருள் உணர்வு உங்கள் உடல்களில் இப்போது படரும்.

சர்வ பிணிகளும் நீங்கும்... இருதயம் சீராக இயங்கும்... எந்த நோயாக இருப்பினும் அது மாறும். உடலில் இருக்கக்கூடிய சிக்கல்கள் மாறும். உடலில் நல்ல ஜீரண சக்தியும் கிடைக்கும்.

**புத்திர பாக்கியம் பெற தியானிக்க வேண்டிய முறை:-**
புத்திர பாக்கியம் வேண்டுவோர் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று எண்ணிவிட்டு
1.தன் உடலிலே புத்திர பாக்கியம் பெறும் அருள் சக்தி பெற வேண்டும் என்றும்
2.கணவருக்கு அது கிடைக்க வேண்டும் என்று மனைவியும்
3.மனைவிக்குக் கிடைக்க வேண்டும் என்று கணவனும் ஏங்கித் தியானியுங்கள்.
உங்களுக்குள் புத்திர பாக்கியம் பெறும் அருள் உணர்ச்சிகள் உங்கள் உடலில் உருவாவதைக் காணலாம்.

உங்கள் இரத்த நாளங்களில் புதுவிதமான உணர்ச்சிகள் தோன்றி
1.கருப்பைகளிலே கரு உருவாகும் நல்ல மாற்றங்கள் ஏற்படுவதும்
2.விந்துகளிலும் அந்த அருள் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு
3.குழந்தைகள் உருவாகும் உணர்வின் அணுக்கள் உருப்பெறுவதை உங்கள் உடல்களில் உணரலாம்.




புத்திர பாக்கியம் பெற வேண்டுவோர் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியால் தன் உடலிலே புத்திர பாக்கியம் பெறும் அருள் சக்தி பெற வேண்டும் என்றும் கணவருக்கு அது கிடைக்க வேண்டும் என்று மனைவியும் மனைவிக்குக் கிடைக்க வேண்டும் என்று கணவனும் ஏங்கித் தியானியுங்கள்.

உங்கள் இரத்தங்களில் புது உணர்ச்சிகள் தோன்றி கருப்பையிலே கரு உருவாகும் நல்ல மாற்றம் ஏற்படுவதும் விந்துகளிலும் அந்த அருள் உணர்ச்சிகள் தூண்டப்பட்டுக் குழந்தை உருவாகும் அணுக்கள் உருப்பெறுவதை உணரலாம்.




## ஞானிகள் உணர்வை நாம் நுகர்ந்தால் அது நம் உடலில் உள்ள தீமை செய்யும் அணுக்களை உணவாக எடுக்கும்

1.தீமைகளை வென்றவன் அருள் ஞானி.
2.அதை வைத்து நமக்குள் உருவாகும் தீமைகளைக் கொல்ல வேண்டும்.

ஒன்றை ஒன்று புசித்துத் தான் ஒவ்வொன்றும் வாழ்கின்றது. ஆடு சாந்தமாந உணர்வாக இருந்தாலும் புலி அதைக் கொன்று புசிக்கத்தான் செய்யும்.

இதைப் போல நமக்குள் நல்ல உணர்வுகள் இருப்பினும்
1.நாம் எடுத்துக் கொண்ட வேதனையான உணர்வுகளால் உடலுக்குள் டி.பி.நோய் வந்து விட்டால்

2.உடலில் உள்ள நல்ல அணுக்களை அது கொன்று புசிக்கத் தான் செய்யும்...
3.எலும்புகள் இருக்காது காணாமல் போய்விடும்.

ஆக நாம் எடுத்துக் கொண்ட வேதனைகள் உடலில் இவ்வாறு உருவாகி விட்டால் அதைக் கொன்று புசித்து விடும்.

மனிதனில் விளைந்த வேதனையான தீமையான மூச்சலைகள் அங்கே தாவர இனங்களில் பட்டு நாம் எதைப் புசித்தோமோ அதைக் கொன்று நமக்கு உணவில்லாத படி செய்து அந்த இனத்தைக் கொன்று விடுகின்றது.

அதாவது நம் உடலுக்குள் மட்டுமல்ல... தாவர இனத்திலும் இதைத்தான் கொல்கிறது.

அக்ரிகல்ச்சரில்... தென்னை மரத்திலே அதனுடைய கருவுலகை எடுத்து அதிலுள்ள சாறை எடுத்து அதிலே தீமை விளைவிக்கும்
1."ஓலைக் கருகல்" என்ற நிலையில் அந்தச் சத்தினை உறிஞ்சிச் சாப்பிடும் கொசுக்களையோ பூச்சிகளையோ கொல்ல
2.விஞ்ஞானிகள் மற்ற உணர்வைச் சேர்த்து அதிலே கருவை உண்டாக்குகின்றார்கள்.

விஞ்ஞான அறிவு கொண்டு மரத்திலே இணைத்த பின் இது படர்ந்து ஓலைகளின் சத்தை எடுக்கும்... ஆனால் அதே சமயத்தில் ஓலைச் சத்தைத் தின்று கொண்டிருக்கும் பூச்சிகளையும் கிருமிகளையும் இது கொன்று புசித்துக் கொண்டே இருக்கும்.

அது செத்த பிற்பாடு தான் இதுவும் போகும்... பின் மடியும்...!

அதே மாதிரித் தான் அந்த மகரிஷிகள் உணர்வின் சத்தை அந்த மெய் ஞானிகள் அருள் உணர்வை நமக்குள் எடுத்துக் கொண்டு உடலில் விளைய வைத்த பின்
1.மனிதனாக உருவாக்கிய நல்ல உணர்வின் அணுக்களை "எது கொன்று புசிக்கின்றதோ..."
2.அது இருக்கும் வரையிலும் அருள் ஞானிகள் உணர்வு அதைக் கொன்று புசித்துக் கொண்டே இருக்கும்.
3.பின் உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரமாக நிலைத்தே இருக்கும்.

விஞ்ஞானத்திற்கு மெய் ஞானத்திற்கும் உள்ள நிலைகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

உணவுக்காக விஞ்ஞானி அவ்வாறு செய்கின்றான். ஆனால் என்றும் நிலையான சரீரத்தை அதாவது "நம்மை ஒளியின் சரீரமாக..." நிலைக்கச் செய்கின்றான் மெய் ஞானி.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நாம் எடுக்கும் எண்ணங்கள் உணர்வாக ஆனாலும் உடலுக்குள் சென்று அணுவின் தன்மையாக ஆன பின்
1.சுவாசித்த உணர்வுக்குள் மோதல்கள் எப்படி...?
2.இந்த உடலில் மனக்கலக்கங்கள் சஞ்சலங்கள் வெறுப்புகள் வேதனைகள் எப்படி எல்லாம் வருகின்றது...?

வீட்டில் செல்வம் இருக்கும் எல்லோருக்கும் நிம்மதி இருக்கின்றதா...?

தசரதன் (கைகேயியின் துணையால்) மற்றவர்களை அடக்கித் தன் சாம்ராஜ்யத்தை வெற்றி பெறச் செய்தான். இருந்தாலும் அதே உணர்ச்சிகள் இங்கே "கூனி" கைகேயியிடம் என்ன சொல்கிறது...?

1.இராமனுக்குப் பட்டம் சூட்டி விட்டால்... நீ வேலைக்காரியாக ஆகிவிடுவாய் என்று (உள் மனது...) உணர்த்துகிறது...! என்பதை
2.அதாவது அப்படித் தோன்றும் உணர்வுகளை உருவமாக்கிக் காவியங்களைப் படைத்து
3.கருத்தினை மக்களைத் தெளிவாக்குவதற்காகக் கூறப்பட்ட இந்த உபாயத்தை
4.அவரவர்கள் இஷ்டத்திற்கு எடுத்துத் தெளித்து விட்டனர்
5.அந்த உண்மையின் மூலக்கூறை அறிந்தோர் இந்த உடல் இச்சைக்குத் தான் பெற முடிந்தது.

தான் சாம்ராஜ்யத்தை ஆள வேண்டும்... மற்றவர்களை அடக்க வேண்டும்... என்ற உணர்வை எப்படிப் பெற்றானோ அதே உணர்ச்சி தான் தசரதச் சக்கரவர்த்திக்கும் வருகின்றது.

தன் மகனை நல்லவனை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். ஆனால்
1.தன் உடலுக்குள் மற்றவர்களை துன்புறுத்திய உணர்வுகள் இந்த உயிரோடு

வளர்ந்து...
2.பத்தாவது நிலை அடையும் மனிதனாகத் தான் இருக்கின்றது.

ஆனால் எல்லாம் இணைந்து வரப்படும் போது என்னாகின்றது...?

இரண்டு மனைவி இருக்கக்கூடிய வீட்டிலே சக்களத்திப் போராட்டம் வருகின்றது. ஆனால் உயிரோடு (உயிர் தான் தசரதச் சக்கரவர்த்தி) சேர்த்துப் பலவிதமான உணர்வுகள் வரும் பொழுது போராட்டம் "எத்தனை வரும்...? எப்படி இருக்கும்...?"

ஒரு கணவனுக்கு இரண்டு மனைவி இருந்தால் எப்படி இருக்கும்...? மூன்று மனைவி வைத்திருந்தால் எப்படி இருக்கும்...?

அது போல் தான்
1.உயிர் என்று நிலைகள் வரும் பொழுது இதனோடு சேர்த்து
2.அத்தனை சக்திகளும் (மனைவியாக) சேர்த்து... இந்த உடலையே இயக்குகின்றது
3.அதனதன் உணர்வுகள்... அது அது பெறுகின்றது... அதிலே எதன் உணர்வு வலு ஓங்குகிறதோ அதன் வழி தான் நடக்கின்றது.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கின்றான் தசரதன்.

ஏனென்றால் இராமன் அன்பு கலந்தவன் அரவணைக்கக்கூடியவன் பண்பு கொண்டவன் பரிவானவன் அறவழியில் அனைவரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய பொறுப்புடையவன் பொறுமையுடையவன் சிந்தித்து செயல்படுபவன் என்ற நிலையில் இருப்பினும் "இராமனுக்குப் பட்டம் சூட்டுவதைக் கைகேயி விரும்பவில்லை...."

அவனுக்குப் பட்டம் கிடைத்தால் என் மகன் பரதன் வேலைக்காரன் ஆகிவிடுவான். அவன் வேலைக்காரனானால் நானும் வேலைக்காரியாக ஆகிவிடுவேன் என்ற உணர்வுகள் அங்கே தோன்றுகின்றது

தசரதனுடைய எண்ணம் என்ன...? அடுத்த இராஜ்யம் வளர்ந்து விட்டால் அது தன்னை அடக்கிவிடும். அதற்குப் பதில் அவனை வலு இழக்கச் செய்து விட்டால் தனக்கே அந்த சாம்ராஜ்யம் சொந்தமாகின்றது.
1.அவன் எண்ணிய இந்த உணர்வின் சக்தி "மனைவியாக இப்படி வருகின்றது...?
2.சாம்ராஜ்யத்தை ஆள்வதற்காக தசரதன் அதைச் செய்தாலும்

3.இவனுக்குள் இருக்கும் சாம்ராஜ்யத்தை "இதுவே வந்து..." ஆளத் தொடங்குகிறது.

மற்றவர்களைத் துன்புறுத்தும் உணர்வு கொண்டு அதை ரசித்தான். ஆனால் இவன் உடலுக்குள் இவனைத் துன்புறுத்தும் தனமையாக அந்த "மனப்போராட்டம்" வருகின்றது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் எடுத்துக் கொண்ட எண்ணங்கள் உணர்வுகளால் உடலுக்குள் எத்தனை போர் முறைகள் வருகின்றது...? என்பதை இராமாயணம் தெளிவாகக் காட்டுகின்றது

அந்தக் காவியத்தின் கருத்தின்படி
1.ஒரு அணுவின் தன்மை எவ்வாறு செயல்படுகிறது...? என்பதை
2.பல உபதேசங்கள் வாயிலாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இணை சேர்த்து உங்களுக்கு விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டு வருகின்றேன்.

இது உங்களுக்குள் வளர்ந்தால் அதற்குண்டான ஞானம் கிடைக்கும். நீங்கள் அதைப் பெறக்கூடிய தகுதியாக உருவாக்குகிறேன்.

பிறவி இல்லாத நிலை அடைய வேண்டும் என்றால் இந்த உடலுக்குள் எத்தனை போர் முறைகள் வருகின்றது...? அதைச் சமாளிக்கக்கூடிய சக்தியும் அதற்குண்டான அருள் ஞானமும் உங்களுக்குத் தேவை.

அதற்குத் தான் இந்த உபதேசம்..!




ஒவ்வொரு நாளும்... ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் எடுக்கும் உணர்வால் உடலுக்குள் எத்தனையோ போர் முறைகள் வருகின்றது...? என்பதை இராமாயணம் தெளிவாக நமக்குக் காட்டுகின்றது. அதைச் சமாளிக்கும் சக்தியும் ஞானமும் நமக்குத் தேவை. அதற்குத் தான் இந்த உபதேசம்..!




## நாம் எடுக்க வேண்டிய “பிரதிக்ஞை…”

இராமன் மனதைக் குவித்து எப்படிச் சிவலிங்கமாகப் பூஜித்தானோ இதே போன்று நாம் எண்ணம் கொண்டு உணர்வின் தன்மைகளை ஒன்று சேர்க்கும் போது “இராமலிங்கம்…” என்று உயிரின் தன்மை எண்ணத்தால் உணர்வை ஒளியாக மாற்றியது என்று சொல்வார்கள்.

ஏனென்றால் எல்லாவற்றிற்கும் காரணப் பெயர் வைத்துத் தான் ஞானிகள் உணர்த்தியுள்ளார்கள்.

1.இராமலிங்கம் என்று சொன்னாலே நம் எண்ணங்கள் ஒன்று சேர்த்து வாழ வேண்டும் என்ற “இந்த எண்ணம் தான் இராமன்…”

2.அந்த மகிழ்ச்சி பெறும் உணர்வின் தன்மை நாம் பெறும் பொழுது தான் இராமன்.

இராமனின் பக்தன் யார்...? ஆஞ்சநேயன். எதனை நாம் எண்ணுகின்றோமோ இந்தச் சொல்லைச் சொல்லும் பொழுது அதை நீங்கள் நுகர்ந்தால் உங்களுக்குள் வாயுவாகப் புகுகின்றது.

இராமனின் பக்தன் வாயு புத்திரன்... அவன் ஒரு மந்திரி என்ற நிலைகளில் இந்த உணர்வின் தன்மை நீங்கள் சொல்லும் பொழுது பிறருடைய உடலில் இதைப் புகச் செய்தால் அவருடைய அறியாமையைச் நீக்கச் செய்யும்... சிந்திக்கச் செய்யும்.

1.இவ்வாறு நம் சொல்லுக்குள் தியானம் எடுத்த உணர்வுகள் கேட்போர் செவிகளில் பட்டபின்
2.கண் கவர்கின்றது... அவருடைய ஆன்மாவாக மாற்றுகின்றது
3.உயிரில் உள்ள காந்தம் கவர்கின்றது. இந்த உணர்ச்சி உடல் முழுவதும் படர்கின்றது.

ஒவ்வொரு உணர்வுக்குள்ளும் தீமையை நீக்கும் உணர்வுகளைப் பரவச் செய்யும் பொழுது... இந்த உணர்வின் தன்மை நமக்குள் ஞானமாக அந்த எண்ணங்கள் வருகின்றது.

அந்த எண்ணமும் சரி... நமக்குள் எடுத்துக் கொண்ட அணுக்களும் சரி... நம் உடலும் சரி... அந்த உணர்வுக்கொப்பத் தான் நம்முடைய செயல்களாகும்... சொல்லும் வரும்.

ஆகையினால்
1.இந்த வழியில் நாம் அனைவரும் உலகுக்கே வழிகாட்டியாக
2.குரு வழியில் அகஸ்தியன் சென்ற பாதையில் நாம் சென்று இருளை அகற்றி
3.அருள் ஞானிகள் உணர்வை நமக்குள் பெருக்கி நாம் ஒவ்வொருவரும் அருள் ஞானிகளாக மாற வேண்டும்.

நமது பேச்சும் மூச்சும் பார்வையும் பிறருடைய தீமைகளை அகற்றச் செய்ய வேண்டும். நம் பேச்சும் மூச்சும் பிறரை நல்ல சிந்தனைகளைச் சிந்திக்கும்படி... நல்ல உணர்வுகள் வளரும்படிச் செய்ய வேண்டும்.

நாம் பார்க்கும் பார்வை அவர்களை நலம் பெறச் செய்யும் சக்தியாக வர வேண்டும். அவர் வாழ்க்கையில் வளம் பெறும் நிலையாகச் செயல்பட வேண்டும்.

நமது பார்வை பிறருடைய தீமைகளையும் நோய்களையும் போக்கும் சக்தியாகப் பெற வேண்டும்.
1.அவருடைய நோயின் உணர்வு சங்கடத்தின் உணர்வு நமக்குள் புகாது
2.”தடுத்து நிறுத்தும்...” அந்த அருள் சக்தியாக நீங்கள் மாற வேண்டும்.

எனக்கு குரு கொடுத்த அருள் சக்தியை உங்களுக்கும் பெறச் செய்கின்றேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் இந்த உணர்வின் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

அவ்வாறு வளர்ந்து என்றென்றும் ஏகாந்தமாக எந்த எதிர்ப்பும் இல்லாது உணர்வின் தன்மை ஒளியாக மாற்றுதல் வேண்டும்.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எமக்கு அருளிய அருள் வழிப்படி
1.எனக்குள் அந்த ஞான வித்தை வளர்த்து
2.அந்த ஞானத்தின் வித்தைத் தான் உங்களுக்குள்ளும் பதிவு செய்தது.
3.நாம் அனைவரும் அதன் வழி நாம் செல்லும் போது பேரருளாக மாறுகின்றோம்.
4.பேரருளாக மாறும் பொழுது பேரொளியாக மாறுகின்றது.
5.பேரொளி என்ற நிலை வரும் போது பேரிருளையும் மாற்றும் சக்தி வருகிறது.

இதை நாம் தொடர்ந்து வழிப்படுவோம்... அருள் ஞானத்தைப் பெருக்குவோம்... அருள் வழி வாழ்வோம் என்ற இந்தப் “பிரதிக்ஞையை...” நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அமைதி பெறச் செய்யக்கூடிய உணர்வுகளை நாம் பெருக்குதல் வேண்டும்.
1.ஒவ்வொரு தெருவிலும் அமைதி பெறச் செய்ய வேண்டும்... சொல்லால் அல்ல...
2.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை எடுத்து நம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி
3.அந்த உணர்வலைகளை நாம் மூச்சலைகளாகப் பரப்ப வேண்டும்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இன்று யாகத்தை எப்படி நடத்துகிறார்கள்....?

நெருப்பை உருவாக்கி அதில் பல புஷ்பங்களையும் நறுமணங்களையும் மணங்களையும் போட்டு... மந்திரத்தைச் சொல்லி இப்படித்தான் யாகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் உண்மையான யாகம் எது...?

1.நமது உயிர் ஒரு நெருப்பு.
2.நாம் எடுக்கக்கூடிய (சுவாசிப்பது) உணர்வுகள் புருவ மத்தியில் இருக்கும் உயிரிலே மோதுகிறது.
3.மோதிய பின் அந்த உணர்ச்சிகள் உடல் முழுவதும் பரவுகிறது.

ஒவ்வொரு குணங்களையும் பற்றி அதனின் இயக்க நிலைகளை இந்த உபதேசத்தின் வாயிலாகத் தெளிவாகச் சொல்கின்றோம். அதற்குள் தீமை நீக்கிய அருள் ஞானியின் உணர்வுகளைக் கலக்கும்படி சொல்கிறோம்.

அப்போது
1.தீமையை நீக்கும் அந்த மெய் ஞானியின் உணர்வுகள் யாகத்தீயிலே... அதாவது உங்கள் உயிரிலே படுகின்றது.
2.அந்த அருள் உணர்வை இயக்கச் சக்தியாக மாற்ற வேண்டும்...
3.துருவ நட்சத்திரத்தின் உணர்வு உங்கள் உடலில் படரப்படும் பொழுது ஒளியின் அறிவாக... உணர்வின் ஞானமாக வளர்கின்றது

ஆக... இப்பொழுது அந்த உண்மையான யாகத்தை நாம் அனைவரும் வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

எம்முடைய அருள் உபதேசத்தைக் கேட்டு உங்களுக்குள் அதை வளர்த்து நீங்கள் வெளிப்படுத்தும் மூச்சலைகள் வெளியிலே பரவும் பொழுது “எல்லோருக்கும் நல்லதாகிறது...”

உதாரணமாக என் உடலில் மேல் வலி தலைவலி கை வலி கால் வலி இடுப்பு வலி என்று சொல்வார்கள். இடுப்பு வலி இருக்கும் போது இங்கே குருநாதர் சொல்வதை “உட்கார்ந்து கொண்டு நான் எப்படிக் கேட்பது...? நான் எப்படி அமர்ந்து தியானம் செய்வது...?” என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் எல்லாம் இப்பொழுது இந்த உபதேசத்தைக் கேட்க ஆரம்பித்தால்...

1.நேரம் ஆக ஆக அந்த வலி எல்லாம் காணாமலே போய்விடும்... உட்கார்ந்து தாரளமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.
2.வலியே தெரியாதபடி இருக்கும்... அடுத்தது ஒன்றுமே இல்லை என்று சொல்வார்கள்.

ஆனாலும் ஏற்கனவே இடுப்பு வலியால் வேதனைப்பட்டுத் தனக்குள் பதிவான உணர்வுகள் என்ன செய்யும்...? “அந்த ஞாபகம்” வந்தவுடனே என்னிடம் (ஞானகுரு) வந்து இடுப்பு வலிக்கின்றது என்று தான் மீண்டும் கேட்பார்கள்.

முதலில் வரும்போது வலி இருந்தது... உபதேசம் கேட்கும் பொழுது இடுப்பு வலி இல்லையே... ஆகையினால் இப்பொழுது இல்லை அல்லவா...! என்று நான் திருப்பிச் சொன்னால் ஏற்கனவே பதிவான நினைவோடு தான் மீண்டும் கேட்கின்றார்கள்.

அது போல் ஒரு சிலருக்குக் கை கால் குடைச்சல் இருக்கும். இந்த உபதேசத்தைக் கேட்டுக் கொண்ட பின்... அவர்கள் உடலில் இருக்கும் அந்தப் போர் முறை மாறுகின்றது... கலக்கங்கள் நீங்குகின்றது.

1.மகரிஷிகள் உணர்வுகளைச் சுவாசித்த பின்... தீமைகளை அது நீக்குகின்றது.
2.வலி நீங்கி... உங்கள் உடல் வெடுக்கென்று “சொடக்கு எடுத்தது போன்று...” இலகுவாக இருக்கும்.

நீங்கள் கதைப் புத்தகம் படிக்கின்றீர்கள்... அல்லது சினிமா பார்க்கின்றீர்கள் என்றால் உங்கள் உடல் ஏதாவது நெளிகிறதா...? கையையோ காலையோ நெளித்து அசைக்கின்றோமா...? இல்லை.
1.கூர்மையாக உற்றுப் பார்க்கின்றோம்... கவனிக்கின்றோம்.
2.இடுப்பு வலி தலைவலி எதையுமே நினைப்பதில்லை... கால் வலியைக் கூட நினைப்பதில்லை.

அது போல் தான் எம்முடைய உபதேசங்களைக் கூர்மையாகக் கேட்கக் கேட்க இருதயத்தில் படபடப்பு இருந்தாலும் கூட துருவ நட்சத்திரத்தின் சக்தியை அங்கே செலுத்தச் செலுத்த... அதை நீக்கி இதயத்தை வலுவாக்குகின்றது.... வேதனை குறைகிறது.

1.ஏனென்றால் நான் வெறும் சொல்லாக உபதேசிக்கவில்லை.
2.அகஸ்தியன் பெற்ற அருள் ஆற்றலை அவன் கண்ட... அவன் பெற்ற... அவன்

வளர்த்துக் கொண்ட பேராற்றல்களை…
3.செவி வழி கூடி இந்த உணர்ச்சிகளை உங்களுக்குள் உந்தச் செய்து அதை நுகர வைக்கின்றோம்.

நுகரும் போது அந்த அகஸ்தியன் பெற்ற உணர்வெல்லாம் உங்கள் இரத்தங்களிலே கலந்து அந்த உணர்ச்சிகள் உடல் முழுவதும் பரவுகிறது.
1.தீமைகளை நீக்கக்கூடிய சக்தி உங்கள் உடலில் அது எப்படியும் ஊடுருவ வேண்டும்…
2.நீங்கள் நலம் பெற வேண்டும் என்பதற்குத்தான் இப்படிச் செய்கிறேன்.

வேதனைப்படுவோரை உற்றுப் பார்த்தால் தன்னாலே வேதனை வருகிறது அல்லவா. அடுத்து இரவிலே கெட்ட கனவு வருகிறது…! மேல் வலிக்கிறது… உடம்பை அமுக்குகிறது… வயிறு வலிக்கின்றது… கண் வலிக்கின்றது எல்லாமே வரும்.

காரணம்… நாம் நுகர்ந்த அந்த வேதனைப்பட்ட உணர்வு ஆகாரத்துடன் கலந்த பின் அதற்குத்தக்க உடலுக்குள் சென்று உடலை உருவாக்கிய நல்ல அணுக்களுக்கும் அதற்கும் எதிர்மறையாகி ஒன்றுக்கொன்று போராகிறது.

நுரையீரலுக்குச் சென்றால் வலி கல்லீரலுக்குச் சென்றால் வலி இதயத்துக்குச் செல்லும் பொழுது வலி… என்று இப்படி அந்தந்த உறுப்புகளுக்குச் செல்லும் பொழுது போராட்டமாகி… எதிர்மறையான உணர்வின் இயக்கங்களாக வலியாக வேதனைப்படும்படி செய்கின்றது.

இரத்தம் செல்லும் இடமெல்லாம் அந்த உணர்ச்சிகள் தூண்டப்பட்டு போர் நடந்து கொண்டு இருக்கின்றது.

இதைப் போன்ற நிலையிலிருந்து மீள்வதற்குத் தான்
1.அன்று அகஸ்தியன் பெற்ற உணர்வை உங்கள் செவிகளிலே கேட்கும்படி செய்து…
2.கண்ணின் நினைவாற்றலுக்குக் கொண்டு வரச் செய்து… அதை நுகரும்படி மூக்கின் வழியாகச் சுவாசிக்கும்படி செய்து…
3.உயிர் வழி இந்த உணர்ச்சிகளை உடலுக்குள் பரப்பும்படியாகச் செய்து…
4.இந்த உபதேசத்தின் உணர்வுகளை உமிழ் நீராக உங்கள் ஆகாரத்துடன் கலக்கும்படி செய்து… அதை நல்ல இரத்தமாக மாற்றும்படி செய்து…
5.இரத்தத்தில் கலந்த பின் தீமைகளை நீக்கும்படியாக…

6.உங்கள் தீமைகளைப் போக்கும் அரும்பெரும் சக்தியாகக் கிடைக்கச் செய்து கொண்டிருக்கின்றேன் (ஞானகுரு).

அதைப் பெறச் செய்வதற்குத் தான் இந்த உபதேசம்...! நான் சும்மா வேடிக்கையாகச் சொல்லவில்லை... "எல்லாம் தெரிந்து கொண்டேன்..." என்று சொல்ல வரவில்லை.

காரணம்... நமக்குள் எத்தனையோ விஷங்கள் இருக்கிறது. இதை ஒவ்வொரு நிமிடமும் மாற்றி எடுத்துக் கொண்டு வந்தால் அந்த விஷமே வலுவாகி உயர்ந்த சக்திகளைப் பெற (சரியான) வழியாகும்.

1.பாம்பிற்கு "விஷம் எப்படி வலுவாகிறதோ" இதைப் போன்று
2.விஷத்திற்குள் மகரிஷிகளின் அருள் சக்திகளை அதிகமாகச் சேர்க்கப்படும் போது...
3.நமக்குள் வீரிய சக்தியாகக் கிடைக்கின்றது... அதை நீங்கள் பெற முடியும்.

ஏனென்றால் குருநாதர் எனக்குக் கொடுத்ததை உங்களுக்குத் தொட்டுத் தொட்டுக் கொடுக்கின்றோம். அடுத்து அடுத்து வரும் போது ஒவ்வொரு நிலையிலும் நல்லதை உருவாக்குவதற்கு... ஞானத்தின் வழியில் வளர்வதற்கு இது உதவும்.

உங்கள் உயிர் கடவுள்... அவனால் உருவாக்கப்பட்ட உங்கள் உடல் ஆலயம்... அதில் அசுத்தங்கள் சேராது
1.அந்தக் கோயிலை சுத்தப்படுத்த வேண்டும் என்ற சேவையாக...
2.குரு சொன்ன நிலைகளைத் தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன்.

ஆகவே நீங்கள் எல்லாம் அந்த உயர்ந்த நிலை பெற வேண்டும்...!




பாம்பிற்கு “விஷம் எப்படி வலுவாகிறதோ” இதைப் போல் விஷத்திற்குள் மகரிஷிகளின் அருள் சக்திகளை அதிகமாகச் சேர்க்கப்படும் போது... நமக்குள் வீரிய சக்தியாகக் கிடைக்கின்றது... அதை நீங்கள் பெற முடியும்.




## துருவ நட்சத்திரத்துடன் ஆயுள் மெம்பராகச் சேர வேண்டும்

நம் உயிர் எப்போது உருவானதோ என்றுமே இருள் சூழாது ஒளி என்ற நிலையாக மாற்றிக் கொண்டே இருக்கும். இந்த உணர்வை மனித உடலில் தான் சேர்க்க முடியும். அதைத்தான் குரு எனக்குக் கொடுத்தார்.

துருவ நட்சத்திரத்துடன் என்னை ஆயுள் மெம்பராகச் சேர்த்தார். அதன்வழி உங்களையும் சேர்த்து விடுகின்றோம்.
1.அந்த மெம்பர் பதவியை நீங்கள் கூடுமான வரையிலும் ஊக்குவித்து
2.உங்கள் உணர்வுகள் இங்கே படரப்படும் பொழுது "விஞ்ஞான அறிவால் வரும் விஷத் தன்மைகளை அடக்க முடியும்..."

நியூட்ரான் என்ற நிலையில் ஒரு பக்கம் வந்தாலும் அணுக்கதிரியக்கங்கள் என்று இந்த இரண்டும் கசிவாகி இருக்கின்றது. இரண்டும் மோதலாகும் இடங்களில் தான் புயலாக... சூறாவளியாக மாறுகின்றது.

கதிரியக்கப் பொறி அதற்குள் இருக்கக்கூடிய நிலைகளில் மோதுகின்றது.
1.நியூட்ரான் என்ற காற்றின் அழுத்தத்தைக் கொடுத்த பின் சுழற்சியின் தன்மை அடைந்து
2.அலாக்காகக் கட்டிடங்களை எல்லாம் தூக்கி எறிகின்றது. எவ்வளவு பெரிய காங்கிரீட் கட்டிடமாக இருந்தாலும் தூசியாக மாற்றித் தூக்கி எறிகின்றது.

ஏனென்றால் விஞ்ஞானிகள் செய்த கொடுமை இது...!

அவனை அறியாமலே மற்ற நாட்டை அழிக்க வேண்டும் என்ற நிலையில் அவனே அழிந்து போகும் நிலைகளுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்கே உருவாக்கினானோ இன்று அங்கெல்லாம் இது நடக்கின்றது.

தென்னாட்டுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற அகஸ்தியன்... அவன் தாய் கருவிலே பெற்ற உணர்வுகள் தன் வளர்ச்சியிலே தீமைகளை நீக்கி... திருமணமான பின் கணவன் மனைவி இருவருக்குள்ளும் அருள் உணர்வைக் கருவாக்கி... உணர்வின் தன்மை ஒளியாக்கி ஒளியின் சரீரமாகத் துருவ நட்சத்திரமாக இருவரும் இருக்கின்றார்கள்.

உடலை விட்டு என் கணவர் பிரிந்து விட்டார் என்று ஒரு சிலர் இருந்தாலும் "அவருடைய உணர்வுகள் உங்கள் உடலில் உண்டு..." என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

இந்த உணர்வின் தன்மை எப்பொழுதுமே இணைந்து வாழும் தன்மை. நாம் எதன் பருவத்தைக் கொள்கின்றோமோ அவர் ஒளி நிலை பெற வேண்டும் என்று எண்ணினால் நம் உடலுக்குள் அந்த உணர்வுகள் ஒளியாகின்றது.
1.அந்த உயிரின் தன்மை ஒளியாகும் நிலையில் எங்கே சென்றாலும் கவர்ந்து

இழுத்துக் கொள்ளும்... ஒளியாக மாறும்...
2.இரு உணர்வும் என்றுமே அந்த அருளைப் பெருக்கும் நிலையாக மாறும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

இது யாம் அனுபவ ரீதியிலே தெரிந்து கொண்ட நிலை.

ஆகவே உயிரை நாம் சொந்தமாக வேண்டும். அவனுடன் ஒன்றி வாழ வேண்டும் என்றால் உயிரோடு இணைந்து ஒளியின் சரீரம் பெறலாம்.

இந்தத் தியானத்தைக் கடைப்பிடிப்பவர் நீங்கள் ஒவ்வொருவரும் உலகிற்கு எடுத்துக்காட்டாக வர வேண்டும். நமது கடமைகளில் தவறக் கூடாது.

அருள் ஒளியின் உணர்வைக் கொடுத்து
1.நம் உடலில் உள்ள அணுக்களுக்குத் துருவ நட்சத்திரத்தின் உணர்வைக் குரு வழியில் பாய்ச்சி
2.அது கடமையாக அமைந்து அந்த அருள் ஒளியாக மாற்றும் இந்த உணர்வைப் பெற வேண்டும்.

இந்த உடல் நமக்குச் சொந்தமல்ல... உயிர் தான் சொந்தம்...! அவன் உணர்வை எடுத்து எல்லாவற்றையுமே ஒளியாக மாற்றினோம் என்றால் தனுசுக் கோடி. கோடி என்று ஆகும் பொழுது அனைத்தும் ஒன்றாகின்றது.

லட்சம் அந்த லட்சம் இந்த லட்சம் என்று சொன்னால் மாறுகின்றது. ஒன்று இரண்டு மூன்று என்று நிலைகள் வருகின்றது... பல லட்சம் என்ற நிலையில் "எல்லாம் ஒன்றாகச் சேர்க்கப்படும் பொழுது கோடி...!"

எவ்வளவு அழகாக இராமாயணத்தில் கொடுத்துள்ளார்கள்...?

நாம் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பில் ஆயுள் மெம்பராகச் சேர்ந்து
1.அதனுடன் சேர்த்து... உணர்வின் தன்மை ஒன்றாக இணைந்து நீங்கள் விடும் மூச்சலைகளால்
2.விஞ்ஞான அறிவில் வரும் விஷ உணர்வுகளிலிருந்து காக்கப்பட வேண்டும்.




**"மூன்று மணி நேரம் ஆறு மணி நேரம் என்று..." எதற்காக அப்படி உபதேசம் கொடுக்கின்றோம்...?**

1.நான் ஏட்டைப் படிக்கவில்லை... குரு அருளை எடுத்து அந்த உணர்வுகளை வளர்த்து அதன் வழி நடந்தேன்.

2.காற்றில் அனைத்துச் சக்திகளும் இருக்கின்றது... நீங்களும் என்னைப் போல் அறியலாம்... அதை உங்களுக்குள் வளர்க்க முடியும்.
3.அந்த நல்லதைப் பெறச் செய்வதற்குத்தான் உபதேசிக்கின்றோம்.

தீமை எவ்வாறு வருகின்றது...? அந்தத் தீமையை எப்படி மாற்றுவது...? என்ற உணர்வுகளைச் சேர்க்கப்படும் பொழுது நீங்கள் அதை நுகர்கின்றீர்கள். உங்கள் இரத்தத்தில் கலக்கின்றது.

கூடுமான வரையிலும் உங்கள் உடலில் உள்ள அணுக்களுக்கு அந்த அருள் சக்திகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டும் என்பதற்குத்தான் மணிக்கணக்காக உபதேசிக்கின்றேன்.

நேரம் போகின்றதே...! என்று எண்ணக் கூடாது.

இந்த அருள் உணர்வுகளை உங்களுக்குள் சேர்த்துக் கொண்ட பின்
1.அந்தத் தீய அணுக்கள் கொஞ்சம் மூச்சுத் திணறும்.
2.அப்பொழுது சிறுகச் சிறுக அந்த அருள் உணர்வுகளை உங்களுக்குள் சேர்க்க வைக்கின்றேன்.
3.இடைவிடாது பேசிக் கொண்டிருக்கின்றேன்... இடைவிடாது நீங்கள் நுகர்கின்றீர்கள்.
4.உங்கள் ரத்தத்தில் அருள் உணர்வுகள் கலந்து கொண்டே இருக்கின்றது... கலக்கச் செய்கின்றேன்,

எனக்கு குருநாதர் மணிக்கணக்காக உபதேசிப்பார். இரண்டு நாள் மூன்று நாள் கூடப் பட்டினியாக இருக்கும்படி செய்வார். இந்த அருள் சாப்பாட்டைக் கொடுப்பார். என் உடலில் உள்ள நல்ல அணுக்களுக்கு அந்த உபதேசக் கருத்துக்களை உணவாகக் கொடுப்பார்.

மற்றவர்கள் அரை மணி நேரத்திலே பேசி விட்டுச் சென்று விடுவார்கள். சாமி மூன்று மணி நேரம் ஆறு மணி நேரம் “ஜவ்வு மிட்டாய் மாதிரிப் பேசுகின்றார்...” என்று சிலர் எண்ணி விடுவார்கள்.
1.உங்களுக்குள் அந்த அருள் சக்தியைப் பெறச் செய்வதற்குத் தான் இவ்வாறு செயல்படுத்துவது.
2.அந்த மகரிஷிகளின் உணர்வுகளை உங்கள் ரத்தங்களிலே கலக்கச் செய்து
3.கெட்ட அணுக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கச் செய்கின்றோம்.
4.மகரிஷிகள் உணர்வை உங்களுக்குள் புகுத்தச் செய்கின்றோம்.

அந்த வழி தெரிந்து தான் இதைச் செய்கிறோம்.

விஞ்ஞான அறிவு கொண்டு அலுமினியத்தையோ தங்கத்தையோ அத்தகைய கடினமான உலோகங்களையும்... காற்று அழுத்தத்தை அதிகமாக்கி அதிலே மோதும்படிச் செய்து அதைத் தூசியாக மாற்றுகின்றார்கள்... (ATOMISATION) கரைத்து விடுகின்றார்கள்.

இதைப் போன்று தான்
1.அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்து உங்களுக்குள் சேர்க்கும்படி செய்து "அது அழுத்தமான பின்... வேக சுழற்சி ஆகும்..."
2.தீமையின் உணர்வுகளுக்குள் அதை ஊடுருவும்படிச் செய்கின்றோம்.

விஷம் எப்படி ஒன்றுக்குள் ஊடுருவி அதன் இயல்பை மாற்றுகின்றதோ இதைப் போல விஷத்தை மாற்றிய உணர்வுகளை உங்கள் ரத்தத்தில் கலக்கும்படிச் செய்கின்றோம்.

1.உங்கள் உடலில் உள்ள அணுக்களுக்குள் ஊடுருவி
2.அதை மாற்றக் கூடிய சக்தி பெற வேண்டும் என்பதற்குத்தான் மணிக்கணக்கில் பேசுவது.

ஒரு சிலர் சாமி மணிக்கணக்காகப் பேசுகிறார் நம்மால் உட்கார முடியவில்லை என்று வேறு பக்கம் சென்று விடுவார்கள்... வாழ்க்கையின் நிலைகள் கொண்டு.

1.அப்படிப் போவோர்கள் தவிர மிஞ்சுபவர்கள் தான்
2."எப்படி இருந்தாலும் அந்தக் குரு அருளைப் பெற வேண்டும்..." என்ற நிலையில் இங்கே நிற்பார்கள்.

பிறகு... நீங்கள் கொஞ்சம் கொஞ்சம் பேசப் பேச அவர்களுக்கும் இதிலே கொஞ்சம் பற்று வரும். பின் வரவேண்டும் என்று சொல்லி வருவார்கள்.
1.நீங்கள் வளர்ச்சி அடைந்த நிலைகள் கொண்டு உங்கள் மூச்சு பூமியில் உள்ள தீமைகளை நீக்கும்.
2.உங்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவரையும் திருந்தும்படிச் செய்யும்.

தெருவிலே ஒருவருக்கொருவர் போக்கிரியாக இருக்கின்றார்கள்... போக்கிரித்தனமாகச் செயல்படுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த

உணர்வை நுகர்ந்தால் பக்கத்தில் இருப்பவர்களுக்கும் அதே வெறி உணர்வு இயக்கும்.

ஆனால் உங்களுக்குள் அந்த மகரிஷிகள் உணர்வு வளர்ந்த பின் அவருடைய துன்பத்தை மாற்றக்கூடிய சக்தியாக மாறும். இல்லையென்றால் அது ஆட்கொண்டு விடும். அதனால் தான் உங்களுக்கு இதையெல்லாம் ஞாபகப்படுத்துகின்றோம்.

சமையல் செய்யும் பொழுது அவசரப்பட்டுச் சாதத்தை ஆக்கினால் என்ன ஆகும்...?

சில ஓட்டலில் அரிசியை முக்கால் பாகம் வெந்தபின் போட்டு விடுவார்கள். கூட்டமாக இருக்கிறது சீக்கிரம் போட வேண்டும் என்று கல்யாண வீட்டில் கூட... அவசரப்பட்டு வேகுவதற்கு முன்பே சாதத்தைப் போட்டுவிடுவார்கள்.

அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்ட பின் எனக்கு வயிற்றால் போகின்றது நெஞ்சு வலிக்கிறது என்று சிலர் திட்டுவார்கள்.

ஆக... அது போன்று அவசரப்பட்டு மெய் உணர்வுகளைச் சமைத்துக் கொடுத்தால் என்ன ஆகும்...? வித்தியாசமாக நினைப்பீர்கள். அப்படி நீங்கள் வித்தியாசமாக நினைத்துவிடக் கூடாது என்பதற்குத் தான் உங்களுக்குப் "பொறுமையாக உபதேசத்தைக் கொடுக்கின்றேன்..."

ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்வுக்குத் தக்க பதிவாகும். ஒவ்வொரு நொடியிலும் வாழ்க்கையில் தீமைகள் வந்தது என்றால்
1.துருவ நட்சத்திரத்தின் உணர்வை அனைத்திலும் சேர்த்துக் கொண்டே வரவேண்டும்.
2.அவ்வாறு சேர்த்துக் கொள்ளும் அந்தப் பருவத்தைச் செயல்படுத்துவது தான் இத்தகைய உபதேசங்கள்.

குழம்பு வைக்கும் போது அதிலே ஒரு பொருளுடன் ஒரு பொருளைச் சேர்த்து ருசியாக மாற்றுகின்றோம் அல்லவா... அது போல் தான்...!

நாம் வேதனையான குணங்களை எடுத்து விட்டால் நல்ல அணுக்களை மாற்றும்படிச் செய்து விடுகின்றது. அந்த அணுக்களை மீண்டும் நல்லதாக மாற்றிக் கொண்டு வர வேண்டும் என்றால் அந்த அருள் உணர்வைச் சேர்த்து

இதற்கு மேல் இதை மாற்ற வேண்டும். அந்தத் தீமையை அடிமையாக்க வேண்டும்.

வெங்காயச் சருகு உருவாவது போன்று ஒவ்வொரு உணர்வின் தன்மை வரும் போதும்...
1.அணுவுக்குள் அணு... அணுவுக்குள் அணு... ஓமுக்குள் ஓம்... ஓமுக்குள் ஓம்... ஓம்... ஓம்...! என்று இணைத்து
2.ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரணவத் தத்துவமாகக் கொண்டு வரும்.

புழுவிலிருந்து மனிதனாக வரும் வரையிலும் ஒவ்வொரு அணுக்களிலும் அந்த நுண்ணிய அணுக்களாக மாறி மாறி அதைச் சேர்த்துத் தான் உடலாக மாறியது.

அதே போன்று நாமும் இந்த அருள் உணர்வுகளை ஒவ்வொரு நொடியிலும் எடுத்து வளர்த்துக் கொண்டு வர முடியும்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

சூரியன் தனக்குள் இருக்கும் பாதரசத்தால் அருகில் வரும் நஞ்சினை விரட்டுகின்றது. அதைப் போன்று மனிதன் தன் ஆறாவது அறிவால் தீமை தனக்குள் புகாதபடி அதை விலக்கிக் காட்ட வேண்டும்.

மேலே ஏழு லோகம்... கீழே ஏழு லோகம்...
1.ஆக... கலர் ஆறு ஏழாவது ஒன்று (ஒளி).
2.மனிதனின் அறிவு ஆறு ஏழாவது ஒன்று (தெரிந்து செயல்படும் ஒளி).
3.இந்த ஏழு லோகங்களை வென்ற மனிதன் தான் விண் செல்ல முடியும் என்பார்கள்.

ஆனால் மகாபாரதத்தில் மேலே ஏழு லோகம் இருக்கிறது. மூன்று லோகத்திலும் பார்த்தேன். நஞ்சு கொண்ட... விஷங்கள் கலந்த நாகலோகத்திலும் சென்று பார்த்தேன்... காணவில்லை என்றெல்லாம் சொல்வார்கள்.

இப்படி விரிவாக்கிக் காட்டும் நிலை என்ன...?

மனிதன் அறிவு ஆறு... ஆனால் அதே சமயத்தில் விஷத்தின் தன்மை அதனின் அடுக்குகள் வேறு. அதை நாம் ஒளியாக மாற்றும் சக்தி பெற வேண்டும்.

இது எல்லாம் நமது குருநாதர் தெளிவாகக் காட்டிய நிலைகள்.

1.யாம் (ஞானகுரு) உபதேசிக்கப்படும் போது இப்பொழுது உங்களுக்குள் உமிழ் நீர் சுவை மிக்கதாக ஊறும்.
2.உங்கள் ஆகாரத்துடன் இந்த உமிழ் நீர் கலக்கின்றது.
3.இது சேரச் சேர சாப்பாடு அதிகமாக உட்கொள்ளும் நிலை உங்களுக்கு இருக்காது.
4.ஏனென்றால் இந்த உணர்வின் தன்மை அமுதாக... மிகச் சக்தி வாய்ந்ததாக உங்களுக்குள் சேருகின்றது.

அதாவது...
1.ஞானிகள் உணர்வு கலந்த உமிழ் நீர் உங்களுக்குள் சேர்ந்து கொண்ட பின் சாப்பிட்ட உணவைச் சத்துள்ளதாக... "அமுதாக" மாற்றுகின்றது
2.நல்ல ஜீரணிக்கும் சக்தி கிடைக்கும்... நல்ல அணுக்களாக உருவாக இது உதவும்.

எந்த அளவுக்கு இந்த உபதேசங்களைத் திரும்பத் திரும்பக் கேட்கின்றீர்களோ... உங்களுக்குள் இது சக்தி வாய்ந்ததாக மாறிக் கொண்டே வரும்.

வெயில் காலத்தில் மாங்காய் சாப்பிட்டிருக்கின்றீர்களா...? அதிலே காரத்தையும் உப்பையும் தொட்டுத் தின்றால் எப்படி இருக்கும்...? இப்பொழுது சொன்னவுடனே உமிழ் நீர்கள் எப்படி ஊறுகிறது...?

அந்த உணர்வினை நுகர்ந்தவுடனே அந்தப் புளிப்பை இழுத்துக் கவர்கிறது அல்லவா. இது போன்றுதான் நாம் எண்ணும் உணர்வுகள் எதுவோ நம் உமிழ் நீராக மாறி ஆகாரத்துடன் கலந்து கொண்டே வரும்.

அந்தந்த ஆகாரம் சாப்பிடும் பொழுது எனக்கு அஜீரணம் ஆனது... எனக்கு நெஞ்சைக் கரித்தது...! என்றெல்லாம் நாம் சொல்வோம்.

நல்ல ஆகாரத்தைச் சாப்பிட்ட பின்... ஒரு மனிதன் வேதனைப்படுவதை அந்த விஷமான உணர்வை நுகரப்படும் பொழுது சாப்பிட்ட ஆகாரத்தை அது அஜீரணமாக்குகின்றது.

அதை எல்லாம் மாற்றி அமைப்பதற்குத் தான் மணிக்கணக்காக உபதேசிக்கின்றோம்.

1.உங்கள் உடல் இருக்கக்கூடிய அனைத்து குணங்களுக்கும்... மனிதனாக உருவாக்கிய அந்தத் தெய்வங்களுக்கு
2.குருநாதர் காட்டிய அருள் உணர்வை இந்த உபதேச வாயிலாக "யாம் அமுதாகப் படைத்தது... நல்ல உணவாகக் கொடுத்தது..."

உங்கள் உடலில் உள்ள அணுக்களுக்கு அமுதாகக் கிடைக்க வேண்டும் என்று என்று முதலில் பிரார்த்தனை செய்துவிட்டுத் தான் உபதேசத்தை உங்களுக்குக் கொடுக்கின்றேன்..

சந்தர்ப்பம்... உங்கள் உடலில் அந்த அமுது இப்போது கிடைத்திருக்கின்றது. மீண்டும் இதைப் போல் எண்ணி எடுத்து அமுதாகக் கொடுத்துக் கொண்டே வாருங்கள்.

வேதனை என்ற விஷத்தின் தன்மையைக் கொடுத்து விடாதீர்கள்.

அந்த அருளைப் பெற வேண்டும்... இருளை நீக்கி மெய்ப்பொருளைக் காண வேண்டும் என்று அந்த மகரிஷியின் அருள் உணர்வுகளை அமுதாகச் சேர்த்துப் பாருங்கள். உங்களுக்குள் அருள் ஞானத்தைப் பெருக்க முடியும்.

துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் உங்களுக்குள் பதிவாக்கிய பின் அதை அருள் சக்தியாகப் பெருக்கும் தகுதியை உங்களுக்குள் உருவாக்குகின்றோம்.

1.அந்தத் துருவ நட்சத்திரத்தின் வலுவைக் கூட்டிக் கொண்டு இந்த உடலுக்கு பின் நாம் பிறவியில்லா நிலை அடைய முடியும்.
2.நம்முடன் வாழ்ந்து வளர்ந்து உடலை விட்டு பிரிந்து சென்ற முன்னோர்களின் உயிரான்மாக்களை விண் செலுத்தவும் முடியும்.
3.மகிழ்ந்து வாழும் சக்தியை நாம் பெற முடியும்.




யாம் உபதேசிக்கும் போது உமிழ் நீர் சுவை மிக்கதாக உங்களில் ஊறும். ஆகாரத்துடன் இந்த உமிழ் நீர் கலக்கின்றது. இது சேரச் சேர சாப்பாடு அதிகமாக உட்கொள்ளும் நிலை உங்களுக்கு இருக்காது.




## துருவ நட்சத்திரத்தின் இயல்பு

மனிதனாகப் பிறந்து வளர்ச்சி பெற்று வாழ்ந்து கொண்டிருந்தாலும் பிறிதொரு தீமைகளையோ பகைமை ஊட்டக்கூடிய உணர்வுகளையோ வேதனை

உணர்வுகளையோ எடுத்துக் கொண்டால் உடலில் அது விளைந்து “விஷமான அணுக்களாகப் பெருகுகின்றது…”

அதனால் இந்த உடலை விட்டு உயிர் வெளியே சென்று விடுகின்றது.

ஆக இந்த உயிர் எத்தகைய விஷத்தின் தன்மையைச் சேமித்து வைத்ததோ இதைப் போல விஷத்தைக் கொண்டு ஜீரணித்து வாழக்கூடிய உயிரினங்களுக்கு அழைத்துச் சென்று விடும்.

1.மாடு ஆடு யானை எல்லா உயிரினங்களிலும் பார்க்கலாம்… நாமும் சரி பித்தப்பை என்பது கடுமையான விஷம்.
2.பழுவிலிருந்து எல்லா வகையிலும் எடுத்து மனிதனாக வளர்ச்சி பெற்று வந்த நிலையில்
3.அந்தப் பித்தம் சிறிதளவு மனித உடலில் இல்லை என்றால் “ஜீரணிக்கும் சக்தி குறையும்…”

ஒரு சிலர் பித்தப்பையை எடுத்தே வாழ்வார்கள். சேமிக்கும் தன்மை கொண்டு வடிகட்டும் நிலை… அதாவது இரத்தத்திலிருந்து மீண்டும் பித்த சுரப்பிகள் சேமிக்கும் நிலை இல்லை என்றால் அது நம் உடலிலேயே கவர்ந்து கொள்ளும்.
1.ஆனால் பித்தப் பையில் கல் உருவாவதால் தான் அதை நீக்குகிறார்கள்.
2.காரணம் அந்த நஞ்சு உறைந்து கல்லாகிறது.

ஆனால் விஷத்தை அதிகமாக எடுக்கும் பாம்பினங்களுக்கோ அதிலே உறைந்து நாகரத்தினமாக மாறுகிறது. இதே போல் பித்தப்பை உள்ள மற்ற உயிரினங்களிலும் இது போல் விஷத்தின் சேமிப்பு அதிகமானால் அந்தக் கற்கள் வைரக் கல்லாக மாறும்.

பித்தம் அதிகரிக்கும் போது அந்த உணர்வுகளைச் சேமிக்க என்று ஒரு தனிப் பை இருக்கும்.
1.பாம்பினங்களுக்கு வைரக்கல்லாக மாறுகின்றது.
2.அந்த விஷம் ஒடுங்கி ஒளியாக மாறுகின்றது

ஏனென்றால் விஷம் தாக்கித் தான் வெப்பத்தின் தன்மை கொண்டு ஒளியாகின்றது. இது இயற்கையின் நியதிகள். இதைப் போன்று… “விஷத்தின் ஆற்றல்…” மிகச் சக்தி வாய்ந்தது.

இதையெல்லாம் ஏன் சொல்லிக் கொண்டு வருகிறோம் என்றால் புழுவில் இருந்து மனிதனாக நாம் வளர்ச்சி பெற்று வந்த நிலையை இந்த சரித்திரத்தை சிறிதளவாவது இந்த மனித உடலில் ஏற்றுக் கொண்டு அதை நீக்குவதற்குத் தான்…!

ஆக இதையெல்லாம் நீக்கியவன் யார்…?

அகஸ்தியன் என்று பின் கூறும் அந்த ஞானி இந்த நஞ்சை எல்லாம் மாற்றி அமைத்து
1.கணவன் மனைவி இருவரும் ஒன்றாகி அந்த விஷத்தை அடக்கி
2.ஒளியின் சுடராக மாற்றித் துருவ நட்சத்திரமாக வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.
3.உங்களை அதனுடன் இணைத்துக் கொண்டு வரப்படும் பொழுது
4."உங்கள் உடலில் உள்ள அணுக்களும்…" நஞ்சினை ஒளியாக மாற்றிடும் உணர்ச்சிகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துக் கொள்ளும்.

குருநாதர் இப்படித்தான் காட்டிற்குள் என்னை அழைத்துச் சென்று எல்லாவற்றையும் சொல்லிக்
1.கடைசியில் துருவ நட்சத்திரத்தின் இயல்புகளைக் கொண்டு வருவார்.
2.அதைத்தான் உங்களுக்கும் சொல்லிக் கொண்டு வருகின்றோம்.

**ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்**

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எனக்குக் கொடுத்த அரும் பெரும் சக்தியை… என்னை எப்படி அதைப் பெறச் செய்தாரோ நீங்கள் அனைவரும் அதைப் பெற வேண்டும். அவர் கண்ட உண்மைகளை நீங்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

1.நாம் தவறு செய்கின்றோமா…?
2.நாம் நுகர்ந்த உணர்வுகள் நம்மைத் தவறு செய்ய வைக்கின்றதா…? என்பதை நீங்கள் சிந்தனை செய்து
3.அந்தத் தவறு செய்யும் உணர்ச்சிகளைத் தடுக்கப் பழக வேண்டும்.

அதற்கு வேண்டிய கடும் ஆயுதமாகத் தான் துருவ நட்சத்திரத்தின் சக்தியை இந்த உபதேச வாயிலாக உங்களுக்குள் பதிவாக்குகின்றோம்.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்து ஆயுதமாகப் பயன்படுத்தும் போது… தவறென்ற உணர்வு உங்களுக்குள் வராதபடி… உங்கள் உடலுக்குள் தீமையை விடாதபடி தடுக்கும். அது தான் கார்த்திகேயா…!

ஒருவன் வேதனைப்படுகின்றான் என்று நம் ஆறாவது அறிவால் தான் தெரிந்து கொள்கின்றோம். தெரிந்து கொண்டாலும் அந்த வேதனை உடலுக்குள் புகாதபடி தடுக்கும் சக்தியாக... நம் ஆறாவது அறிவைச் சேனாதிபதியாக மாற்ற வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று இச்சைப்படுதல் வேண்டும். அதை நுகர்ந்தால் நமக்குள் கிரியை ஆகின்றது. கிரியை ஆகும் போது "தீமையை நீக்கும் அந்த ஞான சக்தியாக" வருகின்றது.

முதலில் சொன்ன மாதிரி நண்பன் என்ற நிலையில் ஒருவர் மீது பாசமாக இருக்கின்றீர்கள். நோயுடன் வேதனைப்படுகின்றான் என்று உற்றுப் பார்க்கின்றீர்கள்.
1.அதை இச்சைப்பட்டுக் கேட்டறியப்படும் போது உங்களுக்குள் கிரியையானால்
2.அந்த வேதனை உணர்வு தான் ஞானமாக உங்களை இயக்கும். அந்த
3.நண்பருடன் சேர்ந்து நீங்களும் வேதனையில் தான் உழல முடியும்.

நோயால் வேதனைப்படுகின்றான் என்று தெரிந்து கொண்டாலும் அடுத்த கணமே ஈஸ்வரா... என்று உயிரை எண்ணித் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று "அதை இச்சைப்பட வேண்டும்..." உடல் முழுவதும் அந்தச் சக்தி படர வேண்டும் என்று இச்சைப்பட வேண்டும்..

அடுத்து அந்த நண்பன் உடலில் துருவ நட்சத்திரத்தின் சக்தி படர வேண்டும் என்று இச்சைப்படுங்கள்... அவன் நோயிலிருந்து விடுபட வேண்டும் என்று இச்சைப்படுங்கள்.

இப்படி இச்சைப்படும் போது அந்த அருள் சக்தி இங்கே கிரியை ஆகின்றது. தீமை நீக்கும் உணர்வு உங்களுக்குள் வலிமை ஆகின்றது. அதற்குப் பின்
1.அவன் செவிகளில் படும் படியாக... நீ துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற இச்சைப்படு.
2.அவ்வாறு நீ இச்சைப்பட்டால் அது உன் தீமைகளை நீக்கும்... நீ நன்மை பெறுவாய்...! என்று சொல்லிப் பழக வேண்டும்.

இது எல்லாமே நம் புராணங்களில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மனிதனாக ஆனபின் எல்லாவற்றையும் தெரிந்து கொண்ட கார்த்திகேயா என்று நம் உணர்வுகளை ஒளியாக்கப்படும் பொழுது இதே உணர்வானால் உயிர்

எல்லாவற்றையும் தெரிவிக்கின்றது… உணர்வுகள் ஒன்றாகின்றது தெளிவாகின்றது… பிறவியில்லா நிலை அடையச் செய்கின்றது.

காரணம்… நாம் இந்த உடலில் "நீடித்த காலம் இருப்போம்…" என்று எண்ண வேண்டாம். முழுமையான நிலையில் அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தாலும் உலகில் விஷத்தன்மை இன்று அதிகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது.

அதிலிருந்து தப்பித்துக் கொள்ளத்
1.துருவ நட்சத்திரத்தின் உணர்வை அடிக்கடி எடுத்து வலு சேர்த்துக் கொள்ளுங்கள்.
2.இங்கே உபதேசிக்கும் அருள் ஞானக் கருத்துக்களை திரும்பத் திரும்பப் படித்து உங்களுக்குள் பதிவாக்குங்கள்.

ஜாதகமோ ஜோதிடமோ வாஸ்து சாஸ்திரமோ மற்ற நியூமராலஜியோ "நமக்கு எல்லாம் செய்யும்" என்று அதை நம்பிக் கொண்டு… நேரத்தையும் காலத்தையும் வீணாக்காதபடி… காலத்தால் வரும் தீமைகளை அகற்றும் அருள் ஞான சக்தி நமக்கு உண்டு என்று "உங்களை நம்பிப் பழகுங்கள்…"

அத்தகைய அருள் சக்தி தான் இப்பொழுது உங்களுக்குள் கொடுக்கப்படுகிறது. அதைப் பெருக்கி வாழ்க்கையிலே பேரின்பம் பெறுங்கள்… ஏகாந்த நிலை என்ற பகைமயற்ற உணர்வை உடலில் வளர்த்துக் கொள்ளுங்கள்.

இதை உங்களுக்குள் உறுதியாக்கிக் கொள்ளுங்கள்.




துருவ நட்சத்திரத்தின் சக்தியை உபதேச வாயிலாக உங்களுக்குள் பதிவாக்குகிறோம். துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்து ஆயுதமாகப் பயன்படுத்தும் போது... எந்தத் தவறும் உங்களுக்குள் வராதபடி... உங்கள் உடலுக்குள் தீமையை விடாதபடி தடுக்கும். அது தான் கார்த்திகேயா...!




**துருவ நட்சத்திரத்தின் சக்தியை அபரிதமாக எடுக்கும் போது கொட்டாவி வருவது ஏன்...?**

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை எடுத்து நமக்குள் வலு சேர்த்துத் தீமைகளை மாற்றி நமது ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொண்டே வருகின்றோம்.

ஈஸ்வரா என்று உயிரான ஈசனை எண்ணிப் புருவ மத்தியில் அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை அங்கே நிலை நிறுத்துகின்றோம்.
1.அப்பொழுது என்ன நடக்கிறது…?
2.பிற உணர்வுகள் உள்ளே புகாது அங்கே தடுத்து நிறுத்தப்படுகின்றது.

அங்கே நிறுத்திய பின்பு துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி எங்கள் ரத்த நாளங்களில் கலக்க வேண்டும் என்று உயர்ந்த உணர்வுகளை ரத்தம் முழுவதும் பரவச் செய்கின்றோம்.

அப்போது உடலில் உள்ள மற்ற அணுக்களுக்கு உணவு கிடைக்கவில்லை என்கிற பொழுது
1.அது எல்லாம் வருத்தத்தில் இருக்கும்.
2.துருவ நட்சத்திரத்தின் வீரிய சக்தி உள்ளே சென்ற பின் சிலருக்குக் கொட்டாவியாக வெளியே வரும்…
3.அதைக் கரைத்து ஆவியாக மாற்றும்.

தியானமிருக்கும் பொழுது கொட்டாவியாக வருகின்றது… எங்களால் உட்கார முடியவில்லை நிற்க முடியவில்லை என்று சொல்வீர்கள்.

துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளைச் சேர்த்த பின்பு உடலிலிருக்கும் அந்த விஷமான உணர்வுகள் காலியாகி வெளியேறும். அய்யய்யோ… தியானத்தில் எனக்குக் கொட்டாவி வருகின்றது என்று நீங்கள் சொல்வீர்கள்.

காரணம் அது கரைத்து வெளியே கொண்டு செல்கின்றது. துருவ நட்சத்திரத்தின் சக்தி இரத்தத்தில் கலந்த பின் கெட்ட அணுக்களுக்கு வேண்டிய ஆகாரம் கிடைப்பதில்லை.

1.அப்பொழுது வீரியமாக இருக்கும்… விஷத்தன்மையாக இருந்தால் வலு ஜாஸ்தியாக இருக்கும்.
2.ஆனால் விஷத்தன்மைக்குண்டான சக்தி கிடைக்கவில்லை என்றால் அது சோர்வடையும்.
3.அப்பொழுது வேகமாகப் பேசிக் கோபமாகப் பேசுபவருடன் இணைந்தால் தணியும்.

மற்றவர்களுடன் பார்த்துப் பார்த்துப் பேசி மற்ற உணர்வுகளை எடுத்திருந்தாலும் தியானம் எடுத்த பின் அது குறையும். அதற்குச் சாப்பாடு இல்லை என்கிற பொழுது மயக்கமடைகிறது.

ஆனால் அதே சமயத்தில்
1.உங்கள் உடலில் ஊழ்வினை என்ற வித்துக்களுக்குள்
2.துருவ நட்சத்திரத்தின் உணர்வைச் சேர்த்து விடுகின்றோம்.

அக்ரிகல்ச்சரில் வித்துக்களில் விஷ பூச்சிகள் தாக்காதபடி அந்த வித்துக்களை ஊறவைத்து அதற்குண்டான நிலைகளை இணைக்கப்படும் பொழுது அந்தச் செடிகளில் விஷப் பூச்சிகள் தாக்காது. அதிலே பூச்சிகள் வருவதில்லை...!

ஆனால் வரவில்லை என்றாலும் கூட வளர்ந்து வரும் பொழுது பூச்சிகள் இதைச் சாப்பிடுவதில்லை ஆனாலும் அதிலே முட்டை இடுகின்றது. முட்டையிட்டால் என்ன செய்யும்...?

விஷத்தன்மை அந்த முட்டைக்குள் வளர்ந்து விடும். அது வெடித்து வெளிவந்த பின் மீண்டும் அந்தச் செடிகளையே உணவாக உட்கொள்ளும்.

இதையெல்லாம் தெளிவாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நீங்கள் தான் உங்களைக் காத்துக் கொள்ள முடியுமே தவிர "மற்றவர்கள் உங்களைக் காப்பாற்ற வேண்டும்..." என்ற நிலைக்குப் போகாதீர்கள். ஏனென்றால்
1.நாம் எதை நல்லதாக எண்ணுகின்றோமோ உயிர் நம்மை அதன் வழியே இயக்குகின்றது...
2.அந்த நல்ல உணர்வை உருவாக்குகின்றது.

இன்று மனித உடலில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் முழுமையாக இதிலேயே இருக்க முடியுமா...? இல்லை...! மிகக் குறுகிய காலமே இந்த உடலில் நாம் வாழுகின்றோம்.

அந்தக் குறுகிய காலத்திற்குள் என்றும் ஏகாந்த நிலை பெற்ற துருவ நட்சத்திரத்தின் சக்தியை நமக்குள் பெருக்க வேண்டும். அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெறக்கூடிய தகுதியை ஏற்படுத்தத் தான் உபதேச வாயிலாக அதைப் பதிவாக்குகின்றோம்.

பதிவானதை நீங்கள் மீண்டும் எண்ணும்போது துருவ நட்சத்திரத்தின் சக்தி உங்களுக்குள் வளர்ந்து... தீமைகள் புகாது தடுத்து அது உங்களைக் காக்கக்கூடிய அரும்பெரும் சக்தியாக வரும்.

அதை நீங்கள் எப்படியும் பெற வேண்டும் என்று தான் குருநாதர் காட்டிய அருள் வழியில் உங்களுக்குள் அந்த உயர்ந்த சக்தியைப் பாய்ச்சுகின்றேன்.

அதை எடுத்து உங்கள் எண்ணத்தால் தீமைகளை நீக்கி... உங்களைக் காத்து வாழ வேண்டும்.

1.சாமி (ஞானகுரு) செய்து தருவார்...! என்று அல்ல.
2.சாமி சொன்ன வழியிலே "அந்த உயர்ந்த சக்திகளை எடுக்க முடியும்... நம்மால் தீமையை நீக்க முடியும்...
3.நம்மால் பிறருடைய தீமைகளையும் போக்க முடியும்...!" என்ற இந்த நம்பிக்கைக்கு நீங்கள் வரவேண்டும்.

நாம் யாருமே கெட்டவர்கள் அல்ல... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வேதனைப்படும்படி ஆக்கிவிடுகிறது.

உதாரணமாக... ரோட்டிலே நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராதபடி திடீரென்று ஒரு நாய் குறுக்கே விரட்டுகிறது என்று வைத்துக் கொள்வோம். நாய் விரட்டும் போது நமக்குப் பதட்டமாகிறது.

அந்தப் பதட்டத்திலே நல்லதை எண்ண முடியாது போகின்றது... நாய் விரட்டுகின்றது ஐய்யய்யோ... நாய் கடித்து விடுமே...! என்று பயப்படுகின்றோம் யாராக இருந்தாலும் அப்படித்தான் சொல்வோம்.

அந்த மாதிரி நேரங்களில் நாய் நம் பக்கத்தில் வந்தாலும் கூட
1.ஈஸ்வரா...! என்று புருவ மத்தியில் உயிரை எண்ணித்
2.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று அந்தப் பதட்டத்தைத் தணித்து அமைதிப்படுத்த வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் சக்தி எங்கள் இரத்த நாளங்களில் கலக்க வேண்டும்... இரத்த நாளங்களில் உள்ள ஜீவான்மாக்கள் ஜீவணுக்கள் அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று உள்முகமாக இதைச் சுவாசித்துச் சுத்தப்படுத்த வேண்டும்.

மற்றவர்களுக்குச் (அவர்களை நாய் விரட்டினால்) சொல்லும் போது துருவ நட்சத்திரத்தின் சக்தியை நீ பெறுவாய்.
1.உனக்குள் அந்த வலுவான நிலை கிடைக்கும்... இனிமேல் நாய் உன்னை விரட்டாது என்று சொல்லிவிட்டு...
2.மகரிஷிகளின் அருள் சக்தியால் நாய் என்னைக் கடிக்காது இருக்கக்கூடிய சக்தி பெற வேண்டும் என்று எண்ணும்படி நாம் வழி காட்ட வேண்டும்.

அதே சமயத்தில் மேலே சொன்ன எதையும் சொல்ல முடியவில்லை என்றாலும் கூட உன் தாயை எண்ணி "அம்மா....." என்று நீ சொல்லப்பா... நாய் கடிக்காது... உன்னை விரட்டாது.

"அம்மா..." என்ற சொல்லைச் சொல்லும் போது தாய் நம்மை காத்திட்ட உணர்வுகள் அங்கே குவியும். நம்மைக் காக்கும் சக்தியாக அது அப்போது வரும்.
1.அம்மா... என்று சொன்னாலே போதுமானது...
2.பதட்டப்பட வேண்டியதில்லை...! என்று தெளிவாக்க வேண்டும்.

ஏனென்றால் நாயைக் கண்டு பயத்தையும் பதட்டமான உணர்வையும் எடுத்துக் கொண்ட பின் அது உடலுக்குள் எல்லா அணுக்களிலும் சேர்ந்து விடுகின்றது.

அப்படிச் சேர்ந்து விட்டால் அவன் எப்பொழுது பார்த்தாலும் பதட்டம் அடைபவனாகவே.... எந்த வேலையைச் செய்தாலும் பதட்டத்துடன் செய்வதும்... சரியாகச் செய்யாதபடி "குற்றவாளியாக" மாற்றிக் கொண்டே இருக்கும்.

காரணம்... அது அவருடைய குறை அல்ல...!

அதற்கு முன்னாடி அவன் கெட்டிக்காரனாக இருந்தாலும் கூட... இது போன்று சந்தித்த பின்... எதிர்பாராதபடி நாய் விரட்டிய நிலைகள் "கடிக்க வந்து விடுமே..." என்று எடுத்த உணர்வுகள் பதட்டம் பயமும் ஏற்பட்டபின் இந்த உணர்ச்சிகள் உடலில் சேர்ந்து மாற்றி விடுகின்றது.

1.காரணம்... எல்லா அணுக்களிலும் இந்தக் காந்தம் உண்டு.
2.அப்படி ஆகாதபடி தடுப்பதற்குத் தான் "துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று அடிக்கடி சொல்கிறோம்.
3.தீமைகளை நீக்கக்கூடிய ஞானவனமாக இந்த உடலைத் தபோவனமாக நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

சொல்வது அர்த்தமாகிறதல்லவா...!






**காற்றிலே எத்தகைய விஷமான உணர்வு வந்தாலும் அது நமக்குள் புகாது தடுக்கும் ஒரு பயிற்சி வேண்டும்**

பூச்சி புழுக்களைக் கொல்லத் தாவரங்களுக்குப் பூச்சிக்கொல்லி மருந்துகளை அடிக்கிறோம். பூச்சிகள் சாகின்றது. அந்த விஷங்களை எல்லாம் சூரியனின் காந்த சக்தி எடுத்து வைத்துக் கொள்கின்றது.

எந்தச் செடிகளிலும் சேராது அந்த விஷங்கள் ஒதுங்கி நிற்கும். செடியிலே இணைந்தது வித்திற்குள் சிறிதளவு உருவாக்குகின்றது.
1.ஆனால் எதிலும் ஈர்ப்பு இல்லாது ஒதுங்கி நிற்பதை நாம் அந்தப் பாதையில் சென்று அந்த வாசனையை நுகர்ந்தோம் என்றால்
2.நம் உடலில் உள்ள அணுக்களில் சிறிதளவு சேர்ந்து விடுகிறது.

3.அந்த விஷத்தை உணவாக உட்கொள்ளும் அணுவாக உடலுக்குள் உருவாகின்றது.

ஒரு தரம் அந்த விஷத்தை நுகர்ந்து விட்டால் அணுக்களில் அது இணைந்த பின் அதற்கு அந்த ருசி தேவை. அது விஷத்தை உணவாக எடுத்துக் கொள்கின்றது.

இன்று எத்தனையோ புதுவிதமான விதைகளை விஞ்ஞானிகள் உருவாக்குகின்றார்கள். இதே போன்று நாம் எத்தனையோ கெமிக்கல் கலந்த ரசாயணங்களை உபயோகப்படுத்துகின்றோம். ஆடைகளிலே நிறங்களுக்காகச் சாயம் பூசுகின்றார்கள்.

இந்த விஷத்தன்மைகளை எல்லாம் சூரியனுடைய காந்த சக்தி கவர்கின்றது… நீரிலும் கலக்கின்றது… ஆவியாக மாறி மேலே படர்கிறது… காற்றிலும் படர்கின்றது.

மனிதனால் இவ்வாறு உருவாக்கப்பட்ட இந்த விஷங்களை
1.மனிதர்கள் மீண்டும் சுவாசிக்கப்படும் பொழுது தீமையான அணுக்களாகவே உடலுக்குள் உருவாகின்றது.
2.ஆசையின் நிமித்தம் செய்தாலும் இது நமக்குள் மாறிவிடுகின்றது.
3.இப்படி எல்லாம் நம்மை அறியாதபடியே தீமைகள் வருகிறது. உறுப்புகள் கெடுகிறது…!

அப்படி ஆகாமல் தடுக்க வேண்டும் அல்லவா…!

இராமாயணத்தில் உணர்வுகள் உணர்ச்சிகள் என்று காட்டியிருப்பார்கள். கிரேதா யுகம்…! கோள்கள் செடி கொடிகள் இவையெல்லாம் கிரேதா.

திரேதா…! சுவாசித்த உணர்வு அதாவது மனிதர்கள் நாம் அதை நுகர்ந்த பின் உடலுக்குள் சேர்த்த பின் திரேதா யுகத்தில் சீதா ராமனாகத் தோன்றுகின்றார். "எந்தச் சுவையோ அதன் எண்ணமாக…" நமக்குள் வருகின்றது.

வேதனைப்பட்டு விட்டால் "அம்மா…!" என்று சொல்கிறோம். மயக்கமாக வருகிறது என்று சொல்கின்றோம். எதனால் வருகிறது…? மயக்கப்படச் செய்யும் உணர்வை நாம் நுகர்ந்ததால்…!

1.ஆனால் “மயக்கமாக இருக்கிறது…” என்ற அந்தச் சொல்லை இன்னொருவர் காதில் கேட்டால்
2.அவர்கள் தைரியமானவர்களாக இருந்தாலும் சிறிது நேரத்தில் அங்கேயும் ஒரு மயக்கம் வருகிறது.

தவறு செய்யவில்லை… இப்படி எல்லாம் வருகின்றது. ஆக தவறு செய்யாமலேயே நம்முடைய உணர்வுகள் இப்படி மாறிக் கொண்டே வருகிறது.

நம்மை அறியாமலே எத்தனையோ தீமைகள் சுவாசத்தின் வழி வருகின்றது. இதை மாற்ற வேண்டும் அல்லவா.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் என்று அதைச் சுவாசிக்க வேண்டும். ஆயுள் கால மெம்பர்களுக்கு அதைப் பெறக்கூடிய தகுதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்.

ரோட்டிலே செல்கின்றோம்…
1.ஒரு கெட்ட வாசனை வருகிறது என்றால் அது நமக்குள் அணுவாக உருவாகாதபடி தடுக்க
2.அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை எடுத்து “ஈஸ்வரா…” என்று உயிரை எண்ணி நிறுத்திப் பழக வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று நமக்குள் வலுக் கூட்டி விட்டோம் என்றால்… நம் ஈர்க்க மறுத்த அந்தக் கெட்ட வாசனையைக் கொஞ்சம் கொஞ்சமாக நம் ஈர்ப்பு வட்டத்திலிருந்து (ஆன்மாவிலிருந்து) அகலச் செய்து அப்புறப்படுத்திவிடும்.
1.ஏனென்றால் அதைக் காட்டிலும் இந்தத் துருவ நட்சத்திரம் சக்தி வாய்ந்தது… நம்முடைய ஆன்மா சுத்தமாகிறது.
2.துருவ நட்சத்திரத்தின் உணர்வை நம்முடைய ஆன்மாவிலே சக்தி வாய்ந்ததாக நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அதற்குத்தான் தியானத்திலே உங்கள் நினைவுகளை எல்லாம் “துருவ நட்சத்திரத்தின் பால் கொண்டு செல்கின்றோம்….” அதை உங்களுக்குள் வலுவாக்கிக் கொள்ள வேண்டும்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

1.மனிதர்கள் இந்த உடல் இச்சைக்குத் தான் செல்கின்றனரே தவிர "உயிரின் இச்சைக்கு" யாரும் செல்வதில்லை.
2.ஆனால் அவனுடன் தான் நாம் ஒன்றி வாழுகின்றோம்.

எதை எடுக்கின்றோமோ அந்த உணர்வுக்கொப்ப உடலாகிறது. உடலாகும் போது "வேதனை.. வேதனை..." என்று எடுத்தால் வேதனைப்படும் நிலை தான் வருகிறது..

வேதனை அதிகமாகி விட்டாலோ அந்த வேதனைக்கொத்த உடலாக... அடுத்து உயிர் நம்மை மாற்றிவிடும். ஆகவே இது போன்ற நிலையிலிருந்து நாம் மீள வேண்டும்.

இந்த உண்மைகளை எல்லாம் இப்போது அறியக்கூடிய தகுதி பெற்றிருக்கிறோம் என்றால் அது யாரால்...?

நம்முடைய மூதாதையர்கள் முதலில் மனிதனாக உருவானார்கள். அவர்கள் வழியில் நம் தாய் தந்தை உடல் பெற்றார்கள். அவர்கள் வழியில் நாம் மனித சரீரத்தை இப்போது பெற்றுள்ளோம்.

ஏனென்றால் "மனிதன் ஒருவன் தான்" இறந்த பிற்பாடு அவர்களை (முன்னோர்களை) விண் செலுத்த முடியும்.

ஒருவருக்கொருவர் நாம் மனதில் நினைக்கின்றோம்... "எனக்குத் துரோகம் செய்தான் பாவி... எங்கிருந்தாலும் அவன் உருப்படுவானா...? என்று...!"

நாம் இப்படி எண்ணினால் அவன் அமெரிக்காவில் இருந்தாலும் கூட இந்த உணர்வு அங்கே சென்று அவனை இயக்குகின்றது... அவன் செய்யும் காரியத்தைக் கெடுக்கிறது.

அதே போன்றுதான்
1.நம்முடைய மூதாதையரின் உணர்வுகள் நமக்குள் இருக்கின்றது.
2.அதை வைத்து அவர்களை நாம் விண் செலுத்த முடியும்.

அருள் சக்திகளை இப்போது குரு வழியிலே நமக்குள் பெருக்குகின்றோம். அதற்குண்டான சக்தி கிடைக்கின்றது... காற்றிலே அந்த உணர்வுகள் உண்டு.

1.நம் முன்னோரின் ஆன்மாக்கள் இன்னொரு மனித உடலுக்குள் சென்று இருந்தாலும் கூட நாம் விண் செலுத்த முடியும்.
2.முன்னாடி செய்ய மறந்து விட்டோம்... இப்பொழுதாவது நாம் செய்யப் பழக வேண்டும்.

உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாக்கள் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று சொல்லி 48 நாட்களுக்குள் அனுப்பி விட்டால் அங்கே சென்று முழுமை அடைகின்றார்கள்... ரிஷியாகின்றார்கள்.

உதாரணமாக ஒருவருக்கொருவர் பிரியமாக இருக்கின்றார்கள் அதிலே ஒருவர் திடீரென்று இறந்து விட்டால் பற்றுடன் எண்ணும் போது அந்த உடலுக்குள் தான் போகும். அந்த உடலில் ஆவியாக இருக்கும்.

ஆனாலும் இறந்த ஆன்மா திடீரென்று உடலுக்குள் புகுந்த உடனே முதலில் தெரியாது.
1.அதனால்தான் ஒரு மண்டலம் என்ற கணக்கை வைத்து ஞானிகள் நமக்குக் காட்டினார்கள்.
2.எது எது எந்தப் பொருளாக இருந்தாலும் "ஒரு மண்டலத்திற்குள் கருத்தன்மை அடைவது" மாறும் தன்மை வருகிறது.
3.இதைத் தெரியப்படுத்துவதற்குத் தான் மண்டலக் கணக்கை ஞானிகள் கொடுத்தார்கள்.

உடலை விட்டுப் பிரிந்து சென்றார்கள் என்றால் அந்த ஒரு மண்டலத்திற்குள் (48 நாட்களுக்குள்) சப்தரிஷி மண்டல உணர்வை எடுத்து வளர்த்து "இலேசாக..." அங்கே விண் செலுத்தி விடலாம்.

அங்கே சென்ற பின் உடல் பெறும் விஷத்தன்மைகள் எல்லாம் கரைந்து விடுகிறது. துருவ நட்சத்திரம் சமைத்துக் கொடுக்கும் உணர்வுகளை எடுத்து ஒளி உடலாகப் பெறுகிறது.

மனிதன் ஒருவன் தான் இதைச் செய்ய முடியும்...!

இதற்கு முன்னாடி நமக்குப் பழக்கம் இல்லை. இப்போது தெரிந்து கொண்டோம். அடிக்கடி இதைப் போன்று செய்து பழகினால் இன்றைய விஷ உலகில் அடிக்கடி வரும் தீமைகளை நீக்க முடியும்.

மூதாதையர்களை விண் செலுத்திய வலுக் கொண்டு அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை நமக்குள் அதிகமாகப் பெருக்கிக் கொள்ள முடியும். இந்த உடலை விட்டு எப்பொழுது நாம் பிரிந்தாலும் நம்மையும் அது அங்கே இழுத்துச் சென்றுவிடும்.

மாறாக... "ஐய்யய்யோ இந்தக் காசை எல்லாம் என் பிள்ளை கண்டபடி செலவழிக்கின்றானே... நாளை அவன் என்ன செய்வான்...? என்று பிள்ளை மீது நினைவு அதிகமானா அந்த உடலுக்குள் தான் வர வேண்டும்

காசு சம்பாரித்துக் கொடுத்தேனே... நாளை என் பிள்ளை என்னை எங்கே ஏமாற்றப் போகின்றானோ...? என்று எண்ணினால் அவன் உடலில் புகுந்து விடுவோம். அங்கே பேயாகப் போய் அவனையும் வேதனைப்படுத்தத்தான் செய்யும்

1.ஆகவே எந்த நிமிடம்... எந்த நிலை... ஆனாலும் துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுக்கும் ஒரு பழக்கத்திற்கு வந்துவிட்டால்
2.நம் உயிரின் இயக்கம் எலக்ட்ரிக்... எலக்ட்ரானிக்... அங்கே கவர்ந்து சப்தரிஷி மண்டலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும்.

அந்த உணர்வுக்குத் தக்க இருளை நீக்குகின்றது உணர்வின் அறிவு எப்பொழுதுமே சந்தோஷமாகப் பேரானந்த நிலையாகப் பெற முடியும். அது தான் விஜய தசமி. உயிர் தோன்றி பத்தாவது நிலையாக முழுமை அடையும் சந்தர்ப்பம்... பிறவி இல்லா நிலை...!

ஒவ்வொரு மாதத்திலும் ஞானிகள் தெளிவான காரணங்களைக் காட்டி நம்மை நல்வழியில் வாழச் செய்ய வழிவகுத்துக் கொடுத்தார்கள். மக்களுடைய எண்ணங்கள் தடுமாறும் இந்தக் காலகட்டத்தில் குரு வழியில் இதை நாம் செயல்படுத்துவோம்.




### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான அறிவு... எட்டாத தூரத்தில் இருக்கக்கூடிய கோள்கள் வெளிப்படுத்தும் உணர்வினை லேசர் என்ற இயக்கத்தைக் கொண்டு அதைக் கவர்ந்து எலக்ட்ரிக்

எலக்ட்ரானிக் என்று கம்ப்யூட்டரில் பதிவாக்கி அதனின் உணர்வின் ஓசைகளைக் கவர்ந்து கொள்கின்றார்கள்.

அதைப் பதிவாக்கி இராக்கெட்டை உந்து விசையால் செலுத்தப்படும் பொழுது வான் வீதியிலே பறக்கின்றது.
1.எதன் உணர்வின் தன்மையோ அந்த ஒலிக்கொப்ப அந்தக் கோள் இருக்கும் இடத்திற்கு இழுத்து அழைத்துச் செல்கின்றது.
2.அதாவது இந்த இராகெட்டை அங்கே இழுத்துச் செல்லும் தன்மை வருகிறது.

அந்தக் கோளிலிருந்து வெளிப்படும் உணர்வுகளைத் தரையில் இருந்தே மனிதன் விஞ்ஞான அறிவால் தெரிந்து கொள்கின்றான். அந்தக் கோளிலே என்னென்ன நடக்கின்றது...? என்று அறியும் ஆற்றல் வருகிறது.

1.அன்றைய மெய்ஞான அறிவுக்கும் இன்றைய விஞ்ஞான அறிவிற்கும் உங்களுக்கு தொடர்பு கொடுத்துச் சொல்கின்றோம்.
2.சாமிக்கு என்ன தெரியும்...? என்று விட்டு விடாதீர்கள்...!

இதை எல்லாம் குருநாதர் எனக்குத் தெளிவாகக் கொடுத்ததை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காற்று மண்டலத்தில் உள்ள நச்சுத்தன்மையை உங்கள் சுவாசத்திற்குள் மறுக்கும் சக்தியாக அது வர வேண்டும்... அத்தகைய ஆற்றலை நீங்கள் பெற வேண்டும்.

இல்லை என்றால் அந்த விஷத்தின் தன்மை ஈர்க்கப்பட்டு மனிதனுடைய ரூபத்தை மாற்றும் சக்தியாக வந்துவிடும். குருநாதர் அதைத்தான் சொன்னார்.

அவர் காட்டிய வழியில் உயர்ந்த ஆற்றலைப் பெற வேண்டும் என்பதற்குத் தான் பதிவு செய்கின்றேன். பதிவானதன் துணை கொண்டு மகரிஷிகளின் அருள் சக்திகளைப் பெற வேண்டும் என்று ஆசைப்படுதல் வேண்டும்

பத்தாவது நிலை பெற்றது... வசிஷ்டர்...! அதாவது கவர்ந்து கொண்ட உணர்வுகள். நமக்குள் அது பதிவாக்கப்படும் பொழுது பிரம்ம குருவாக வருகிறது.

அதன் வழி ஞானத்தின் உணர்வுகளை நுகரப்படும் பொழுது அது பிரம்மம் ஆகி அதனுடன் இணைந்து அருந்ததி... எதன் சக்தியின் ரூபம் பிரம்மம் ஆனதோ... அதன் மணத்தின் உணர்ச்சியாக அது இயக்கும்.

1.பெண்கள் இதையெல்லாம் அவசியம் கூர்ந்து... கவனித்து... அதைப் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டால் உங்களுக்குள் ரெக்கார்ட் ஆகி விடுகின்றது
2.பெண்களுக்கு அணுத் தன்மையாக மாற்றும் சக்தி அதிகம் உண்டு.

தன் கணவருக்குத் தொழிலில் சிக்கல் ஏற்பட்டு விட்டது என்று அந்த உணர்வுகள் மோதும் பொழுது என் கணவர் அந்த அருள் சக்தி பெற வேண்டும்; சிந்தித்து செயல்படும் திறன் அவர் பெற வேண்டும்; அவர் பார்வையில் எல்லோருக்கும் நல்லதாக வேண்டும் என்று பெண்கள் உங்களுக்குள் இதை உருவாக்கி கணவருக்குப் பாய்ச்சினால் உங்கள் எண்ணம் நிச்சயம் அவரைக் காக்கும்.

ஏனென்றால் செல்வத்தைத் தேட என்று அவர் வெளியிலே தொழிலுக்குச் செல்லும் பொழுது எத்தனையோ எதிர்ப்புகள் வரும்... மாறுபட்ட உணர்வுகளைச் சந்திக்க நேரும்.

என் கணவருக்கு அந்த உயர்ந்த சக்தி கிடைக்க வேண்டும் என்ற உணர்வைப் பாய்ச்சினால் அவரைத் தெளிந்த மனிதனாக மாற்ற முடியும்.

என் கணவர் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பெற வேண்டும்... அவர் உயர்ந்த நிலை பெற வேண்டும் பொருளறிந்து செயல்படும் சக்தி பெற வேண்டும்... அனைவரும் போற்றும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்று பெண்கள் நினைக்க வேண்டும்.

அதே சமயத்தில் சம்பாதித்துக் கொடுத்தால் "என் கணவர் மாதிரி இல்லை..." என்று மெச்சுவோம். அதிலே சிறிது குறைவானால் எல்லாவற்றையும் இப்படியே விட்டுவிடுகின்றார் என்று வேதனை வரும்.

இரண்டு தடவை இப்படி ஆனால் போதும். அடுத்து... இப்படிச் செய்து கொண்டிருந்தால் குடும்பம் என்ன ஆவது...? எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு என்ன செய்வது...? என்று சந்தேகங்கள் வந்துவிடும்.

காரணம்...
1.உணர்வுக்கொப்ப அந்த உணர்ச்சிகள் எழும்ப... உணர்வின் செயல்களாக அது வருகின்றது.
2.எதைப் பதிவு செய்கின்றோமோ உயிர் கவர்கின்றது... உயிரிலே படுகின்றது... இரத்தத்தில் கலக்கின்றது
3.தீமையின் உணர்வாக உடலுக்குள் அணுவாக விளையத் தொடங்குகிறது.

அவ்வாறு ஆகாது தடுப்பதற்காக வேண்டித் தான் வாழ்க்கையில் எவ்வாறு தெரிந்து வாழ வேண்டும் என்று எவ்வளவவோ சாஸ்திரங்களைக் கொடுத்துள்ளார்கள். நல்லதை எண்ணி எடுத்து அதன்வழி செயல்படுத்தும் போது அதுவே தெய்வமாக வந்து இயக்குகிறது.

ஆனால் இந்த வாழ்க்கையில் ஆசையின் பால் செல்லப்படும் பொழுது எத்தனையோ துயர்கள் வந்து சேருகின்றது... தன்னைக் காக்கும் சக்தியையும் இழந்து விடுகின்றோம்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இது போன்று சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது. இந்த உண்மை நிலைகளை அறிந்து கொள்வதற்குக் குருநாதர் என்னை 20 வருடம் காடு மேடெல்லாம் அலைய வைத்து "எத்தனை துன்புறுத்தினார்...?" என்று எனக்குத் தெரியும்.

1.ஒவ்வொரு மனிதனும் அவனுடைய சந்தர்ப்பம் நுகர்ந்த உணர்வால் எப்படி எல்லாம் துன்பப்படுகின்றனர்... வேதனைப்படுகின்றனர்...
2.வேதனை வந்த பின் எத்தனை நோய்கள் அவருக்கு வருகின்றது...?
3.அதிலிருந்து மீட்டிட என்ன செய்ய வேண்டும்...? என்று தான் காட்டினார்.

அவர் எனக்குப் போதித்ததைத் தான் உங்களுக்கும் வாக்காகச் சொல்லிப் பதிவு செய்து உங்களை மீட்டிடும் சக்தியாக அதை கொண்டு வருகின்றேன்... பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




ஒவ்வொரு மனிதனும் அவன் சந்தர்ப்பம் நுகர்ந்த உணர்வால் எப்படி எல்லாம் துன்பப்படுகின்றனர் வேதனைப்படுகின்றனர்... வேதனை வந்த பின் எத்தனை நோய்கள் அவருக்கு வருகின்றது...? அதிலிருந்து மீட்டிட என்ன செய்ய வேண்டும்...? என்று தான் குருநாதர் எனக்குக் காட்டினார்.




**ஆயுள் கால மெம்பர் இந்த உண்மைகளை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்**

துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உங்கள் ஒவ்வொரு குணங்களிலும் சொல்லி வரும் போது அந்தந்த உடலில் ஏற்பட்ட உணர்வெல்லாம் சேர்த்துச் சேர்த்துக் கலந்து விடுகிறோம்.

இது தான் "தொட்டுக் காட்டுதல்..." என்பது.

உங்கள் கண்ணின் நினைவை உயிருடன் ஒன்றி விட்டு... அடுத்து உங்கள் கண்ணின் நினைவை என் புருவ மத்தியிலே "ஈஸ்வரா..." என்று உற்றுப் பார்த்து துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று ஏங்கிப் பெறுங்கள்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி "அனைவரும் பெற வேண்டுமென்று ஏங்குங்கள்..."
1.இவ்வாறு ஏங்கிப் பெறும் பொழுது உங்கள் எல்லோருடைய செவிகளிலும் படுகின்றது...
2.எல்லோரும் சொன்ன உணர்வைக் கண் கவர்கின்றது... மூக்கு நுகர்கின்றது... உயிருக்குள் படர்கின்றது...
3.உயிர் அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உங்கள் ரத்த நாளங்களில் கலக்கச் செய்கின்றது.

"வியாழன் கோள்..." 27 நட்சத்திரங்களின் சக்தியை எடுத்துப் புதுவிதமான கருக்களை உருவாக்கக்கூடிய குருவாக இருக்கின்றது. இதே மாதிரி
1."நம் குருவின்..." அருள் துணையால் துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பெற்று
2.எல்லோரையும் ஒன்று போல் இணைக்கும் பொழுது நாம் நுகர்ந்த உணர்வுகள் நம் உடலுக்குள் படர்கின்றது.
3.தீமையான உணர்வுகளை மாற்றி விட்டுத் "துருவ நட்சத்திரத்துடன் ஒன்று சேர்த்து இணையும் சக்தியாக" மாறுகின்றது.

கூட்டுத் தியானத்தின் மூலம் எடுக்கக்கூடிய சக்திகள்... உங்கள் உடலுக்குள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்க்கும் நிலையாச் சந்தர்ப்பம் உருவாகின்றது.

1.என் நெற்றியிலிருந்து அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஒளி வரும்.
2.அந்த ஒளியான உணர்வுகள் உங்கள் உடலிலும் பாயும்.
3.கண்களுக்குத் தெரியவில்லை என்றாலும் உங்கள் உடலுக்குள் ஊடுருவி உள்ளுக்குள் செல்வதும்... அந்த உணர்வு தெரியும்.

4.இந்த அடிப்படையில் நீங்கள் கொண்டு சென்றால் "அருள் ஞானச் சக்கரத்திலும் ஒளி வரும்..."

எப்பொழுது எந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்றாலும் ஆந்தச் சக்கரத்திற்கு முன்பு நின்று அதை உற்றுப் பார்த்துத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் என்று எடுத்து வலுவாக்கிக் கொண்டு செல்லுங்கள். உங்கள் காரியங்கள் நல்ல முறையில் செயலாகும்.

உபதேச வாயிலாக உங்களுக்குத் தொடர்ந்து துருவ நட்சத்திரத்தைப் பற்றிப் பதிவு செய்து கொண்டே வருகின்றேன்.

அந்தச் சக்தி பெற வேண்டும் என்று நான் எண்ணி ஏங்கித் தியானிக்கின்றேன். அதே போல் நீங்களும் உங்கள் உயிரான ஈசனிடம் வேண்டி என் புருவ மத்தியைப் பாருங்கள். அப்படிப் பார்க்கும் போது
1.துருவ நட்சத்திரத்திலிருந்து வரக்கூடிய ஒளி அங்கிருந்து இங்கே வந்து என்னிடமிருந்து உங்களுக்குள் பாயும்.
2.என்னால் பதிவு செய்த துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நேரடியாக உங்களுக்குப் பெறச் செய்வதற்காக இது மாதிரிச் செய்கின்றேன்.

இந்த உணர்வு பாய்ந்த பின் அதை எடுத்து நீங்கள் வலு கூட்டிக் கொண்டால் இது விஷ்ணு தனுசாக மாறுகின்றது. கடைசி நிலையாக
1.உடலை விட்டு உயிர் போவதற்கு முன் இந்த உணர்வை எடுத்தோம் என்றால் தனுசு கோடியாக
2.உயிரும் இந்த உடலில் இருக்கும் அனைத்தும் ஒன்றாகின்றது.

அந்த நிலை பெறச் செய்வதற்குத் தான் பயிற்சியாக இவ்வாறு கொடுக்கின்றேன்.

### ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

குருநாதர் என்னை மலைப் பகுதிகளுக்கு எல்லாம் அழைத்துச் சென்று 27 நட்சத்திரங்களிலிருந்து வெளிப்படக்கூடிய மின்னல்கள் ஒளிக்கற்றைகளாகப் பூமிக்குள் பரவுவதை "எது எது எப்படிக் கவருகிறது...?" என்று காட்டினார்.

அதிலே ஜோதிப்புல் என்றும் காட்டினார்... ஒளிக்கற்றைகளை தன் விழுதுகளில் கவர்ந்து கொண்ட பின் மோதும் போது வெளிச்சத்தை எப்படிக் கொடுக்கின்றது...?

இயற்கையினுடைய நிலைகள் எப்படிச் சந்தர்ப்பங்கள் வருகிறது..? என்று அனுபவத்திலே காட்டினார்.

குருநாதருடன் அலைந்து தான் இதையெல்லாம் தெரிந்து கொண்டேன். காட்டிற்குள் சாப்பாடு வெறும் பேரீச்சம்பழம் தான். இல்லை என்றால் ஒரு பச்சிலையைக் காண்பிப்பார். அதைச் சாப்பிட வேண்டும். தண்ணீரைக் குடித்துக் கொள்ள வேண்டும். இதுதான் உணவு.

அதே சமயத்தில் அரிசியையும் மோரில் ஊற வைத்த கத்திரிக்காய் மிளகாய் மாங்காய் ஒரு டப்பா இதையும் எடுத்துச் செல்லும்படி சொல்வார். டப்பாவில் தண்ணீரை ஊற்றி அதிலே எல்லாவற்றையும் போட்டு வேக வைத்துக் கஞ்சியாகக் குடிக்கும்படி சொல்வார்.

சோறு கிடையாது…! வெறும் தண்ணீராகக் கஞ்சியாகக் குடிக்கும்படி சொல்வார். ஏனென்றால் அரிசி சாதம் சாப்பிட்டுப் பழகியதனால்
1.அந்த உணர்வின் சத்து உடலிலிருக்கும் அணுக்களுக்கு அத்தகைய உணவு கிடைக்கவில்லை என்றால் அது மாறிவிடும்.
2.ஆகையினால் உன்னை இப்படிச் சாப்பிடும்படி சொன்னேன் என்று அதிலேயும் விளக்கம் கொடுப்பார்.

காரணம்… பச்சிலையைச் சாப்பிடுகின்றாய்…! இதே உணர்வு உடலில் விளைந்தால் அதற்குண்டான வித்தியாசங்களாக வந்துவிடும். அதை மாற்ற வேண்டும் என்பதற்காக இதையும் சொல்லி அதையும் சொல்லி ஒவ்வொரு வகையிலும் அதைச் சீராக்கிக் கொண்டு வருவார்.

சக்தி இருக்கிறது என்று காட்டுக்குள் எடுத்தாலும் உணவுப் பழக்கத்தால் எப்படி மாற்றங்கள் ஏற்படுகின்றது…? என்று காட்டுவார்.

அப்போது அவர் சொன்ன முறைப்படி கஞ்சியாகக் காய்ச்சிக் குடிக்கப்படும் பொழுது அது தேவாமிர்தமாக இருக்கும். வெயில் காலங்களில் நீர் மோரைச் சாப்பிட்டால் எப்படி இருக்கும்…? ஒரு மாங்காயை உப்பைத் தொட்டுத் தின்றால் எப்படி இருக்கும்…?

1.இப்பொழுது வாயில் உமிழ் நீர் சுரக்கின்றது அல்லவா…! இது எங்கிருந்து வருகின்றது…?
2.ஒன்றுமே உங்களுக்குக் கொடுக்கவில்லை… ஆனால் மாங்காயைப் பற்றிச்

சொன்ன உணர்வுகள் செவிகளில் படுகிறது...
3.உங்களுக்கு அதைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வருகின்றது.
4.நுகர்ந்த உடனே அந்தப் புளிப்பு கலந்த உமிழ் நீராகச் சுரக்கின்றது. இது சாப்பாட்டுடன் கலக்கின்றது

இதே போன்றுதான் வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் கண்ணுற்றுப் பார்த்து நுகரும் உணர்வுகள்... எதைக் கேட்டறிந்தாலும் உமிழ் நீராக மாறி ஆகாரத்துடன் கலந்துவிடுகிறது.

ஆனால் அது தீமை என்ற நிலையில் இருந்தால் விஷத்தன்மையாக மாறிவிடுகின்றது. ஆக வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு
1.அடுத்துப் பிறருடைய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் கேட்டால் இந்த விஷங்கள் உமிழ் நீராக மாறி
2.உடலுக்குள் சேர்ந்து ஆகாரத்துடன் கலந்து வயிற்றிலே "கட...புடா... கட...புடா...! என்று ஆகிறது.

இது ஏன்... எதனால்...? என்று நாம் அறிவதில்லை. வயிறு நிறையச் சாப்பிட்டபின் சஞ்சலமாகச் சலிப்பாகப் பேசுவதைக் கொஞ்ச நேரம் கேட்டுப் பாருங்கள்.

அது எல்லாம் உமிழ் நீராக மாறி அடுத்து நெஞ்சு எரிகிறது கப கப என்று எரிகிறது என்பார்கள். பேசிய உணர்வு கவரப்பட்டு இப்படி உமிழ் நீராக மாறி நல்ல ஆகாரத்தையும் கூட நுகர்ந்த உணர்வுகள் மாற்றி விடுகின்றது.

இதை எல்லாம் குருநாதர் அனுபவத்தில் கொடுத்தார். நான் இதைப் புத்தகத்திலோ மற்ற நிலைகளிலோ பார்த்துப் படித்துச் சொல்லவில்லை. நம் உடலுக்குள் என்னவெல்லாம் நடக்கிறது...? என்று காட்டிற்குள் வைத்து இதை எல்லாம் அறியும்படி செய்வார்.

1."இந்தப் பக்கம் வா..." என்று அங்கே வேறு ஒரு செடியைக் காண்பிப்பார்... அதனின் மணத்தை நுகரு...! என்பார்
2.நுகர்ந்தவுடன் அந்த உணர்வுகள் சேரும்... உமிழ் நீர்கள் எனக்குள் மாறும்.
3.நீ சாப்பிட்ட தண்ணீரின் சத்து இப்போது எப்படி வருகிறது பார்...! என்று காட்டுவார்.
4.நீ நுகரும் இந்த மணத்திற்கு எவ்வளவு பெரிய சக்தி இருக்கின்றது என்று நுகரச் சொல்லி... அறியச் செய்து... உணரும்படி செய்வார்.

இதையெல்லாம் முழுமையாக உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்குத் தான் சொல்கிறேன். காரணம் உங்கள் சந்தர்ப்பம் அந்தந்த நேரமோ அப்போது இந்த உண்மைகளை நீங்கள் அறிந்து... ஞானத்தின் வழியிலே சீராகச் செல்வதற்கு இது உதவ வேண்டும் என்பதற்காகத் தெளிவாக்கிக் கொண்டு வருகின்றேன்.

ஆகவே இந்த அருள் உணர்வைப் பெருக்கிக் கொள்ளுங்கள். மகரிஷிகளின் அருள் சக்திகளை ஒவ்வொரு நொடிப் பொழுதும் உங்களுக்குள் வளர்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்.






**குருநாதர் கொடுத்தது எக்கச்சக்கமாக எனக்குள் இருக்கின்றது... கொஞ்சம் தான் சொல்கின்றேன்**

விஞ்ஞான அறிவு கொண்டு கம்ப்யூட்டரில் எண்ணிலடங்காதவைகளைப் பதிவு செய்கின்றார்கள். பதிவு செய்த பின் மீண்டும் இயக்கப்படும் பொழுது அனைத்தும் தெரிய வருகிறது.

இன்றைய நவீன நிலைகள் கொண்டு அதனுடைய இயக்கங்களில் தவறுகள் வந்தாலும் கூட “தன்னாலேயே அதைத் திருத்திக் கொள்ளும்படியாக அதில் வைத்திருக்கின்றார்கள்…”

அதே போன்று
1.அன்றாட வாழ்க்கையில் மனிதர்கள் நாம் காலையிலிருந்து இரவு வரை
2.எத்தனையோ உணர்வுகளைப் பதிவு செய்கின்றோம்… நமக்குள் சேமிக்கப்படுகின்றது.

கம்ப்யூட்டர்களில் பார்த்தோம் என்றால் பல கோடி நிலைகளைப் பதிவாக்கி அதை இயக்கும் வசதிகளையும் (CAPACITY) இன்றைய நவீன நிலைகள் கொண்டு உருவாக்கி வைத்துள்ளார்கள்.

அதே போன்று நமது மனித உடலில் எத்தனையோ விதமான ரெக்கார்டுகள் உண்டு.

அனுபவம் பெறுவதற்காக நான் காட்டிற்குள் சென்று மிருகங்களை எல்லாம் பார்த்தேன் என்றால்
1.அங்கே பெற்ற அனுபவங்களை எல்லாம் இப்பொழுது சொல்லிக் கொண்டு வருகிறேன் என்றால்
2.நான் சென்ற இடமெல்லாம் இப்பொழுது நினைவலைகளில் வந்து (அது தெரிந்து தான்) தான் சொல்ல முடிகின்றது.

உதாரணமாக நீங்கள் ரோட்டிலே செல்கின்றீர்கள். யாராவது திட்டினார்கள் என்றால்… சண்டை போட்டு அவர்கள் மோசமாகத் திட்டியிருந்தார்கள் என்றால்… ஒருவருக்கொருவர் தாக்கியிருந்தால்… அதை ஒரு தரம் நாம் பதிவாக்கி விட்டோம் என்றால்
1.அந்த இடத்திற்குச் சென்ற பின் இருவர் சண்டையிட்டால்
2.அவருடைய நினைவலைகள் அங்கே தெரிய வரும்… உடனே தெரிந்து கொள்ளலாம்.

ஏனென்றால் நம் உடலில் இது போன்று கண் கருவிழி ருக்மணி பதிவாக்கி விடுகின்றது. மீண்டும் அந்த மனிதர்களை எண்ணும் பொழுது அது இயக்குகின்றது.

இதே போன்றுதான்
1.இயற்கையின் உண்மை நிலைகளை அறிந்து கொள்வதற்காக குருநாதர் எண்ணிலடங்காத பதிவுகளைக் கொடுக்கின்றார்…
2.எக்கச்சக்கமாக எனக்குள் இருக்கின்றது.
3.கொஞ்சம் மட்டும் தான் உங்களிடம் சொல்லி வருகின்றேன்
4.அந்தந்தச் சமயத்திற்குத் தக்கவாறு.

காரணம்… ஒரு உடலில் விளைந்ததை அடுத்த உடலுக்குள் பாய்ச்சினால் அதன் நிலைக்கே மாற்றும்.

அது போல் தான் அகஸ்தியன் தான் கண்டறிந்த உண்மைகளை எல்லாம் தன் மனைவிக்கு எடுத்துச் சொல்கின்றான். இருவரும் ஒன்றாகிறார்கள்.

நம் பூமி துருவத்தின் வழி விண்ணுலக ஆற்றலை எவ்வாறு கவர்கிறது…? என்பதை உற்று நோக்குகின்றார்கள். அதிலிருந்து வரக்கூடிய சக்தியை நுகர்கின்றார்கள். அவர்கள் எடுத்துக் கொண்ட சக்தியால் கணவன் மனைவி இரு உயிரும் ஒன்றாகின்றது… உணர்வுகள் அனைத்தையும் ஒன்றாக்குகின்றார்கள்.
1.மின்னல்கள் வரும் பொழுது ஒளிக் கற்றைகளை இவர்கள் சுவாசிக்கின்றார்கள்
2.இரண்டு பேர் உடலிலும் ஒளியான அணுக்கள் உருவாகின்றது.

துருவப் பகுதியை எண்ணி வளர்த்துக் கொண்ட நிலையில் இரு உயிரான்மாக்களும் வெளி வரும் பொழுது எதைக் கூர்மையாக உற்று நோக்கினார்களோ அங்கே செல்கின்றார்கள். இரு உயிரும் ஒன்றாகிறது.

1.அகஸ்தியன் உடலில் இரண்டு நட்சத்திரத்தினுடைய சக்தி கார்த்திகை நட்சத்திரம் ரேவதி நட்சத்திரம்
2.அவன் மனைவி உடலில் அதே போன்று இரண்டு நட்சத்திரம் வேறு ஒரு ஆண் நட்சத்திரம் வேறு ஒரு பெண் நட்சத்திரம்
3.அவர்கள் இரு உயிரும் ஒன்றான நிலையில் "அந்த நான்கும் சேர்ந்து பிரம்மமாகின்றது…"
4.மின்னல் எப்படி ஆகின்றதோ… அதை உருவாக்கக்கூடிய சக்தி பெறுகின்றார்கள்.

அப்படியானது தான் துருவ நட்சத்திரம்.

அந்தத் துருவ நட்சத்திரம் நம் பூமியின் வடகிழக்குப் பகுதியில் துருவப் பகுதியின் ஈர்ப்புக்கு நேராக இருக்கின்றது. அதன் வழி தான் அதனுடைய

சக்திகள் இங்கே உள்ளே வருகின்றது
1.அதை நுகர்ந்து உங்களுக்குள் வளர்த்துக் கொள்வதற்குத் தான்
2.இத்தனை உபதேசங்களையும் கொடுத்துக் கொண்டு வருகின்றோம்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான அறிவு கொண்டு கம்ப்யூட்டரில் ரெக்கார்டு செய்து கொள்கின்றார்கள். தட்டி விட்ட பின் அதனுடைய இயல்புகளைத் தெரிந்து கொள்கின்றனர்.

மனிதர்களாக இருக்கும் நாமும் இரண்டு பேர் சண்டை போடுகிறார்கள் என்றால் உற்று நோக்கி... அதைப் பதிவு செய்து கொள்கின்றோம்.
1.(கம்புயூட்டரில் பதிவானதைத் தட்டுவது போல்) சண்டையிட்டவர்களை மீண்டும் எண்ணியுடன் நமக்குக் கோபம் வருகிறது.
2.அந்த நேரத்தில் நம் நல்ல காரியங்களைக் கெடுக்கின்றது.

கோவிலுக்குச் சென்று வணங்குகின்றோம். எண்ணியபடி நடக்கவில்லை என்றால் அதைப் பதிவு செய்து கொள்கின்றோம். எப்படி...!
1."என்னத்தைச் சாமி கும்பிட்டோம்...? ஒன்றும் நடக்கவில்லையே...!" என்று அதை எண்ணுகின்றோம்
2.அந்த ரெகார்டைத் தட்டியவுடன் சோர்வடைந்து... நல்லதையே எடுக்க முடியாது போய் விடுகின்றது

ஏனென்றால் எண்ணிய உணர்வுகளைத் தான் எலும்புகளில் (கம்ப்யூட்டர் போல்) ரெக்கார்ட் செய்து வைத்துக் கொள்கிறது. இப்படி எண்ணிலடங்காத பதிவுகள் நமக்குள் உண்டு.

ஒன்று விஞ்ஞானம் அதை எல்லாம் நிரூபிக்கின்றது...!

அதே போன்று தான் சண்டை போடுவதையும் பதிவாக்குகின்றீர்கள்... குடும்பத்தில் வந்த கஷ்டங்களையும் பதிவாக்குகின்றீர்கள்,,, அந்தந்தப் பதிவை எண்ணும் பொழுது அதன் வழியே நடக்கிறது.

அதே சமயத்தில்... அத்தகைய கஷ்டத்திலிருந்து மீள வேண்டும் என்று நிலை வரும் போது...
1."கஷ்டங்களை மறந்து..." அந்த மகரிஷிகளை அருள் சக்தி பெற வேண்டும் என்று உணர்வை எடுத்தால் அருளைப் பெருக்குகின்றோம்...

2.சிந்திக்கும் ஆற்றலையும் அது கொடுக்கின்றது. "சிரமங்களை மீட்டுத் தருகின்றது நம்முடைய எண்ணம்..."

நீ எதை எண்ணுகின்றாயோ நீ அதுவாகின்றாய்.

உதாரனமாக துணி எடுக்க ஜவுளி கடைக்குச் செல்ல வேண்டும் என்று போகும் போது அந்த நேரத்தில் குழந்தை வந்து அடம்பிடித்தால் என்ன நடக்கிறது...?

ஏன்டா... இப்படி வெளியே போகும்போது அடம்பிடிக்கின்றாய்...? என்று இந்த வெறுப்படைந்தால் போதும். கடைக்குச் சென்று சரியான துணியை நீங்கள் எடுத்துக் கொண்டு வாருங்கள் பார்ப்போம்...!

1.இந்தச் சங்கடம் தான் அங்கே வேலை செய்யும்... வெறுப்புணர்வு தான் முன்னாடி கண்களில் வரும்.
2.நல்ல துணியை எடுத்துப் போட்டாலும் "இது வேண்டாம்... இது வேண்டாம்..." என்று சொல்லிக் கொண்டிருப்போம்.
3.கடைசியில் வெறுப்பு அதிகமாகிச் "சடைத்துக் கொண்டு... சரி இதையாவது கொடுங்கள்..." என்று எடுத்து வருவோம்.

வீட்டில் மற்றவர்களோ சந்தோஷமாக இருப்பார்கள். துணியைக் காண்பிப்போம். "என்னங்க...? போயும் போயும் இந்தத் துணியைப் போய் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே...!" என்பார்கள்.

இல்லைங்க... இதுதான் நல்லது என்போம். நன்றாகப் பாருங்கள் என்பார்கள். பார்த்தாலும் அன்றைக்கு அது தெரியாது.

ஆனால் மறுநாள் காலையில் பார்த்தால்...
1.சனியன்...! போகும்போது குழந்தை குறுக்கே வந்து அடம்பிடித்தான். எத்தனையோ தொல்லை கொடுத்தான் என்று
2.மீண்டும் "சனியன்..." என்று தான் நாம் சொல்வோம்.

இந்த உணர்வுகள் அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் இந்த வெறுப்பு வரும். இந்த உணர்வோடு அன்றைக்கு மற்ற காரியங்கள்... ஒரு சமையலையே செய்தாலும் (துணி எடுத்ததை எண்ணி) சனியன் என்று எண்ணிக் கொண்டு காயை அறுத்துக் கொண்டிருந்தால் போதும். அந்த உணர்வு என்ன செய்யும்...?

கையில் எடுத்து இப்படிப் பிடித்து அப்படி அறுப்பதற்குப் பதில் அது சிறிதளவு சாய்ந்தால் போதும் கையிலே அறுபட்டு விடும். என்ன கிரகமோ...? என்று சொல்வோம். இதைப் பார்க்கலாம்.

ஆக... கீதையில் நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய். மனித வாழ்க்கையில் இயக்கப்படும் உணர்வின் இயக்கங்கள் தான்.

ஏனென்றால் இந்த உடலில் எத்தனை நாள் வாழுகின்றோம்...? இன்றைய செயல் நாளைய சரீரம்.

ஆகவே
1.இது போன்ற தீமைகளை நீக்க அருள் ஞானிகள் உணர்வுகளை... உங்களுக்குள் பெறச் செய்வதற்குத் தான்
2.இந்த உபதேச வாயிலாக தொடர்ந்து “ரெக்கார்ட் செய்கின்றேன்...”
3.எந்த அளவிற்கு நீங்கள் இதைக் கூர்ந்து பதிவு செய்கிறீர்களோ அந்த அளவுக்கு...
4.அது திரும்ப எண்ணும் பொழுது “உங்கள் எண்ணம் உங்களைக் காக்கும்”

குருநாதர் காட்டிய வழியில் மகரிஷிகளின் அருளாற்றலைப் பெற்றேன். அதை உங்களில் பதிவாக்குகின்றேன்... நீங்கள் இந்தப் பதிவை எடுத்துக் கொள்ளலாம்.

1.பையனோ குடும்பமோ தொழிலோ சரியில்லை என்றால் அதை ரெக்கார்ட் செய்கின்றீர்கள்.
2.எப்போது பார்த்தாலும் இப்படியே நடக்கின்றது என்றும் பதிவு செய்து கொள்கிறீர்கள்.

உதாரணமாக... மனைவி மீது கொஞ்சம் வெறுப்பு இருந்தால் அதைப் பதிவு செய்து விட்டால் போதும். “தண்ணீர் கொண்டு வா...” என்போம்.

அவர்கள் வேலையில் கவனமாக இருக்கும் போது சரியாகக் காதில் விழுகாது. “எப்பொழுது பார்த்தாலும் இப்படித்தான்...! நான் சொன்னால் என் மனைவி கேட்பதே இல்லை...! என்று கோபமாகத்தான் அடுத்துப் பேச வரும்.

அதே போன்றுதான் மனைவியும் கணவனைப் பார்த்து...
1.“ஏதாவது ஒன்று என்றாலும் பொறுமை இல்லாதபடி உடனே இவருக்குக் கோபம் வந்து விடுகிறது.

2.என்னைக் குற்றவாளியாகவே இவர் பார்க்கின்றார் என்ற இந்த உணர்வு தான் குடும்பத்தில் வளர்கின்றது.

இது எல்லாம் சந்தர்ப்பங்கள் தான்...!

அதை மாற்றி அமைப்பதற்குத் தான் அந்த ஞானிகள் உணர்வினைப் பெறச் செய்வதற்கு உபதேசமாக "ரெக்கார்ட்..." செய்கிறோம்.

இச்சா சக்தி கிரியா சக்தி ஞான சக்தி. நீங்கள் அதை இச்சைப்பட்டு வளர்த்துக் கொண்டால் அது கிரியையாகி அந்த ஞானமாக நல்வழியில் உங்களை வழி நடத்தும்.
1.ஆகவே அந்தத் தெய்வீகப் பண்புகளை வளர்த்துப் பழக வேண்டும்.
2.அருள் ஞானிகள் உணர்வை வளர்த்தால் நாம் தெய்வமாகின்றோம்.

நாம் எல்லாம் தெய்வமாக ஆவதற்குத் தான் ஞானிகள் இத்தகைய தத்துவங்களைக் கொடுத்தார்கள்.




தீமைகளை நீக்க அருள் ஞானிகள் உணர்வுகளை... உங்களுக்குள் பெறச் செய்ய உபதேச வாயிலாக தொடர்ந்து “ரெக்கார்ட் செய்கின்றேன்...” எந்த அளவிற்கு நீங்கள் இதைக் கூர்ந்து பதிவு செய்கிறீர்களோ அந்த அளவுக்கு... அது திரும்ப எண்ணும் பொழுது “உங்கள் எண்ணம் உங்களைக் காக்கும்”

குரு வழியில் மகரிஷிகளின் ஆற்றலைப் பெற்றதை உங்களில் பதிவாக்குகின்றேன்... நீங்கள் இதை எடுத்துக் கொள்ளலாம்.




**நஞ்சை ஒளியாக மாற்றுவது தான் நமது தியானத்தின் நோக்கம்**

1.நல்லதைக் காக்க நமக்கு அந்தத் திறன் வேண்டும்…
2.அந்தத் திறனை இழந்து விட்டால் நல்லதைத் தீமை மறைத்து விடுகின்றது.

ஒரு மரம் வளர்வதற்கு எத்தனையோ வருடங்கள் ஆகிறது. ஆனால் மரத்தை உடனடியாக நாம் வீழ்த்த முடிகின்றது. இதே போல மனித உடலைப் பல வருட காலம் நாம் வளர்த்து வந்திருந்தாலும் "இனி என்ன வாழ்க்கை…?" என்று

வெறுப்பாகும் பொழுது தற்கொலை செய்து... தன் உடலையும் ஒரு சிலர் அழித்து விடுகின்றார்கள்.

எத்தனையோ ஆசாபாசங்கள் கொண்டு இவ்வளவு காலம் வாழ்ந்து வந்திருக்கின்றோம். ஆனாலும்...
1.இந்த விஷத்தின் துடிப்பு ஒரு நொடிக்குள் இயக்கி விடுகின்றது.
2.அத்தகைய விஷத்தை வென்றவர்கள் தான் மெய் ஞானிகள்
3.அது அனைத்தையும் வென்று அந்த விஷத்தின் ஆற்றலைத் தனக்குள் அடிமைப்படுத்தி
4.அதையே தனக்குள் ஒளியாக மாற்றியவர்கள் மகரிஷிகள்,

வைரம் தன்னிச்சையாக ஒளி கொடுக்கிறது என்றால் அந்த விஷத்தைத் தன்னுள் அடக்கி விஷத்தின் ஆற்றல் மிக்க நிலையைத் தன்னிச்சையாக ஒளிச் சுடராகக் காட்டுகிறது.
1.அதை ஒளியாக... இனிமையாக... நம் கண்ணிலே குளிர்ச்சியாக... காண முடிகின்றது.
2.அந்த விஷங்கள் அனைத்தும் ஒடுங்கி அந்த இயக்கச் சக்தியே ஒளியாக மாறுகின்றது.

ஆனால் வைரத்தைத் தட்டி விழுங்கினாலோ அது நம்மை மாய்த்து விடும்.

இதைப் போன்று
1.விஷத்தினைத் தனக்குள் எடுத்து இனிமை கலந்த செயலாக இயக்கவல்ல ஆற்றல்மிக்க... வலிமை மிக்க அந்த எண்ண ஒளிகள்
2.மகரிஷிகள் உடலில் விளைய வைத்த அந்த உணர்வின் எண்ண அலைகள் நம் பூமியிலே படர்ந்து கொண்டிருக்கின்றது.
3.அதைக் கவர்வதற்குத் தான் தியானப் பயிற்சியைக் கொடுக்கின்றோம்.

ஒரு குழம்பு வைக்கும் பொழுது காரம் புளிப்பு இனிப்பு துவர்ப்பு அனைத்தும் கலந்து அதைச் சுவை மிக்கதாகச் சமைக்கின்றோம்.

இதைப் போன்று நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மகிழ்ந்து நெகிழ்ந்து சலித்து... வெறுப்பு விருப்பு வேதனை இது போன்ற எத்தனையோ எண்ணங்களுடன் நாம் இங்கே கூடி உள்ளோம்.

குரு காட்டிய அருள் வழிப்படி மெய் ஒளியைக் காண வேண்டும் அந்த மெய் ஞானத்தைப் பெற வேண்டும் என்ற உணர்ச்சிகளைத் தூண்டும் படிச் செய்கிறோம்.

அப்போது உங்கள் எண்ணங்கள் ஒருமித்த நிலைகள் கொண்டு ஏக்க உணர்வுடன் விண்ணை நோக்கி ஏகி அந்த மெய் ஞானிகளுடைய அருள் பெற வேண்டும் என்று அனைவரும் ஒன்று சேர்ந்து தியானிக்கிறோம்.

1.இங்கு வந்திருப்போர் அனைவரும் தியானத்தில் இருப்பவர் அனைவரும் அந்த மகரிஷிகள் சக்தி பெற வேண்டும் என்று
2.ஒருங்கிணைந்த எண்ணங்களுடன் நாம் படரச் செய்யும் பொழுது
3.இங்கு வந்திருந்தோர் துன்ப நிலைகள் கொண்டு வந்திருந்தாலும் அனைவரும் எடுத்துக் கொண்ட இந்த உணர்வுகள் ஒன்று சேர்ந்து
4.எந்த மகிழ்ச்சியைப் பெற வேண்டும் என்று ஏங்கி வந்தோமோ இந்த உணர்வின் அலைகள்
5.அந்த ஒளி அலைகளுடன் ஈர்க்கப்பட்டு "அந்தச் சுவாசம் உங்கள் உயிரிலே சுழன்று கொண்டிருப்பதைக் காணலாம்..."

மகரிஷிகளின் அருள் சக்தி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் ஈஸ்வரா என்று ஏங்கி இந்த மூச்சலைகளை வெளிவிடும் பொழுது உங்களுக்குள் உயர்ந்த "உமிழ் நீராகச் சுரந்து இருப்பதையும்" காணலாம்.

இப்பேற்பட்ட "அமுத சுரபிகள்" நமக்குள் சேர்ந்து அந்த ஞானிகள் அருள் வித்தைச் சீராக வளர்க்கச் செய்யும்.

அப்போது நம்மை அறியாது சேர்ந்த வேதனையை உருவாக்கும்... நோய்களை உருவாக்கும்... நம் சொல்லின் இனிமையைக் கெடுக்கும் உணர்வுகள் தணிந்து
1.வைரம் எப்படி உணர்வின் தன்மையை ஒளியாக மாற்றுகின்றதோ அதைப் போன்ற நிலைகளை நாமும் பெற முடியும்.
2.நம் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியிலும் இதைப் பெற முடியும்

குழம்பை நாம் சுவைமிக்கதாக உருவாக்குவது போன்று குருநாதர் காட்டிய அருள் வழிப்படி இந்தத் தியானத்தின் மூலம் மெய் ஒளியை அனைவரது உள்ளங்களிலும் படரச் செய்கின்றோம்.

1.ஒவ்வொருவரும் கோபமோ வெறுப்போ வேதனையோ சலிப்போ சங்கடமோ எத்தனையோ மாறுபட்ட நிலைகள் கொண்டிருந்தாலும்
2.அதைச் சமமாகச் சமைக்கும் நிலைகள் கொண்டு சுவைபடும் சக்தியாக உருவாக்கி
3.அதைத் தெளிந்த நிலையில் உருப் பெறச் செய்யும் சக்தியாக
4.அந்த அருள் ஞானிகள் வித்தாக உருவாக்கச் செய்வதுதான் எமது உபதேசத்தின் நோக்கம்.

**ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்**

அகஸ்தியன் காட்டிற்குள் செல்கின்றான்... அங்கே வாதாபி என்று அரக்க சகோதரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் ரூபத்தை மாற்றக் கூடியவர்கள். (இன்றும் இது போன்ற ரூபத்தை மாற்றக்கூடிய புலையர்கள் காட்டுக்குள் இருக்கின்றார்கள்). வாதாபி சகோதரர்கள் அகஸ்தியனை விருந்தாளியாக வரவேற்கின்றார்கள்.

விருந்தாளியாக வருபவர்களுக்கு மாமிச உணவு கொடுப்பது தான் எங்களுடைய வழக்கம் என்று சொல்கிறார்கள்.

நான் மாமிசம் சாப்பிடுவது இல்லையப்பா...! என்று அகஸ்தியர் சொல்கின்றார்.

இல்லைங்க... எங்கள் ஊருக்கு யார் வந்தாலும் நாங்கள் இதைக் கொடுக்கத் தான் செய்வோம்... அது தான் எங்களுடைய வழக்கம் என்று சொல்கின்றார்கள்.

நடைமுறையில் பார்த்தோம் என்றால் எங்கள் வீட்டுக்குச் சாமி நீங்கள் வந்திருக்கிறீர்கள்... சிறிதளவு காபி சாப்பிடுங்கள் என்பார்கள். ஆனால் சர்க்கரைச் சத்தாக இருக்கும்.

எனக்கு எதிரியாகும்... வேண்டாம்...! என்று சொன்னாலும்... பாசத்தால் நான் சாப்பிட்டேன் என்றால் என்ன ஆகும்...? சர்க்கரைச் சத்து அதிகமாகும்.

அல்லது முதலில் சாப்பிட்டு வந்திருப்பேன்... இங்கே மீண்டும் குடிக்க வற்புறுத்தும் பொழுது சாப்பிட்டால் அஜீரணம் ஆகிறது அதிகமாகச் சாப்பிட்டால் என்ன ஆகும்...? தள்ளாட்டமாகும்.

“வேண்டாம்...” என்று சொன்னாலும் கூட... கொஞ்சமாவது அதைச் சாப்பிட வேண்டும் என்று அன்பால் கட்டளை இடுவார்கள். சாப்பிடவில்லை என்றால் மனவருத்தம் ஆகிறது.

“வருத்தப்படுகிறார்களே...” என்று எண்ணி நான் அதை உட்கொண்டால் என் உடல் தான் நலிவடைகின்றது.

அதே போல் கல்யாணத்திற்கு மற்ற விசேஷத்திற்கோ பத்திரிக்கை கொடுக்கப்படும் பொழுது என்ன நடக்கிறது...?

ஒரு முறை தான் வருகின்றீர்கள்... நீங்கள் கண்டிப்பாகக் காபி சாப்பிட வேண்டும் அல்லது கொஞ்சம் பலகாரத்தையாவது சாப்பிடுங்கள் என்று சொல்கின்றார்களா இல்லையா...!

நாம் அதைப் பற்றி சிந்திக்கிறோமா என்றால் இல்லை. போற்றுவதற்கு அந்த நிலையைச் செய்கிறோம்.

அதே மாதிரித் தான் அக்காலத்தில் வாதாபி என்ற அரக்க சகோதரர்கள் அகஸ்தியனைக் கட்டாயப்படுத்தி... “மாமிசம் சாப்பிட வேண்டும்” என்று சொல்கின்றார்கள்.

எங்கள் விருந்தாளிக்கு நாங்கள் செய்து தான் ஆவோம். நீங்கள் சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றார்கள்.

அகஸ்தியர் சரி என்று சொல்கிறார்... ஏனென்றால் அப்பொழுது அவர் புரிந்து கொள்கின்றார்.

வாதாபி ஆடாக மாறுகின்றான்... மற்றவன் அறுத்துச் சமைக்கின்றான் அகஸ்தியனுக்குக் கொடுக்கின்றான்.

சாப்பிட்டு முடிந்தபின் ஏ...வ்வ்வ்...! என்று அகஸ்தியன் ஏப்பம் விடுகின்றான்... ஏனென்றால் அவர் புரிந்து கொள்கின்றார். கணங்களுக்கு அதிபதியாகித் தீமைகளை அடக்கும் வல்லமை பெற்றவன் தான் அந்த அகஸ்தியன்.

அதனால் ஏ…வ்… என்று ஏப்பமிட்டபின் “வாடா வாதாபி…!” என்று தன் சகோதரனை அழைக்கின்றான்.

அவன் அப்பொழுதே ஜீரணம் ஆகிவிட்டானப்பா…! என்று அகஸ்தியர் சொல்கின்றார்.

ஆஹா அப்படியா…! உன்னை நான் இப்போது கொன்று சாப்பிடப் போகின்றேன் பார்… என்று அடுத்தவன் சொல்கின்றான். அகஸ்தியன் தன் பார்வையிலேயே அவனைச் சுட்டு பொசுக்கி விடுகின்றான்.

இராமாயணத்தில் படித்துப் பாருங்கள்… இதை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் புராணங்களில் இதை எப்படி மாற்றுகின்றார்கள் என்றால் “அகஸ்தியன் கணபதியை வணங்கிச் சென்றதால்தான்…” அரக்கனைக் கொன்றான். ஆகையினால் அந்தக் கணபதியை “வாதாபி கணபதி” என்று சொல்கின்றனர்.

அரக்க உணர்வு கொண்டு மற்றவர்களை வேதனைப்படுத்திய அந்த அரக்கனைக் கொன்றவன் அவன்…! ஆகையினால் “அந்தக் கணபதிக்கு” நீங்கள் அபிஷேகம் அர்ச்சனை செய்தால் உங்கள் பாவம் தோஷம் எல்லாம் போகும் என்று காசைக் கொடுத்து விலைக்கு வாங்கும் நிலைதான்.

யாரும் தப்பாக நினைக்காதீர்கள்…!

1.அகஸ்தியன் தீமைகளை வெல்லும் வலிமை பெற்றான்… அரக்க உணர்வுகளை அடக்கினான்.
2.திருமணமான பின்… தான் கண்ட அகண்ட அண்டத்தின் உண்மைகளை எல்லாம் மனைவிக்குப் பாய்ச்சினான் அகஸ்தியன்.
3.இருவருமே ஒருவரை ஒருவர் உயர்த்திடும் நிலையாக… மனைவி உயர வேண்டும் என்று கணவனும்
4.கணவன் உயர வேண்டும் என்று மனைவியும் அருள் உணர்வென்ற கருவை உருவாக்கச் செய்தனர்.

வசிஷ்டரும் அருந்ததி போன்று வாழ்ந்து இரு மனமும் ஒன்றாகி… இல்லற வாழ்க்கையில் இருளை அகற்றிப் பேரருள் உணர்வை உருவாக்கி… உயிரைப் போன்றே உணர்வுகளை எல்லாம் ஒளியாக்கும் தனமை பெற்றனர்.

அவருடைய உணர்வுகள் துருவ நட்சத்திரத்தில் இருந்து வந்து கொண்டேயிருக்கின்றது.
1.அந்த உணர்வை வலுவாக்கிக் கொண்டால் நம்மை அறியாமல் வரும் தீமைகளைச் சுட்டு பொசுக்குமா இல்லையா…?
2.இந்த வழியை யாரும் காட்டவே இல்லையே…!

ஆனால் இப்பொழுது நான் (ஞானகுரு) இந்த விளக்கத்தைச் சொன்னால் “சாமி ஏதோ புதிதாகச் சொல்கின்றார்… கதை விடுகிறார்…” என்று தான் நினைக்கின்றார்கள்.
1.இயற்கையின் உண்மை நிலைகளை குரு எனக்குக் காட்டினார்…
2.அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்ல முடிகிறது.




மெய் ஞானிகளின் அருள் சக்திகளைக்
கூட்டமைப்பாக இழுத்துக் கவர்ந்து...
அனைவரையும் பெறச் செய்வது தான்
யாம் சொல்லும் கூட்டுத் தியானம்

## நம் ஆன்மாவிற்குள் கொண்டு வர வேண்டிய சக்தி

வீட்டில் பெண்கள் கோலமிடுகின்றார்கள். கோலமிடும் போது புள்ளிகளை வைத்து இணைக்கப்படும் போது

1.எங்கள் குடும்பம் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும்…

2.இந்த வீட்டிற்கு வருவோர் அனைவரும் நலம் பெற வேண்டும் என்று எண்ணத்தில் உற்றுப் பார்த்து

3.இந்த உணர்வுகளை அந்தக் கோலத்திலே பதிவாக்க முடியும்.

4.ஏனென்றால் அந்தக் கோலப் பொடியிலும் மேக்னெட் உண்டு.

ஆகவே குடும்ப ஒற்றுமைக்காக உயர்ந்த எண்ணங்களை எண்ணி அருள் ஞானம் பெருக வேண்டும் நல் வாழ்க்கை வாழ வேண்டும். குடும்பத்தில் எதையெல்லாம் நல்லதாக வேண்டும் என்று எண்ணுகின்றீர்களோ அதை எல்லாம் எண்ணிக் கோலமிடலாம்.

நமக்குள் இது பதிவாகிறது… நல்ல இயக்கச் சக்தியாக மாற்றுகிறோம். நீங்கள் இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக நமக்குத் தெரிந்தவர்கள் அல்லது நண்பர்கள் நம் வீட்டுக்கு வருவார்கள். இங்கே வந்து அவருடைய கஷ்ட நஷ்டங்களை எல்லாம் சொல்ல ஆரம்பிப்பார்கள். நாம் "உம்…" கொடுத்துக் கேட்டுக் கொண்டே இருப்போம்.

எந்த இடத்தில் நின்று பேசினோமோ அந்த இடத்திலே பதிவாகிவிடும்… இருவர் உடலிலும் பதிவாகிவிடும்.

1.அடுத்தாற்போல் அந்த இடத்திற்கு மீண்டும் வந்தாலே அந்த வாசனை இயக்கி

2.உங்களை அறியாமலே "ஏதோ சங்கடமாக இருக்கின்றது…" என்ற நிலையில்

3.அந்த கவலையாகப் பேசிய அதே இடத்திலே அமர்ந்து மீண்டும் எண்ணி அதை வளர்க்கும்படி செய்யும் (பதிவு அப்படி இயக்கும்).

அதே போல ஊரிலிருக்கும் குறைகளைப் பற்றிப் பேசியிருந்தால் வேறு பாதையில் செல்ல மாட்டார்கள். ஒற்றைக்காலில் நிற்கக்கூடிய இடமாக இருந்தாலும் கூட அங்கே தான் செல்லும்படி அதை எல்லாம் கவரும்படி இந்த உணர்வு இயக்கும்.

இந்த நினைவுகள் அவ்வாறு தான் இயக்கும். அதே எண்ணத்துடன் வீட்டிற்குள் வந்தால் வீட்டிற்குள்ளும் இது வரும்.

அதாவது...
1.எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்று மனிதனுக்குள் இருக்கக்கூடிய நிலைகள் எப்படி உருமாறுகிறது...?
2.நம்மை அறியாத செயல்கள் சூட்சுமத்தில் எப்படி நடக்கிறது...?
3.இதையெல்லாம் எப்படி மாற்ற வேண்டும்...? என்பதற்குத்தான் உபதேசிக்கின்றோம்.
4.எல்லாம் நேரடியாக அனுபவித்துச் சொல்கின்றேன்... புத்தகத்தைப் பார்த்துப் படித்துச் சொல்லவில்லை.

குருநாதர் காட்டிய வழிப்படி இந்தியா முழுவதற்கும் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையிலும் சுற்றித் தெரிந்து கொண்ட பிற்பாடு தான் இதை எல்லாம் சொல்கின்றோம்.

ஒரு மனிதன் அவன் தெரிந்து தவறு செய்யவில்லை...! சந்தர்ப்பம் சூழ்நிலை தான் அவனைக் குற்றவாளியாக்குகின்றது. அதே சந்தர்ப்பம் சூழ்நிலை அவனை நோயாளியாக மாற்றுகின்றது... அதே சந்தர்ப்பம் சூழ்நிலையால் தான் குடும்பத்தில் கஷ்ட நஷ்டங்களும் வருகின்றது...!

1.இதிலிருந்து மீளும் வழி என்ன...? என்பதைத்தான் கோவிலில் வைத்து ஞானிகள் காட்டியிருக்கின்றார்கள்.
2.ஆனால் காசைக் கொடுத்து விலைக்கு வாங்கும் நிலைகளுக்கு இன்று அது மாறிப் போய்விட்டது.

இயற்கையின் உண்மை நிலைகளை நாம் நுகர்ந்தால் நமது உயிர் என்ன செய்யும்...? நாம் எண்ணியதை நமது உயிர் உருவாக்கிக் கொடுக்கும். அதற்குத் தான் அதிகாலையில் அந்த பிரார்த்தனையைச் செய்யும்படி எல்லோருமே சொல்கின்றார்கள்.

ஞானிகள் உணர்வை உங்களுக்குள் பதிவு செய்கின்றோம். அதை வளர்க்க வேண்டிய பொறுப்பு உங்களிடம் தான் இருக்கின்றது.
1.அந்த அதிகாலை நேரத்தில் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாங்கள் பெற வேண்டும்

2.எங்கள் உடல் முழுவதும் அது படர வேண்டும் என்று எண்ணி எடுத்து உங்களுக்குள் சேர்த்துக் கொள்ளுங்கள்... குளிக்க வேண்டாம்...!

ஆனால் குளித்துவிட்டு மறுபடியும் நீங்கள் ஆடைகளை அணிந்து பாருங்கள். குளித்த வியர்வை வெளியில் வரும். ஆடையை இரண்டவது தரம் நுகர்ந்து பாருங்கள். ஆடையில் நாற்றம் வரும்.

ஆனால் அதிகாலை விழித்தவுடன்... படுக்கையிலே எழுந்து அமர்ந்து
1.அல்லது படுக்கையிலேயே துருவ நட்சத்திரத்தை எண்ணி நினைவுகளை அங்கே செலுத்தித் தியானித்த பின்
2.ஐந்து நிமிடம் கழித்து உங்கள் ஆடையை நுகர்ந்து பாருங்கள்.

நல்ல வாசனையாக இருக்கும். அந்த அருள் மணங்கள் தீமைகளை அகற்றும். ஆக... ஆடையில் படிகின்றது.

இதை எல்லாம் நாம் தெளிந்து தெரிந்து
1.நம் எண்ணத்தால் உயர்ந்த சக்திகளை நம் ஆன்மாவிற்குள் கொண்டு வரக்கூடிய பழக்கத்தை அவசியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்...
2.நம் ஆன்மாவை வலுவாக்க வேண்டும்... தீமைகள் புகாது தடுக்க வேண்டும்.




**"சப்தரிஷி மண்டலம் அடையப் போகிறோம்..." என்ற இந்த உணர்வுகள் தன்னாலேயே வரும்**

நம் உடலான இந்தப் பிரபஞ்சத்தை உயிர் இயக்குகிறது. இதற்குள் எத்தனையோ கோடி அணுக்கள் இருக்கிறது.
1.அதிலே தீமை என்ற உணர்வு வளராது

2.அதே தீமையான உணர்வுகளை “ஊக்கச் சக்தியாகக் கொடுக்கும் இரையாக…” நாம் மாற்றிக் கொள்தல் வேண்டும்.

தீமை என்ற உணர்வுகளைக் குறைத்து நல்ல அணுக்களைக் கூட்டும் போது தீமையான அணுக்கள் குறைகிறது. ஆகவே நமக்குள் அந்த மகரிஷிகள் உணர்வைப் பெருக்க வேண்டும்.

இந்த உடலை விட்டு எந்த நிமிடம் நாம் போவோம் என்று சொல்லவே முடியாது. ஆகவே அந்த அருளைப் பற்றுடன் பற்றினால் இந்த வாழ்க்கையில் வரும் மற்றது அனைத்தும் பற்றற்றதாக மாறும்.

இதற்கு முன்னாடி நமக்குத் தெரியாது. தெரிந்து கொண்ட பின்
1.நாம் இந்த உடலை விட்டுச் செல்லும் போது நம் உணர்வுக்கே தெரியும்.
2.நாம் சப்தரிஷி மண்டலம் அடையப் போகிறோம் என்று…!
3.இந்த உணர்வுகள் தன்னாலேயே வரும்… “எங்கே செல்கிறோம்…” என்று நிச்சயம் தெரியும்.

காட்டிற்குள் சென்று எத்தனையோ அனுபவங்களைப் பெற்று அறிந்து கொண்டு வந்தேன். நீங்கள் எல்லோரும் அந்த உயர்ந்த சக்தியைப் பெற வேண்டும் என்று வீடு தேடி வந்து சொல்கின்றேன்.

உங்களுடன் ஒன்றித்தான் நானும் வாழ்கின்றேன். நான் பெரியவன் என்று சொல்லவில்லை. யார் பெரியவர் யார் சிறியவர் என்று சொல்ல வரவில்லை

உயர்ந்த ஞானத்தை வளர்த்துக் கொண்டால் அதுவே பேரருள் என்ற அழியாச் சொத்தாக வளர்க்க முடியும் அந்தச் சக்தியை அனைவரும் பெற வேண்டும்.

ஆகவே
1.ஒருவருக்கொருவர் அன்பை வளர்க்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்…
2.அரவணைக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்…
3.இருளை அகற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்…
4.வரும் தீமைகளை அகற்றும் வலிமை நாம் பெற வேண்டும்
5.அதையெல்லாம் வளர்த்துக் காட்டி நாம் இந்த உலகிற்கே எடுத்துக்காட்டாக வளர வேண்டும்.

நம் குருநாதர் துருவ நட்சத்திரத்துடன் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றார். அவருடைய அருளைப் பெற்று அந்தச் சக்திகளை எளிதில் பெறலாம். இருளை அகற்றி மெய்ப் பொருளைக் காணலாம்... ஒளியான நிலையை அடையலாம். அந்த நிலை பெறுவதற்குத் தான் உபதேசிக்கின்றோம்.

ஆகவே அனைவரும் பேரன்பைப் பெருகி "எல்லோருடைய மனதும் ஒன்றாகி... எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும்...!" என்ற உணர்வை வளர்ப்போம்.

1.உலகம் நலம் பெறத் தியானிப்போம்
2.உலக மக்களைக் காக்கும் உணர்வுகளை நமக்குள் விளைய வைப்போம்.
3.நம்மையும் காப்போம்... உலக மக்களையும் காப்போம்.

விஞ்ஞான அறிவினால் வரும் தீமைகளை அகற்றும் வல்லமையை நாம் பெறுவோம்.
1.உலக மக்கள் அனைவருக்கும் அருள் ஞானிகள் உணர்வைப் பதிவு செய்து
2.தீமைகள் புகாது தடுக்கும் சக்தியை... அந்தப் பாதுகாக்கும் நிலையைச் செயல்படுத்துவோம்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உயிரணுக்கள் ஆரம்பத்தில் தேடியது எந்த நிலையோ இதைப் போன்று பரிணாம வளர்ச்சியில் மனிதனாக வந்த நாம் வேதனை வெறுப்பு சங்கடம் சலிப்பு என்ற உணர்வினை நம் உடலில் சந்தர்ப்பவசத்தால் சேர்த்துக் கொண்டே வருகிறோம்.

அதை எல்லாம் நுகரப்படும் போது பல கலக்கங்களும் சிந்தனையற்ற நிலைகளும் உருவாகி இந்த உடலைக் காக்கும் செயலையே நாம் இழந்து இருக்கின்றோம்.

1.இன்று இந்த கோயிலுக்குச் சென்றால் நல்லதாகுமா...?
2.அந்தக் கோவிலுக்குச் சென்றால் நல்லதாகுமா...?
3.இந்த ஜோசியம் பார்த்தால் நல்லதாகுமா...? ஜாதகத்தை பார்த்தால் நல்லது நடக்குமா...?
4.அல்லது மந்திரத்தைச் சொன்னால் நன்றாக இருக்குமா...? என்று இதையெல்லாம் எடுத்து
5.அதைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றோமே தவிர
6."நமக்குள் உயிர் எப்படி இயங்குகின்றது...? என்று அறியாது இருக்கின்றோம்.

விஞ்ஞானம் சர்வத்தையும் மெய்ப்பிக்கும் இன்றைய காலத்தில் நம்மை அறியாமலே “பித்தனாக…” இருக்கின்றோம்.

இதைக் காட்டுவதற்குத் தான் குருநாதர் போஸ்டில் கல்லைக் கொண்டு தட்டிக் கொண்டிருப்பார்.

என்ன சாமி…! சும்மா இருக்கும் போஸ்டில் கல்லைக் கொண்டு எறிகின்றீர்களே…! என்று நான் (ஞானகுரு) கேட்டேன்.

நீ தான்டா என்ன…? என்று கேட்டாய் மற்றவர்கள் கேட்கவில்லை. ஆனால் “என்னைப் பைத்தியக்காரன்…” என்று நினைக்கின்றார்கள்.
1.ஆனால் ஒவ்வொரு மனிதனும் எதன் மீது ஆசைப்பட்டானோ அந்தப் பித்து பிடித்து…
2.அதைப் பெற வேண்டும் என்று எண்ணுகின்றான்.
3.தன் அருகிலே நல்ல பொருள் இருந்தாலும் கூட அதை எடுக்கும் வழி இல்லை.
4.தன் உடலில் நல்லது இருந்தாலும் அதை வளர்க்கும் வழி இல்லை.
5.இப்படிப் பித்தனாக அலைந்து கொண்டிருக்கின்றான்.

ஆனால் நான் போஸ்டில் தட்டும் ஓசை வெளி வருகின்றது. இந்த ஓசையைக் கேட்டு “ஏன்…” என்று நீ கேட்டாய். அதற்கு நான் விளக்கம் கொடுக்கின்றேன்.

நான் தட்டுவதைப் பார்த்து ஒருவன் “இவன் பைத்தியக்காரன்… தட்டிக் கொண்டிருக்கின்றான்…” என்று எண்ணுகின்றான். நான் தட்டும் இந்த ஓசையை அவன் கேட்டு… அவன் உணர்வுகள் பைத்தியக்காரனாக எண்ண வைக்கிறது.

என்னைப் “பைத்தியக்காரன்” என்று அவன் அவ்வாறு எண்ணும் பொழுது அவன் அதைச் சுவாசிக்கின்றான்… அவன் உயிரிலே படுகின்றது… அதை உணர்த்துகின்றது.

அவன் எதை (பைத்தியம் என்று) எண்ணினானோ அந்த உணர்வின் தன்மை அவன் உடலில் ஓடுகின்றது. அப்போது “அவன் பித்துப் பிடித்திருக்கின்றான்…” என்று அவனுக்குத் தெரியவில்லை.

ஆனால் இந்த பித்தின் நிலைகள் அவனுக்குள் விளையத் தான் செய்கின்றது.

ஏனென்றால்
1.நம் உடல் ஒரு அரங்கம்...
2.சுவாசித்த உணர்வு உயிரில் பட்டபின் அரங்கநாதன்... அந்த உணர்ச்சிகள் நம்மை அப்படி ஆளுகின்றது.

பைத்தியக்காரன் பைத்தியக்காரன் என்று அதையே எண்ணிச் சுவாசிக்கும் போது அந்த உணர்வு நம்மை ஆளத் தொடங்குகிறது... நாம் அதுவாகின்றோம். (சொல்வது அர்த்தமாகிறதல்லவா...!)

இதை ஞானிகள்... ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் அதற்குண்டான காரணப் பெயர்களை வைத்து அதை அறியச் செய்கின்றார்கள்.

என் செயலைப் பார்த்தாய்... நீ சுவாசித்தாய்... நுகர்ந்து என் அருகில் வந்தாய்...! என்ன...? என்று கேட்டாய். நான் உனக்கு விளக்கம் சொல்கின்றேன்.
1.நீ புரிந்து கொண்டாய். அப்போது தீமையிலிருந்து மீளும் உபாயத்திற்கு "உன் அறிவு இங்கே வந்தது..."
2.ஆனால் மற்றவனுடைய அறிவு... நான் என்ன செய்கிறேன்...? என்று தெரியாதபடி அவன் பித்தாக இருக்கின்றான்.

அதே சமயத்தில் "அவன் என்ன தப்பு செய்தான்...?" என்ற எண்ணத்தில் நான் வந்தால் "நான் பித்தனாகத்தான் வளர முடியும்..." அவன் பித்தன் என்று நான் எண்ணினால் நான் பித்தனாகத் தான் ஆக வேண்டும்.

நான் தட்டி எழுப்பும் இந்த ஓசையின் எதிரொலிகளைத் திரும்பிப் பார்க்கப்படும் பொழுது... ஏன்...? என்று கேட்கும் பொழுது... இந்த நிலையை நீ செய்தால் உனக்கு நல்லதாக இருக்கும் என்று நான் சொன்னால்... "அந்த உணர்வை அவன் நுகர்ந்தால் அவனுக்குள் நன்மை பயக்கும்..."

அவன் என்னைப் பித்தனாக எண்ணுகின்றான் அவன் பித்தன் என்று அவனே உணர முடியவில்லை.

1.குருநாதர் போஸ்டிலே கல்லைக் கொண்டு தட்டி அதனால் வரும் ஓசைக்கு இத்தனை வியாக்கியானங்கள் எனக்குக் கொடுக்கின்றார்.
2.மனித இயல்பில் "உயிரின் உணர்வுகள் எப்படி வருகின்றது...?" என்று...!




"என்னைப் பைத்தியக்காரன்..." என்று நினைக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொரு மனிதனும் எதன் மீது ஆசைப்பட்டானோ அந்தப் பித்து பிடித்து... அதைப் பெற வேண்டும் என்று எண்ணுகின்றான்.

தன் அருகிலே நல்ல பொருள் இருந்தாலும் கூட அதை எடுக்கும் வழி இல்லை. தன் உடலில் நல்லது இருந்தாலும் அதை வளர்க்கும் வழி இல்லை. இப்படிப் பித்தனாக அலைந்து கொண்டிருக்கின்றான்.




**பிறருடைய இருளை நமக்குச் சொந்தமாக்காமல் அருளை நமக்குச் சொந்தமாக்க வேண்டும்**

சகஜ வாழ்க்கையில் நாம் என்ன செய்கின்றோம்..? எல்லாம் நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புவோம். ஆனால் பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவுக்குச் சென்று விடுகின்றோம்.

உடல் ஆசை... பிள்ளை இப்படிச் செய்கின்றான்... அவன் இப்படி இருக்கின்றான்... கடன் வாங்கியவன் ஏமாற்றுகிறான்... பணம் தரவில்லை...! என்று நினைவுகளை எல்லாம் பலவாறு இப்படி மாற்றி விட்டால் என்ன ஆகும்...?

ஆக... இத்தகைய நிலைகளை எண்ணினால் நமது உயிர் என்ன செய்யும்...? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் தான்... பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல் "பரிபக்குவ நிலை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா..." என்று பாடுகின்றோம்.

காரணம்...
1.பிறருடைய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் நாம் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி செய்தாலும்
2.அந்த உணர்வை நாம் தூய்மைப்படுத்த வேண்டும் அல்லவா.

உதாரணமாக... கருணைக்கிழங்கு என்றாலும் அதை வேக வைத்து அதில் உள்ள விஷத்தை நீக்குகின்றோம்... காரமாக இருக்கும் மிளகாயை மற்ற பொருள்களுடன் சேர்த்துச் சுவையாக மாற்றுகின்றோம். உப்பை மற்ற பொருள்களுடன் இணைத்துச் சுவையாக மாற்றுகின்றோம்.

இதைப் போன்று... இந்த வாழ்க்கையில் தீமை என்று வந்தாலும் அந்தத் தீமை நமக்குள் வளராதபடி அருள் ஒளி என்ற உணர்வைச் சேர்த்துப் பக்குவமான நிலைகள் கொண்டு வளர வேண்டும் என்று உணர்த்தி அனைவரும் நல்ல நிலைகள் அடைய வேண்டும் என்று எண்ணினால் பிறர் குறைகளோ துன்பங்களோ நமக்குள் வராது... நமக்கு நல்லதாக மாறும்.

ஒருவன் நமக்குக் கெடுதல் செய்கின்றான் இருந்தாலும் அந்தக் கெடுதலை எண்ணாமல் ஈஸ்வரா...! என்ற உயிரை எண்ணித் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் அவனை அறியாது இயக்கும் இருளிலிருந்து விடுபட்டுப் பொருளறிந்து செயல்படும் சக்தி பெற வேண்டும் என்ற இந்த உணர்வை நமக்குள் எடுத்தால் பரிபக்குவம் ஆகின்றது.

அவன் செய்யும் கெடுதல் நமக்குள் வராது.

அவன் ஏமாற்றுகின்றான் தொல்லை கொடுக்கின்றான் நம்மைக் கேவலப்படுத்துகின்றான் என்று இதை எண்ணி எடுத்தால் அது எல்லாம் நமக்குள் விளைகின்றது.

ஆனால்
1.ஏமாற்றுபவன் உண்மையை உணர வேண்டும் அவன் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும் என்று எண்ணினால்
2.நாம் எண்ணிய இந்த அந்த உணர்வு நமக்குள் சேர்ந்து நல்ல உணர்வாக "அத்தகைய அணுவாக…" உயிர் கருத்தன்மையை அடையச் செய்கின்றது.
3.நமக்குள் பக்குவம் பெறும் தன்மையும் தீமை விளையாது தடுக்கும் நிலையும் வருகிறது.

இந்தப் பக்குவ நிலையை நாம் பெற வேண்டும்.

ஆனால் அவன் தவறு செய்கிறான் என்றால் அவன் எதை எண்ணிச் செயல்படுத்துகின்றானோ… அந்த ஈசன் வீற்றிருக்கும் உடலான ஆலயத்திற்குள் அந்த உயிர் அதை உருவாக்கி "அதையே அவனை அனுபவிக்கும்படிச் செய்யும்…"

அவன் திருந்த வேண்டும் என்று நாம் எண்ணினால் அந்த உணர்வு நமக்குள்ளாகி அவன் தீமையாக எண்ணினாலும் "நம்முடைய உணர்வுகள் அவனைத் திருந்தும் வழியாக இயக்கும்…"

திருந்தாத நிலை இருந்தாலும்
1.அந்தக் கெடுதலான உணர்வுகள் அவனுக்குத் தான் சொந்தம்,,,
2.ஆனால் நமக்கு அருள் சொந்தமாகின்றது… அவனுக்கு இருள் சொந்தமாகின்றது.

ஆகையினால் பிறர் படும் உணர்வுகளையும் அந்த இருளான உணர்வுகளை நமக்குள் விடாதபடி நாம் அந்தப் பக்குவ நிலை பெற வேண்டும்.

பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல் பரிபக்குவ நிலை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா.
1.நம் உயிரான ஈசனிடமே அந்தப் பரிபக்குவ நிலை பெற வேண்டும் என்று எண்ணி எடுத்துக் கொண்டால் அதையே உயிர் உருவாக்குகின்றது.
2.நம்மை அந்தப் பக்குவ நிலையைப் பெறச் செய்யும்.

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஒரு நோயாளியையோ ஒருவர் துன்பப்படுவதைப் பார்த்தாலோ உங்களால் தாங்க முடியவில்லை. நான் (ஞானகுரு) அத்தனை பேர் கஷ்டத்தையும் கேட்க வேண்டி இருக்கின்றது... எல்லாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டி இருக்கின்றது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

காட்டிற்குச் சென்று தவமிருந்தோ... அல்லது மந்திரங்களைச் சொல்லிச் சொல்லி ஜெபித்தோ ஆண்டவனை நான் அடையப் போகின்றேன் என்று செய்வார்கள்.

மந்திரங்களை ஜெபிக்கலாம்... அந்த உணர்வுகள் உடலில் பெருகும்... உடலை விட்டு ஆன்மா போகும். எங்கே...?
1.இதே மந்திரத்தை மீண்டும் எவன் ஜெபிக்கின்றானோ அங்கே அந்த உடலுக்குள் தான் செல்லும்.
2.சாகாக்கலையாக அந்த உடலில் விளையும்... விளைந்த பின் அவன் பெரிய மேதை ஆகி விடுவான்... ரிஷியாகக் கூட ஆகிவிடுவார்
3.எல்லாம் தெரிந்தவராகின்றார்... அவர் பிழைப்புக்குப் போக ஆரம்பிப்பார்.

என்னிடம் வந்து கஷ்டங்களை நீங்கள் சொல்கின்ற மாதிரி அய்யா... சாமி... கஷ்டமாக இருக்கின்றது என்று எல்லோரும் அவரிடம் சொல்வார்கள். அவர் அதற்குப் பக்குவம் சொல்லி... பதிலுக்கு "நான் செய்தேன்...!" என்ற புகழுக்கு ஏங்குவார்.

விஷத்தைத் தான் சேர்ப்பார்... விஷத்தின் சேமிப்புகள் அதிகமாகும்... அவர் ஆசை அந்த உடலில் பெருகும்... கடைசியில் அதனால் அவர் மடிவார்.

ஆன்மா வெளி வரும். வந்த பின் சாகாக்கலையாக மீண்டும் எந்த விஷத்தின் அளவுகோல் அந்த உடலில் அதிகமானதோ அதற்குத்தக்க உயிரினங்களாகத்தான் உயிர் பிறக்கச் செய்யும் உயிர்.

இதைத் தான் குருநாதர் எனக்குத் தெளிவாக உணர்த்தினார்.

இப்படி
1.அடுத்தவருக்கு நல்லது செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு உடலுக்குப் புகழ் தேடி வாழ்கிறோம் என்றால்
2.மனிதனுடைய ஈர்ப்புக்குள் தான் மீண்டும் வர முடியும்.

ஏன்...?

புகழுக்காக ஏங்கி அதனால் பிறர் போற்றும் நிலை வரும் போது அடுத்தவர்கள் துயரங்களை எல்லாம் கேட்டால் என்ன ஆகும்...?

வீட்டிலே தன் மனைவி பிள்ளைகளை எல்லாம் விட்டு விட்டு இவர்கள் "சாமியாராக" வெளியே வந்து விடுவார்கள். வெளியில் மற்ற இடத்திலே நல்ல வரவேற்புகள் இருக்கும்.

ஆனால் அந்தக் குடும்பத்தில் இருக்கக்கூடிய சகல கஷ்டங்களையும் இவரிடம் சொல்ல ஆரம்பிப்பார்கள்.

1.நுகர்ந்த உணர்வுகள் இவர் உயிரிலே படும்.. பட்டதும் அந்த உணர்ச்சிகள் வருகின்றது
2.வேண்டாம் என்று தடுத்தால் அங்கே கோபம் வரும்.

ஏனென்றால் "சும்மா தொல்லை கொடுக்கின்றார்கள்...!" என்று அதைக் கேட்டவுடனே "சொல்ல வேண்டாம்..." என்று இவர் சொல்வார்... மனதிற்குள் இங்கே போர் ஆகி இவருக்குக் கோபம் வரும்.

ஆனாலும் இவர் இல்லை என்று சொன்னால் மற்றவர்கள் விடுவார்களா...? என்றால் விடமாட்டார்கள்.

இங்கே எத்தனை பேர் என்னிடம் (ஞானகுரு) வந்து கஷ்டம்... கஷ்டம்... நஷ்டம்... என்னால் முடியவில்லை...! என்று அதைத்தான் சொல்கின்றார்கள்
1.எனக்கு அந்த அருள் பெற வேண்டும்
2.இருளைப் போக்கும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்று யாராவது கேட்கின்றார்களா என்றால் "சுத்தமாகக் கிடையாது..."

நானும் பலமுறை சொல்லிப் பார்த்தாகிவிட்டது...!

அவர்கள் படும் கஷ்டத்தை எல்லாம் நான் என் செவிகளில் கேட்டு அந்த உணர்வினை நான் நுகர வேண்டும்... அவர்கள் கஷ்டத்தை என் உடலில் நான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மிகப் பெரிய சக்தியை குருநாதர் வழியில் பெற்றிருந்தாலும் கூட
1.கஷ்டத்தைச் சொல்பவர் நிலைக்குத் தான் நான் செல்ல வேண்டி இருக்கின்றது
2.நான் சொல்வதை அவர்கள் பின்பற்றும் நிலை இல்லை

என் பையன் உயர்ந்த ஞானம் பெற வேண்டும்; என் பையன் ஞானியாக வேண்டும்; சிந்தித்துச் செயல்படும் திறன் பெற வேண்டும்; எங்கள் குடும்பத்தில் ஒற்றுமை வளர வேண்டும் அந்த அருள் சக்தி எங்களுக்கு வேண்டும்... என்னுடைய நிலத்தில் விவசாயம் நன்றாக நடக்க வேண்டும் நான் தொழில் செய்யும் இடங்களிலே என்னுடைய வாடிக்கையாளர் அனைவரும் மகிழ்ந்து வாழும் சக்தி பெற வேண்டும்... என்னிடம் வாங்கிச் சென்ற பணத்தை அவர்கள் திரும்பக் கொடுக்கும் சக்தி வர வேண்டும் என்று எண்ணி கேட்கின்றோமா...!
1.யாராவது ஒருவர் சொல்லுங்கள் பார்க்கலாம்
2.யாரும் நினைப்பதில்லை...!



## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

வாழ்க்கையில் கடுமையான தீமைகள் வந்தால் அவைகளை எப்படி வெல்வது..? என்பதைக் காட்டுவதற்காக... குருநாதர் எம்மைக் (ஞானகுரு) காட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

“மின்னலைப் பாருடா...!” என்றார். அதனால் அப்போது எனக்கும் அவருக்கும் சண்டை கூட வந்தது.

மின்னலைப் பார்த்து என் கண்கள் பறிபோய்விட்டால் என்ன செய்வது... நான் பிள்ளை குட்டிக்காரன்... எங்கே செல்வது...? என்று மின்னலைப் பார்க்க மறுத்தேன்.

நான் சொன்னதைச் செய்கிறேன் என்று சொன்னாய் அல்லவா... மின்னலைப் பார்...! என்று கட்டாயப்படுத்தி என்னை நிர்பந்தப்படுத்துகின்றார்.

27 நட்சத்திரங்களின் உணர்வுகள் மின்னல்களாக வந்தாலும்
1.அதை அடக்க வல்லமை பெற்ற தாவர இனங்கள் உண்டு...
2.ஆனால் அந்தத் தாவர இனங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்...?
3.அவர் கையிலே அதை வைத்திருக்கின்றார்... மின்னலைப் பாருடா...! என்று சொல்கின்றார்...
4.நான் பார்க்க மாட்டேன் என்று சொல்கின்றேன்... இரண்டு பேருக்கும் தர்க்கம் வருகிறது

நான் பார்க்கின்றேன் அல்லவா... நீ(யும்) பாருடா...! என்று மீண்டும் சொல்கின்றார். பின் நான் பார்க்கும் பொழுது கண்களை அது ஒன்றும் செய்யவில்லை குளு...குளு... என்று இருந்தது எரிச்சலோ இருளடையச் செய்யும் நிலையோ... எதுவும் இல்லை.

அந்த ஒளிக்கற்றைகள் என் உடலுக்குள் செல்கின்றது...!

அவர் கையில் வைத்திருந்த பச்சிலையைத் தான் பார்க்க முடிந்தது... மீண்டும் நான் மின்னலைப் பார்த்து எடுக்க வேண்டும் என்றால் அது மீண்டும் வேண்டும் அல்லவா...!

அப்போது தான் குருநாதர்
1.இந்த உணர்வை உனக்குள் பதிவு செய்கின்றேன்... நான் பதிவு செய்ததை

மட்டும் எடு…
2.பச்சிலையைத் தேட வேண்டும் என்று நீ அதற்குச் சென்று விடாதே…! என்று சொல்கின்றார்.

ஏனென்றால் அப்படிச் சென்றால் உடலுக்குப் பிழைப்புக்குத் தேட ஆரம்பித்து விடுவாய். ஆகவே
1.நான் சொன்ன பதிவை உணர்வாக நினைவாக எடுத்து வளர்த்து அதை அருள் ஒளியாகப் பெருக்கி
2.மற்றவர்களுக்கு இருளைப் போக்கும் உபாயத்தைக் காட்டு…! என்று சொல்கிறார்

அகஸ்தியன் எத்தனையோ கோடி மின்னல்களை அவன் நுகர்ந்தவன்… தனக்குள் பேராற்றல்களைப் பெற்றவன்.

எப்படி…?

வியாழன் கோள் தன்னுடைய உபகோள்களை வைத்து 27 நட்சத்திரங்களுடைய சக்தியைக் கவர்ந்து ஒன்றாக்கி… உணர்வின் தன்மை தனக்குள் மற்றதுடன் இணைத்து "ஒளியாகும் தன்மையாக அது எப்படிப் பெறுகின்றதோ…" அதைப் போன்ற ஆற்றலை அகஸ்தியன் பெறுகின்றான்.

இந்த உணர்வுகளை எல்லாம் அகஸ்தியன் தாய் கருவில் இருக்கும் பொழுதே பெறப்பட்டு… பல தாவர இனங்களின் சக்திகளை மணத்தால் நுகர்ந்து விஷத்தை ஒடுக்கும் தன்மையாகப் பெறுகின்றான்.
1.ஒளியின் மின் கதிர்களைத் தனக்குள் தாங்கும் சக்தியும்
2.மின் கதிர்கள் செல்லும் இடங்களை அறிந்துணரும் சக்தியும் பெறுகின்றான்.

இன்று எப்படி….
1.எலெக்ட்ரானிக் என்று நுண்ணிய அலைகள் கொண்டு ஆணையிட்டு இயந்திரங்களைத் தன்னிச்சையாக இயக்குகின்றார்களோ
2.செல்ஃபோன் கம்ப்யூட்டர் இவைகள் எல்லாம் வெகு தூரத்தில் இருக்கும் அலை வரிசைகளைக் கவர்ந்து இயங்குவது போன்று
3.அகண்ட நிலைகள் வருவதை எல்லாம் கவரக்கூடிய திறன் அகஸ்தியனுக்கு வருகின்றது
4.மின் கதிர்கள் எங்கெல்லாம் செல்கின்றதோ… எதை எதை நுகர்கின்றதோ
5.அந்த உணர்வின் அதிர்வுகளை எல்லாம் அகஸ்தியன் காண்கின்றான்.

அகஸ்தியன் பெற்றதையெல்லாம் "நீ உனக்குள் எப்படி உருவாக்கிக் கொள்ள முடியும்..." என்ற நிலையை உணர்த்தி அதை எனக்குள் வித்தாகப் பதிவு செய்தார் குருநாதர்.

உங்களுக்குள்ளும் அதை இப்போது வித்தாகப் பதிவு செய்கின்றேன்... அந்த உண்மை நிலைகளை நீங்களும் பெற முடியும்.

இதை எல்லாம் எதற்காகப் பதிவாக்குகிறேன்...? இந்த உடலுக்குப் பின் என்ன வேண்டும்...? என்பதை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குத் தான்.... அது உங்கள் அபிப்ராயம் தான்...!

குருநாதர் அனைத்தையும் எனக்குக் காட்டினார். டிவி அலைகளும் மற்ற கம்ப்யூட்டர் உணர்வலைகளும் என்னவெல்லாம் செய்யும்...? (மேலே முதலில் சொன்னபடி) என்று காட்டினார்.

டி.வி. பெட்டியில் எந்த ஸ்டேசனைத் திருப்பி வைக்கின்றோமோ வீட்டில் இருந்த இடத்திலிருந்து படத்தைக் காண முடிகின்றது இன்ன இடத்தில் இருந்து வருகின்றது என்று தெரிந்து... அதைத் திருப்பி வைத்தால் உடனே அதை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது... "எங்கிருந்தாலும் அதைக் காண முடிகின்றது..."

அதே போன்று தான்
1.நீங்கள் எங்கே... எந்த இடத்தில் இருந்தாலும்... அந்த இருந்த இடத்திலிருந்து
2.அகண்ட அண்டத்திற்கும் எண்ணத்தைப் பரப்பிய உணர்வின் ஒளிக் கற்றைகளை
3.குருநாதர் காட்டிய வழியில் உங்களுக்குள் நான் பாய்ச்சுவதை நீங்கள் எண்ணி அதை எடுக்க முடியும்.

நம்பிக்கை இருந்தால் நிச்சயம் எடுக்கலாம்...!


ஆனால் நம்மால் முடியுமா...? குருநாதர் சக்தி கொடுத்தார்... சாமி எல்லாவற்றையும் பார்த்தார்... நான் எப்படிப் பார்ப்பது...! என்று எண்ணத்திற்கு நீங்கள் செல்லக்கூடாது.


குருநாதர் பைத்தியக்காரராகத் தான் தெரிந்தார்... அகண்ட அண்டத்தில் உள்ள எல்லாவற்றையும் சொன்னார். நான் அதைப் பதிவு செய்தேன்... பார்த்தேன்... அறிந்தேன்...!

அதை எல்லோருக்கும் கிடைக்கச் செய்…! ஒவ்வொரு உயிரையும் கடவுளாக மதித்து… ஈசன் வீற்றிருக்கும் ஆலயத்தைச் சுத்தம் செய்… நீ அந்தச் சேவையைச் செய் என்றார் குருநாதர்.

அதைத்தான் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறேன். ஆனால்
1.நான் சேவை செய்ய வரும் பொழுது நீங்கள் கதவை இறுக்கி மூடிக்கொண்டால் நான் என்ன செய்ய முடியும்.
2.நீங்கள் கதவை (மனக் கதவு) மூடி கொள்கின்றீர்கள்.. நான் என்ன செய்வது…!

சற்று சிந்தித்துப் பாருங்கள்.






**"சாமி மாதிரி பெரிய சக்தி பெற்று..." உலக மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வாருங்கள்**

உதாரணமாக... வேதனை என்ற உணர்வுகளை அதிகமாக நுகர்ந்தால் நாம் செல்லும் இடங்களில் எல்லாம் சண்டை வருகிறது. தொழில் செய்யும் இடங்களில் நிம்மதி இல்லை.

ஆனால் நாம் அருள் உணர்வுகளைப் பெற்று வளர்த்தால்
1,நாம் போகும் இடமெல்லாம் அனுசரனையாக நம்மைப் பாதுகாக்கும் நிலையாக வருகின்றது.
2.துருவ நட்சத்திரத்தின் பேரருளை நாம் பெற்றோமென்றால் அதுவே "நமக்கு ஒரு பெரிய பாதுகாப்பாக…" வருகின்றது.

சந்தர்ப்பத்தால் தடைகள் வருகிறது என்றால் ஓரளவுக்கு அதிலிருந்து நம்மை மீட்டிடும் நிலையாக
1."ஏதாவது ஒரு ரிமோட் பண்ணி…" வேறு ஒரு பாதுகாப்பான இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும்
2.அதற்கு தகுந்தாற் போல் ஒளியாக மாற்றக்கூடிய சக்தி கிடைக்கும்.

ஆகவே… உங்களை நீங்கள் நம்புங்கள்.

எல்லாமே சாமி தான் என்று எண்ணுவதற்குப் பதிலாக "சாமியைப் போன்று பெரிய சக்தி பெற வேண்டும்…!" என் பேச்சால் மூச்சால் பிறருடைய நோய்கள் அகல வேண்டும் அனைவரும் நன்மை பெற வேண்டும்… என்ற உணர்வை எடுத்து வளர்த்து வாருங்கள்.

இந்த அருள் உணர்வுகள் உலகம் முழுவதற்கும் பரவும்.

உங்களைத் தெளிவாக்கி எல்லோருக்கும் அந்தச் சக்தியைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று தான் சதா தியானம் இருக்கின்றேன். அருள் வழியில் நீங்கள் தயாரானால் அனைவருக்கும் இது நல்லதாகும்.

இந்த உடல் தான்… நாம் செய்யும் தொழில் தான்… சொத்து தான்… என்று இல்லாதபடி இந்த உடலுக்குப் பின் பிறவியில்லா நிலை அடைவதே நமக்கு அழியாச் சொத்து என்பதை உணர்ந்து அதன் வழி வளர்வோம்.

1.துருவ நட்சத்திரத்தினை மறந்து விடாதீர்கள்… எந்த நிமிடமானாலும் அதனின் சக்தியை எடுங்கள்…
2.அந்த உணர்வை உங்களுக்குள் சேர்த்துப் பழகுங்கள்… எந்த இருளும் உங்களை நாடாது பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இதை நீங்கள் எண்ணுகின்றீர்களோ அதை உங்கள் உயிர் இயக்குகின்றது... அதன் வழி உங்களைக் காக்கின்றது, அதைத்தான் கீதையிலே நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய் என்று சொல்வது.

எல்லோருக்கும் நன்மையைத்தான் நான் செய்தேன்... இப்போது இப்படி ஆகிவிட்டது என்று வேதனையாக எண்ணினால் நாம் அதுவாகி விடுகின்றோம்.

ஆனால்... அருள் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்... எல்லோரும் நலமாக இருக்க வேண்டும்... அந்த அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணி எடுத்தால் நாம் அதுவாகின்றோம்.

எல்லோருடைய உணர்வுகளும் நமக்குள் கலக்கப்படும் பொழுது எல்லோரையும் காக்கும் உணர்வின் எண்ணங்கள் நமக்குள் வருகின்றது. அதை நாம் அனைவரும் இணைந்து செயல்படுத்துவோம்.

1.அருள் ஞானத்தைப் பெருக்குவோம்.... உலகத்தைக் காப்போம் என்ற நிலையில்
2.நீங்கள் குடியிருக்கும் பகுதிகளிலும் உங்கள் ஊரிலும் இந்த உணர்வுகள் நல்ல சக்தியாக மாறும்.
3.அது உங்களையும் காத்து ஊரையும் காக்கும்.
4.நீங்கள் உங்களைச் சாதாரண மனிதனாக எண்ண வேண்டாம்.
5.உலகையே காக்கும் திறன் உங்களிடமிருந்து வெளிப்பட வேண்டும்.

**ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்**

இன்றைய உலகில் நாளுக்கு நாள்... நாளுக்கு நாள்... யுத்த மேகங்கள் கூடிக்கொண்டே வருகின்றது... பயங்கர விளைவுகள் வருகிறது.
1.நாம் நப்பாசை வைத்து இந்த உடல் இச்சை தான் பெறுகின்றோம்
2.உயிர் இச்சையை யாரும் கொள்ளவே இல்லை.

உடலுக்குப் பின் உயிரோடு சேர்ந்து தான் வாழப் போகின்றோம். மீண்டும் உடல் பெறும் உணர்வுகள் பெறப்படும் பொழுது... எந்த வேதனை கொண்டு நுகர்ந்து... வாழும் இந்த உடலில் நாம் தப்ப வேண்டும் என்று எண்ணினோமோ... வேதனைகள் அதிகரித்து...
1.இந்த உடலில் இருந்து தப்பி... அடுத்து இன்னொரு வேதனைப்படும் உடலுக்குள் தான் போக வேண்டி இருக்கும்
2.உயிர் அதைத்தான் பெறச் செய்யும் என்பதை நாம் மறந்தே இருக்கின்றோம்.

அக்காலங்களில் உலகம் முழுவதற்கும் உள்ள எல்லா இடங்களிலுமே அதிகாலையில் நான்கு மணிக்கு அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெற வேண்டும் என்ற நிலையில் அந்தந்த மதங்களுக்குத் தக்க வேதங்களை ஓதி… மனித உடலில் பதியச் செய்து… அரசின் பற்றும்… நாட்டின் பற்றும் வந்தது.

இருந்தாலும் அப்படி வளர்த்துக் கொண்ட பின் அந்தந்த நாட்டின் அரசன் இறந்தால் அவன் பிள்ளைகளில் மாற்றம்.
1.பின் அதிலே பல பிரிவுகள் ஆகி ஒருத்தருக்கு ஒருத்தர் பகைமையாகி
2.முதலில் உருவான தத்துவங்களை மாற்றி அவரவருக்குத் தக்கவாறு மாற்றிக் கொண்டனர்.

இன்றைய நம் நாட்டு அரசியலில் எடுத்துக் கொண்டால் காங்கிரசிலிருந்து எத்தனை கட்சிகள் புதிதாக உருவாகி இருக்கிறது…? என்று தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கைகளை அதிலே சேர்த்து “ஆட்சியைப் பிடிக்க வேண்டும்… தான் அரசாள வேண்டும்” என்று தான் எண்ணினர்.

ஆனால் அன்று காந்திஜியின் சாந்த உணர்வுகள் அதிகரித்ததனால் தான் நம் நாடு விடுதலை அடைந்தது. அவர் வழி நடத்திய தத்துவம்
1.ஒரு மனிதனைக் கோபமாகத் தாக்குவது கோழை
2.ஆனால் நம்மைத் தாக்க வரும்பொழுது மன உறுதி கொண்டு அவருடைய நிலைகளைச் சீர்படுத்திக் காட்டுவது மன பலம்
3.”அமைதி கொண்டு நல் உணர்வை ஊட்டுவது தான் மன வலிமை” என்று தெளிவாகக் காட்டினார்.

அத்தகைய மன வலிமை கொண்டு மக்கள் அனைவரையும் ஊக்குவித்து எல்லோரும் ஒரே நிலையில் சுதந்திரம் பெற வேண்டும் என்ற உணர்ச்சியைத் தட்டியெழுப்பினார்.

இந்த உணர்வின் தன்மை கொண்டு வரும்போது பிரிட்டிஷ் ஆட்சி பணியும் தன்மை வந்தது. இலண்டன் சபையிலே காந்திஜியைப் பேசும்படியும் செய்தது… சுதந்திரத்தைக் கொடுத்தார்கள்.

உலகம் முழுவதும் அன்று பிரிட்டிஷ் ஆட்சியாக இருந்தாலும்… மக்களை அவர்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்தாலும் காந்திஜியின் சாந்த வீரியமே உலகம் முழுவதற்கும் சுதந்திரத்தைக் கொடுக்கும்படி செய்தது.

ஆனால் அந்தச் சுதந்திரம் இன்று எப்படி இருக்கின்றது...?

அன்று பிரிட்டிஷ்... அரக்க உணர்வுகள் கொண்டு மக்களை அடக்கி ஆட்சி புரிந்தான்.
1.அதே உணர்வு வளர்ந்து ஒவ்வொரு மனிதனும் மற்றதை அடக்கி ஆட்சி புரிய வேண்டும் என்ற தன்மைக்கு
2.இன்று அரசியல் அமைப்புகள் உலகெங்கிலும் வந்துவிட்டது.

நாட்டு மக்களைக் காக்க வேண்டும் என்பதற்கு மாறாக... நல்ல பண்புகளை அறியாதபடி "தான் எடுத்துக் கொண்ட கொள்கைக்கு மாறாக யார் சென்றாலும் அவனைத் தொலைக்க வேண்டும்..." என்று வந்துவிட்டது.

இப்படிக் கொள்கைகள் வித்தியாசமாகி ஒருவருக்கொருவர் உண்மையை அறியும் தன்மைகள் இழக்கப்பட்டு
1.மக்கள் மத்தியில் குழப்பங்கள் உருவாகி
2.தான் எப்படிப் பிழைக்கப் போகின்றோம்... எப்படி வாழ போகிறோம்...? என்று
3.நம் நாடு மட்டுமல்ல... உலக ரீதியிலே இந்த விஷத்தன்மைகள் பரவி
4.மனித இனத்தையே முழுமையாக அழிக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

ஆகவே உலகம் அழியும் தருணம் வரும் பொழுது இந்தப் பிரபஞ்சத்தில் அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷி துருவ நட்சத்திரமான அதன் உணர்வுகளை நாம் பெற்றால் தான் தப்ப முடியும்.

உயிர்ப் பற்றை வளர்த்தவர்கள் தான் உயிருடன் ஒன்றி அழியாத் தன்மை கொண்டு துருவ நட்சத்திரமாகவும் சப்தரிஷி மண்டலமாகவும் உள்ளார்கள்.

நமது எல்லை அது தான்...!




உலகம் அழியும் தருணம் வரும்போது இந்தப் பிரபஞ்சத்தில் அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷி ஆகித் துருவ நட்சத்திரமான அதன் உணர்வைப் பெற்றால் தான் நாம் தப்ப முடியும்.

உயிர்ப் பற்றை வளர்த்தவர்கள் தான் உயிருடன் ஒன்றி அழியாத் தன்மை கொண்டு துருவ நட்சத்திரமாக சப்தரிஷி மண்டலமாக உள்ளார்கள்.

நமது எல்லை அது தான்...!




## நம் எண்ணத்திற்குள் நம்மை அறியாமலே புகும் சில தீமைகள்

தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி "கராத்தே..." கற்றுக் கொள்வார்கள். இரண்டு தட்டுத் தட்டினால் அடுத்தவர்களை விழுத்தாட்டி விடலாம்... ஓங்கி ஒரு உதை விட்டேன் என்றால் போதும் என்பார்கள்.

ஆனால் அந்தக் கராத்தேயின் உணர்வுகள் உடலுக்குள் வந்தபின் உடல் வலுவால் தாக்கும் தன்மை வருகின்றது.
1.ஆனால் நுகர்ந்த உணர்வோ "தாக்க வேண்டும்" என்ற உணர்வுகள் உடலுக்குள் கூடிய பின் உடலில் அழுத்தங்கள் அதிகமாகும்.
2.கூடுமான வரையிலும் இதுபோன்று கராத்தே கற்றுக் கொண்டவருடைய கடைசி நிலைகள் அழுத்தமாகி ரத்த அழுத்தம் அதிகமாகும்.
3.அழுத்தம் அதிகமான பின் அவர்களால் அந்தக் கலையைச் செயல்படுத்த முடியாது.

உடல் வலிமை இருக்கும் வரை செயல்கள் இருக்கும். சிறிது காலம் எல்லாம் நன்றாக இருக்கும். இந்தக் கலையை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அவர்கள் அதைச் சீராகச் செயல்படுத்தும் பொழுது மகிழ்ச்சி வரும்... புகழ் வரும்.

ஆனாலும் அடுத்தவர்கள் குறைபாடுகளோ தவறுகளோ அல்லது பிடிக்காத செயல்களையோ செய்தால்

1.”இரு நான் உன்னைப் பார்க்கிறேன்... ” என்று வீரியத்தைத் தான் கூட்டும்...!
2.ஆனால் அவன் செய்யும் உணர்வைத் திருத்தி அமைக்கும் உணர்வு வராது.

அடித்தே திருத்த வேண்டும் என்று எண்ணம் தான் வரும். அவரை அறியாது செயல்படும் தீமைகளிலிருந்து அவர்களை விடுபடச் செய்ய வேண்டும் என்ற உணர்வு வராது.

சகஜ வாழ்க்கையில் நம்மை அறியாமலே உடல் வலுப்பெற்றாலும்
1.நம்முடைய எண்ணங்களுக்குள் தீமை வருவதை அடக்கத் தவறினால்
2.உடலுக்குள் புகுந்து நம் நல்ல குணங்களை அது அடக்கியே தீரும்.

பரிணாம வளர்ச்சியில் இந்த உணர்வுகள் கணங்களுக்கு அதிபதியாகி வேதனையுடன் வாழும் நிலையே நமக்குள் வரும். இதையெல்லாம் மாற்றுவதற்குத்தான் விநாயகர் தத்துவத்தினைக் கொடுக்கின்றார்கள்.

உடல் வலுப்பெற்றது யானை... எனவே யானை உடலைப் போட்டு விநாயகரைக் காண்பித்துள்ளார்கள். தன் எண்ண வலுவால் பாதுகாக்கும் உணர்வு கொண்டு வளர்ந்தது.
1.அதாவது உடல் வலிமை கொண்டு தான் தன்னைப் பாதுகாக்கும் நிலை வந்தது.
2.அதன் வழி மனித உடலைப் பெற்றோம் என்பதற்குத்தான் யானையைப் போட்டுக் காண்பித்தார்கள்.

அவ்வாறு வளர்ந்த நாம்... மனிதனான பின் எண்ண வலு பெற்றவர்கள். நம் எண்ணத்தைக் கொண்டு எதை வேண்டுமென்றாலும் சாதிக்கலாம்.

ஆறாவது அறிவு கொண்டு பல கோடித் தீமைகளை அறிந்தாலும்... சிந்தித்து அதிலிருந்து விடுபட்டு “நல்லதைப் பெற வேண்டும் என்று விரும்பினால்...” அதன் வழி நுகர்ந்து தீமைகளை அகற்றும் வலிமையும் வருகின்றது.

சில மருத்துவர்கள் நோய்களைப் போக்கப் புதிதாக மருந்து கண்டுபிடிப்பார்கள். நோயை நீக்கி பேரும் புகழும் பெற்றுச் சம்பாதித்து விடலாம் என்று செயல்படுத்துகின்றார்கள். சம்பாரித்த பின் அதிலே சந்தோசமும் படுகின்றார்கள்.

இருந்தாலும் குடும்ப வாழ்க்கை என்று வரும் பொழுது தன்னுடைய பையனைச் சரியாக வளர்க்கவில்லை என்றால்... அவன் தவறுகள் செய்வான்... கண்டபடி பணத்தைச் செலவழிப்பான்.

இவரோ சிரமப்பட்டு மருந்தைக் கண்டுபிடித்துச் சம்பாதித்து வைத்திருப்பார்கள். ஆனால் பையனோ வளர்ப்பின் நிலைகள் கொண்டு சேர்க்கையின் காரணமாக சில தாறுமாறான செயல்களைச் செயல்படுத்துவார்.

இந்த மருத்துவர் மற்றவர் நோய்களை எல்லாம் நீக்குவார்.
1.சம்பாதித்த காசைத் தேவை இல்லாமல் பையன் செலவழிக்கிறான் என்றால்
2."கஷ்டப்பட்டுச் சாம்பாரித்தேன்... இப்படிச் செய்கிறானே..." என்று எண்ணி வேதனைப்படுவார்.

ஆனால் பையனுடைய தாயோ பாசமாக இருக்கும் நிலையில்... பையனை ஏன் சீறிப் பாய்கின்றீர்கள்...? நல்ல வார்த்தையைச் சொல்லுங்கள்...! என்று கணவனிடம் சொல்லும்.

நீ இப்படிப் பேசிப் பேசித்தான் அவனைக் கெடுத்து விட்டாய்...! என்று இந்த உணர்வின் வேகம் பையனின் தாயாரையும் திட்டும்படி செய்யும்.

தாய்ப் பாசம் கொண்டு கொஞ்சம் பொறுமையாகச் சொல்லுங்கள் என்று தாய் ஞாபகப்படுத்தும். "எல்லாம் உன்னால் தான் அவன் கெடுகின்றான்..." என்ற நிலை வந்துவிடும்.

1.எப்படிப் பார்த்தாலும் இந்த உணர்வுகள் நம்மை மாற்றிக் கொண்டே உள்ளது.
2.அதை அடக்கக்கூடிய சக்தி தெரிந்தும் நாம் அதை விட்டு விடுகின்றோம்.

நாம் அதைச் சீராகச் செயல்படுத்த வேண்டுமல்லவா...?

## ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

1.ஒவ்வொரு நாளும் உபதேச வாயிலாகத் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உங்களுக்குள் பதிவு செய்து
2.ஒவ்வொரு உணர்வுக்குள்ளும் இணைத்துக் கொடுக்கப்படும் பொழுது இதுவே தியானமாகிறது.

அதன் வழி உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிந்து செயல்படும் அருள் ஞான சக்தி கிடைக்கும்.

ஒரு இயந்திரத்தைச் சீராக இயக்குவதற்கு விஞ்ஞான அறிவுப்படி எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்ற அமைப்பை அதனுடன் இணைத்து வைக்கின்றார்கள்.

இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கும் சமயம்... ஒன்று அழுத்தம் அதிகமாகி விட்டால் உடனே மோதி அதை மாற்றி அமைத்து இயந்திரத்தைச் சீராக்குகின்றது.

அதே போன்று தான் எலக்ட்ரானிக் என்ற ஞானிகள் உணர்வின் பவரைச் உங்களுக்குள் செருகேற்றுகின்றோம்.
1.எதிர் நிலையான உணர்வு தாக்கப்படும் பொழுது உடனே அதை விலக்கி
2.உங்களைச் சிந்தித்து செயல்படுத்தும் தன்மைக்கு அது இயக்கிக் காட்டும்...!

விஞ்ஞானிகள் இன்று நிரூபிக்கின்றார்கள். கெமிக்கல் கலந்ததில் ஒரு காந்தப்புலன் அறிவை இணைத்து அதனுடைய சுருதிகளைத் தட்டி எழுப்பப்படும் (KEY BOARD) பொழுது அந்த உணர்வுகள் இயக்குகின்றது.

அதே போன்று மனிதனுக்குள்ளும் எலக்ட்ரானிக்...! ஒவ்வொரு புலனறிவுக்குள்ளும் எலக்ட்ரானிக் என்ற இந்த உணர்வின் அறிவாகும் பொழுது
1.அவன் எண்ணிய உணர்வு அதிர்வாகி இவன் எண்ணியபடி கண்களால் பார்க்கின்றான்.
2.ஒரு உருவத்தின் தன்மை "இன்னது இப்படித்தான் இருக்கும்..." என்ற நிலையை எலக்ட்ரானிக்... எண்ணங்களை எண்ணும் பொழுது
3.அதற்குத்தக்க அந்த உருவத்தையே கம்ப்யூட்டர் போட்டுக் காட்டுகின்றது
4.எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்று அதிர்வாக்கும் போது அதிலே பூசிய "கெமிக்கல்" அதைக் காட்டுகின்றது.

உண்மையின் உணர்வின் தன்மை அளவுகோலின்படி இவன் எடுக்கப்படும் பொழுது "மனிதனுடைய சிந்திக்கும் சக்தி"
1.எலக்ட்ரான் என்ற முறைப்படி அவன் எண்ணும் கூர்மை இதைக் கவர்ந்து
2.தட்டெழுத்தால் அடிக்கச் செய்த பின் (KEY BOARD) ஆணைகளாக அதற்குள் பதிந்து சில தத்துவங்களைக் கொண்டு வருகின்றது.
3.கம்ப்யூட்டருக்குள் இருக்கக்கூடிய எலக்ட்ரானிக் இயக்கம்... அதிலே பதிவான கெமிக்கல் தான்.

இதைப் போன்று தான்
1.பல கோடி உடல்களில் நாம் சேர்த்துக் கொண்ட சத்துக்கள் "ஊழ்வினையாக..." எலும்புகளுக்குள் (இந்த கெமிக்கல்) உண்டு
2.ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்து உணர்வைப் பதிவாக்கிக் கொண்டே வருகிறோம்

3.பதிவான உணர்வின் தன்மைகளை மீண்டும் எலக்ட்ரானிக்காக மாற்றி அதன் உணர்வின் இயக்கமாக நாம் இயங்கி வருகின்றோம்.

இதை எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் புலஸ்தியன் வம்சத்தில் வந்த மெய் ஞானி அகஸ்தியன்... "அவன் கண்ட புலனின் இயக்கத்தை" (எலெக்ட்ரிக் எலெக்ட்ரானிக்)... அவன் அருள் பெற்று நாமும் அதை அறிவோம்.
1.அகஸ்தியனுடைய அருள் சக்திகளைப் பெறுவோம்
2.இருளை அகற்றிப் பேரருள் பேரொளியாக நாம் மாறுவோம்.
3.அகண்ட அண்டத்தையும் அறியும் பேராற்றல் பெறுவோம்
4.உலகைக் காத்திடும் மெய் ஞானியாக வாழ்ந்து வளர்வோம்.

நம்மால் நிச்சயம் முடியும்...!




https://eswarayagurudevar.com/